
TG140

# இலக்கிய நயம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 10






தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# இலக்கிய நயம்

## தரம் - 10

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2007

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**இலக்கிய நயம் - தரம் 10**

முதற்பதிப்பு - 2007
மீள்பதிப்பு - 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
“நனிலா பப்லிகேஷன் (பிரைவேட்) லிமிட்டடினால”
அச்சிடப்பட்டு வெளியிடபட்டது.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

12-11-2009

## வழிகாட்டல்

பேராசிரியர் ஜே. டபிள்யூ. விக்ரமசிங்க
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

திரு. விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## ஆலோசனை

| | | |
|---|---|---|
| பேராசிரியர் .எஸ். தில்லைநாதன் | - | தகைசார் ஓய்வுநிலை பேராசிரியர் |
| பேராசிரியர் . ஏ. சண்முகதாஸ் | - | தகைசார் ஓய்வுநிலை பேராசிரியர் |
| திரு. ரி. இராஜேந்திரம் | - | திறந்த பல்கலைக்கழகம் |
| கலாநிதி. எஸ். யோகராஜா | - | கிழக்குப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி . வி. மகேஸ்வரன் | - | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| திரு.கே. இரகுபரன் | - | தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |
| திரு.எம்.ஏ.எம். ரமீஸ் | - | தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |

## திட்டமிடலும் இணைப்பும்

| | | |
|---|---|---|
| திரு. உ. நவரத்தினம் | - | பணிப்பாளர், தமிழ்மொழித் துறை |
| செல்வி. பு. நா லிங்கம் | - | பிரதம செயற்றிட்ட அதிகாரி |
| திருமதி. ஞா.சித்ரரஞ்சன் | - | செயற்றிட்ட அதிகாரி |
| திருமதி.வா.காண்டீபன் | - | செயற்றிட்ட அதிகாரி |
| திரு.எம்.எல்.எம் இர்ஷாட் | - | செயற்றிட்ட அதிகாரி |
| செல்வி.சு. சகிர்தமலர் | - | உதவி செயற்றிட்ட அதிகாரி |

## எழுத்தாளர் குழு

| | | |
|---|---|---|
| திருமதி.எஸ்.நாகராஜா | - | ஆசிரிய ஆலோசகர், புத்தளம் |
| திரு.கே.எம்.ஏ.சமது | - | ஆசிரியர், மின்ஹாஜ் ம.வி, யட்டவத்த |
| திருமதி.ரி.காந்தரூபி | - | ஆசிரியர், விஜயரத்தினம் இ.ம.க., நீர்கொழும்பு |
| திரு.கே.குணசேகரம் | - | ஆசிரிய ஆலோசகர், மட்டக்களப்பு |
| செல்வி.வி.செல்வநாயகம் | - | ஆசிரியர், முஸ்லிம் ம. க. கொழும்பு |
| திருமதி.கே.சண்முகநாதன் | - | ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, மட்டக்களப்பு |

**கணினிப் பதிப்பு** :- செல்வி.சுபாஷினி ஸ்ரீதரன்

அட்டைப்படம் : திரு. எஸ். சச்சிதானந்தன்
திரு. கே. இரகுபரன்

## உள்ளடக்கம்

பக்கம்

முன்னுரை 01

பகுதி I விரிவான பாடத்திட்டம்

1. அறிமுகம் ........ 05
2. பாடத்தின் நோக்கங்கள் ........ 06
3. பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டமும் ........ 07
   விரிவான பாடத்திட்டம் ........ 09

பகுதி II கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

1. அறிமுகம் ........ 17
2. தர உள்ளீடுகள் ........ 20
3. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ........ 21

பகுதி III கணிப்பீடும் மதிப்பீடும்

1. அறிமுகம் ........ 135
2. கணிப்பீட்டுக் கருவிகள் ........ 137

# முன்னுரை

தேசிய கல்வி நிறுவகத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

* விரிவாக்கப்பட்ட பாடத்திட்டம்
* செயற்பாட்டுத் தொடரகம்
* கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

இப்பாடத்திட்டமானது, விடயத் தலைப்புகள், உபதலைப்புகள் என்பவற்றுக்கு மேலதிகமாக ஆசிரியர் பங்களிப்புக்குள் எடுக்கக்கூடிய பல்வேறு தீர்மானங்களை ஆசிரியர்களுக்கு விளக்கும் பயனுடைய ஒரு ஆவணமாகும்.

பாடச் சீர்திருத்தங்களுக்குரிய காரணிகளையும் பாட நோக்கங்களையும் அறிமுகஞ் செய்து ஆரம்பிக்கும் இவ்வேட்டில் பாடம் தொடர்பான தேர்ச்சிகளும், தேர்ச்சிஅலகுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி அலகுகள் தொடர்பான பாட உள்ளடக்கம் இங்கு குறிப்பிடப்பட்டிருத்தல் இவ்வேட்டின் சிறப்பியல்பாகும். இப்பாட உள்ளடக்கத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் நுட்பங்களைக் கருத்திற் கொண்டு, அதற்கு எடுக்கும் நேரத்தைத் தீர்மானித்திருப்பது இப்பகுதியின் இன்னுமொரு சிறப்பியல்பாகும்.

இவ்விரிவான பாடத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் தரத்தை பாதுகாக்கும் நோக்கிலே முன்வைக்கப்பட வேண்டிய தரஉள்ளீடுகள் தொடர்பாக தெளிவான விளக்கமொன்றை ஆசிரியர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு முனைந்துள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு உதவும் பொருட்களை ஏற்கனவே கேட்டு, உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது. பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.

***"பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும்"*** என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை ஒப்படைக்கும்போது, பாடவிதானச் செயற்பாடுகளைச் செயற்படுத்தும்போது, ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போது, உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபடுபவர்களுக்கு இது தேவையான விளக்கங்களையளிக்கின்றது.

ஆசிரியர் பங்களிப்பிலே தெளிவான மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் விதமாக சீர்திருத்தப்பட்ட பாடத்திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்வதற்கு தேசிய கல்வி நிறுவகம், ஆசிரியருக்கு தேவையான உதவிகளை கூடியளவில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் பாடத்திட்டத்தை அமுலாக்குவதற்கு உரிய செயற்பாட்டுத் தொடரகத்தை அறிமுகஞ் செய்திருப்பது இதன் இன்னுமொரு சிறப்பம்சமாகும். இச்செயற்பாடுகளைஅவ்வாறே ஆசிரியர்கள் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. தனது ஆக்கபூர்வமான, ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனையாற்றல்களுக்கும் ஏற்ப செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணமாக மூன்று குழுக்களை அமைக்க வேண்டும் என கூறியிருப்பினும் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதை மாற்றஞ் செய்து கொள்வதற்கு ஆசிரியருக்கு முடியும். சிறிய வகுப்புகளில் குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும்போது, ஆசிரியர்கள் சாதுரியமாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

உரிய தேர்ச்சி மட்டம் நிறைவு பெறும் விதமாக செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. 40 நிமிட பாடவேளைக்கு அப்பால் செல்வதற்கு ஆசிரியருக்கு நேரிடலாம். ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தந்தச் செயற்பாடுகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோடு நேரசூசியில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பாடவேளை, இரு பாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளை பகுதிகளாகச் செய்து நிறைவு செய்து கொள்ளவேண்டியது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை மேலும் தொடர்ந்து அடுத்த நாளும் செய்யும்போது முதல் நாள் நிறைவு செய்தவற்றை மேலும் அறிமுகஞ் செய்து தொடர வேண்டும் என்பது உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. வகுப்பறையில் நிலவும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களின்போது 40 நிமிட, 80 நிமிட நேரத்திற்கு உங்களால் கவனமாகத் திட்டமிடப்பட்ட திட்டங்களும் கூட நிறைவேற்றிக் கொள்வது அரிதானது என்பது இரகசியமல்ல.

யாதேனுமொரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என உங்களிடம் ஒருபோதும் எதிர்பார்க்கப்படமாட்டாது. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி சிறந்த கற்பித்தல் ஒன்றையே நாம் உங்களிடம் எதிர் பார்க்கின்றோம்.

புதுவிடயங்களை அறிமுகப்படுத்தும்போது நீங்கள் செயலிழப்பதை தவிர்ப்பதற்காக உங்களுக்கு வேண்டிய கையேட்டை வழங்குவதை மட்டும் தேசிய கல்வி நிறுவகம் செய்துள்ளது. ஆசிரியர் பங்களிப்பிலே சிறந்ததொரு மாற்றத்தை நாடுபூராவும் ஆசிரியர்களிடம் ஏற்படுத்துவதற்கு இவ்வேடு பெருந்துணை புரியும் என்பது எமது நம்பிக்கையாகும். அவ்வாறே இச்செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று புத்தாக்கங்களில் ஈடுபடும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பரிசளிப்பு முறை ஒன்றையும் அறிமுகஞ் செய்வதற்கும் நாம் எதிர் பார்க்கின்றோம். அப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, உங்களால் திட்டமிடப்படும் செயற்பாடுகளை, உதவிப் பணிப்பாளர் நாயகம் (பாடத்திட்ட அபிவிருத்தி) தேசிய கல்வி நிறுவகம், மகரகம எனும் முகவரிக்கு அனுப்பி வைப்பதாகும். அவ்வப் பாடக் குழுக்களினூடாக அச் செயற்பாடுகள் பரிசீலனை செயற்பட்டு பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மூன்றாம் பகுதியில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உதவும் உபகரணத் தொகுதிகள் அடங்குகின்றன. செயற்பாட்டுத தொகுதி ஒன்றை மையமாகக் கொண்டு வழங்கப்படும் இவ்வுபகரணங்கள் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ச்சியாக மாணவர்கள் கற்பதற்கு துணை புரியும். அவ்வுபகரணங்களைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலைப் பரிசீலனை செய்து உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்கள் பணியாகும். இம்மீளவலியுறுத்தல்கள் விருப்பமுள்ள கற்றல் அனுபவங்களை பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்குத் துணை புரியும். கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. பொதுப் பரீட்சைகளில் கல்வி மட்டங்களுக்கு ஏற்ப முன்மாதிரி வினாக்களின் தன்மையை அறிமுகஞ் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் முயற்சிப்பது அதனாலாகும். இதன் பரீட்சை வினாக்களின் தன்மை தொடர்பாக எதிர்பார்க்கும் மாற்றத்தை விளங்கிக் கொள்ளும் நீங்கள் வழமையான முறையிலிருந்து விடுபட்டு, மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

***கலாநிதி I. L. கினிகே***
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்

# பகுதி - I

# விரிவான பாடத்திட்டம்

## தரம் - 10

# இலக்கிய நயம்

## தரம் 10

## 01. அறிமுகம்

10 ஆம் 11ஆம் தர மாணவர்கள் தமிழ் இலக்கியத்தைக் கற்பதற்கும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் விருப்பத்துக்குரிய ஒரு பாடமாகத் தெரிவு செய்வதற்கும் ஏற்றவகையில், கற்றல் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பொதுத் தகைமைகளுக்கும் அமைவாக இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தில் உள்ள செய்யுள், உரைநடைப் பகுதிகள் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டும் நோக்கத்துடன் அவர்களின் வயது, விருப்பு, இரசனை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் முதலில் தற்காலக் கவிதைகளும் தொடர்ந்து பழந்தமிழ்ச் செய்யுள் இலக்கியங்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

தரமான இலக்கியங்களை மேலும் தேடிக் கற்கும் ஆர்வத்தை மாணவர்கள் மத்தியில் தூண்டவும், இரசனைத் திறனை வளர்க்கவும் இலக்கியங்களின் வாயிலாக விழுமியங்கள், படிப்பினைகளை அறிந்து பின்பற்றவும் இவ்விலக்கியத் தொகுப்பு வழியமைக்கும்.

உரைநடை, செய்யுள் இலக்கியங்களைக் கற்பதனூடாக மாணவர்கள் மொழித்திறன்களையும் மொழிவளத்தையும் விருத்தி செய்து கொள்வதுடன் பல்வேறுபட்ட ஆக்கங்களை விமர்சிக்கும் திறனையும் படைக்கும் திறனையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 02. பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- இலக்கியம் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தல்.
- இலக்கியத்தை நயந்து, அவற்றை வெளிப்படுத்தும் திறனை வளர்த்தல்.
- மொழித்திறனையும் மொழிவளத்தையும் விருத்தி செய்தல்.
- இலக்கியங்களை விமர்சிக்கும் ஆற்றலை வளர்த்தல்.
- தமிழிலக்கிய சிந்தனைப் பாரம்பரியத்தின் வெளிப்பாட்டு முறைமைகளையும் பரப்பையும் அறிமுகம் செய்தல்.

## 03. பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டமும்

பாடசாலை முகாமைத்துவக் குழுவினர், பாடத்திட்டத்திலுள்ள நோக்கங்கள், தேர்ச்சிகள் என்பவற்றை வாசித்தறிதல் மிகவும் முக்கியமான ஒரு பணியாகும். தமிழ் இலக்கியத்தைக் கற்றல் - கற்பித்தல் தொடர்பான பாடசாலைக் கொள்கையை உருவாக்கவும் அக்கொள்கையை நிறைவேற்றவும் நோக்கங்களும், தேர்ச்சிகளும் உதவியாக அமையக்கூடியன.

பாடசாலையில் பாடத்திட்டத்தை அமுலாக்கும்போது மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை மனதிற்கொண்டு மாணவர்களின் தேவையை ஈடுசெய்யவும் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்க்கவும் பொருத்தமான முறையில் கொள்கை உருவாக்கமும் நிகழ்ச்சித் திட்டமும் அமைய வேண்டும்.

அவற்றிற்கான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

### அ. கொள்கையை உருவாக்குதல்

1. பாடசாலையிலுள்ள தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாவரும் மொழியாசிரியர் என்ற நோக்கில் செயற்பட வழிசெய்தல்.

2. தமிழ் கற்றல் - கற்பித்தல் தொடர்பான கொள்கையை அமுலாக்குவதற்கு நடவடிக்கைக் குழுவொன்றை அமைத்தல்.

3. சமூக, கலாசார மரபுகளையும் விழுமியங்களையும் அறிந்து தொடர்ந்து பேணுவதற்கு வழிசெய்தல்.

4. பாடசாலையைச் சூழவுள்ள பிரதேசத்திலுள்ள தமிழ்மொழி சார் வளங்களை மாணவர்களின் மொழி விருத்திக்காக உச்ச அளவில் பயன்படுத்துதல்.

## ஆ. அமுலாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

01. இலக்கிய மன்றங்கள் போன்ற மாணவர் மன்றங்களை வகுப்புரீதியாக அமைத்து மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்க உதவுதல்.

02. பாடசாலை மட்டத்தில் விவாதம், கவியரங்கு, பட்டிமன்றம், இலக்கியப்போட்டி, பொது அறிவுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்.

03. பெரியார்களை அழைத்து இலக்கியச் சொற்பொழிவுகளை நடத்துதல்.

04. நூல் நிலையங்களில் மொழி இலக்கியம் சார்ந்த நூல்களை களஞ்சியப்படுத்தல். வாசித்த இலக்கிய நூல்களில் இருந்து பெற்ற விடயங்களை கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்தல்.

05. ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலே சிறுகதை, நாடகம், கவிதை போன்றவற்றை எழுதுவதற்குப் போட்டிகளை நடத்துதல்; சுவரொட்டிகள், விளம்பரங்கள் என்பன எழுதுவதற்கான போட்டிகளை நடத்துதல்.

06. பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய கூத்துகள், நாடகங்கள் போன்ற சிறப்பான கலையம்சங்களையறிந்து அவற்றைப் பாடசாலை மன்றங்களின் ஊடாக மேடையேற்றுவதன் மூலம் பிரதேசக் கலைப்பாரம்பரியங்களை வளர்க்க வழிசெய்தல்.

07. கலைவிழாக்களை ஒழுங்குசெய்தல், பங்குபற்றுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

# இலக்கிய நயம்

# விரிவான பாடத்திட்டம்

# தரம் - 10

# இலக்கிய நயம் (விருப்புக்குரிய பாடம்)
## பாடத்திட்டம் / தரம் - 10

| தேர்ச்சி, தேர்ச்சி அலகுகள், உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|
| 1. இலக்கியங்களை வாசித்து நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார். | |
| 1.1 பாடப் பகுதிகளை ஈடுபாட்டுடன் வாசிப்பார்.<br>- உரைநடை<br>- செய்யுள்/கவிதை | 04 |
| 1.2 படைப்புகள் மூலமாகத் தன்னையும் தனது குடும்பத்தையும் தான்சார்ந்த சமூகத்தையும் தான் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.<br>- தனிமனித இயல்புகள்<br>- குடும்ப உறவும் சிக்கலும்<br>- சமூக ஊடாட்டம்<br>- உலகப்போக்கு | 06 |
| 1.3 படைப்புக்களை நயந்து அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்<br>- அனுபவப் பகிர்வு<br>- இரசனை<br>- தனியாள், சமூக விமர்சனம்<br>- சமூக சீர்திருத்தம் | 05 |
| 1.4 விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.<br>- இலக்கியம் கூற முனையும் கருத்துக்கள்<br>- தனியாள், குடும்பம், சமூகம்<br>- கையாளப்பட்ட உத்திகள்<br>- பாத்திரங்கள் பற்றிய கருத்துக்கள்<br>- மொழிப்பிரயோகம்/மொழிநடை | 05 |
| 2. இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார். | |
| 2.1 பாடப் பகுதிகளினூடாகப் பெற்ற மொழியாற்றலைப் பிரயோகிப்பார்.<br>- இலக்கியங்கள் | 05 |
| 2.2 படைப்புகளின் மொழியாட்சி பற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.<br>- செய்யுள் நடை/வசனநடை<br>- இலக்கியவழக்கு, பேச்சுவழக்கு<br>- பேச்சோசை | |
| 2.3 பாடப்பரப்பைக் கிரகித்து விடையளிப்பார்.<br>- பிரதான கருத்து<br>- துணைக்கருத்துகள்<br>- சொல்லாட்சிகள்<br>- பாத்திர இயல்புகள்<br>- உத்திகள்<br>- அரும்பதங்கள்<br>- விழுமியக் கருத்துக்கள்/படிப்பினைகள் | 10 |

| | | பாட வேளை |
|---|---|---|
| 3. | பல்வேறுபட்ட படைப்புகளை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த இலக்கியங்களைப் படைப்பார். | |
| 3.1 | பல்வேறு வகைப்பட்ட படைப்புகளை ஆர்வத்துடன் வாசிப்பார்.<br>(உரைநடை, செய்யுள், கவிதை...) | 04 |
| 3.2 | படைப்புகள் குறித்து சிந்தித்து, கலந்துரையாடி, தமது ஆர்வத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்புடைய வேறுபட்ட ஆக்கங்களைப் படைப்பார்.<br>- உரைநடை<br>- கவிதை<br>- செய்யுள் | 06 |
| 4. | இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார். | |
| 4.1 | இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்<br>- அறக்கருத்துக்கள்<br>- படிப்பினைகள், மானுட விழுமியங்கள்<br>- நகைச்சுவை உணர்வு<br>- வாழ்வியல் அம்சங்கள் | 05 |
| 4.2 | இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுமாற்றை விளக்குவார்.<br>- மானுடநேயம்<br>- நீதி உணர்வு<br>- புரிந்துணர்வு<br>- பொறுப்புணர்வு | 05 |

## செய்யுள்கள் / கவிதைகள்

| | | |
|---|---|---|
| • அப்துல் ரகுமான் | : | கோளுரை |
| • சோ. பத்மநாதன் | : | சின்னமகள் |
| • அன்பு முகையதீன் | : | பூத்துக் கிடக்கும் காடு |
| • நீலாவணன் | : | போதியோ பொன்னியம்மா |
| • மஹாகவி | : | நீருழவன் |
| • கே.சி.எஸ். அருணாசலம் | : | வெற்றிப்பயணம் |
| • கவிமணி | : | புல் |
| • பாரதிதாசன் | : | தமிழின் இனிமை |
| • பாரதியார் | : | சின்னஞ்சிறு கிளியே<br>காலைப்பொழுது<br>தமிழ் |
| • சோமசுந்தரப்புலவர் | : | செந்தமிழ்த் தாய் ( முதல் 05 பாடல்கள்) |
| • நாட்டார் பாடல்கள் (02) | | ‘‘ அணில்கோதா மாம்பழமே”<br>‘‘ மழை வடக்கே பேய வரும்...” |
| • சின்னத்தம்பிப் புலவர் | : | பறாளை விநாயகர் பள்ளு (இருபாடல்கள்)<br>‘‘மஞ்சளாவிய மாடங்கள்”<br>‘‘அருவி யோதை” |
| • தனிப்பாடற்றிரட்டு | : | கம்பர் - ‘‘தேருளைப்புரவி...”<br>காளமேகம் - ‘‘வாரிக் களத்தடிக்கும்”<br>‘‘ஆடிக் குடத்தடையும்” |
| • நந்திக்கலம்பகம் (01) | | ‘‘வானுறு மதியை அடைந்த” |
| • கம்பராமாயணம் | : | கையடைப்படலம் |
| • நளவெண்பா (05 பாடல்கள்) | | ‘‘கொம்பர் இளங்குருகே”<br>‘‘புன்னகை நறுந்தாது”<br>‘‘காதலியைக் காரிருளிற்”<br>‘‘பானலே சோலை”<br>‘‘போவாய் வருவாய்” |
| • மணிமேகலை (01) | | ‘‘ஆற்றுநர்க்கு அளிப்போர்” |
| • திருக்குறள் | : | ஒழுக்கமுடைமை, நட்பு |
| • குறுந்தொகை (01) | | ‘‘அகவன் மகளே” |
| • புறநானூறு (02) | | ‘‘நாடா கொன்றோ”<br>‘‘களம்புக லோம்புமின்” |

## கட்டுரைகள்

- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை : ''இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்''
- எஸ். வையாபுரிப்பிள்ளை : ''மொழியின் அதியற்புத இயல்பு''
- ஜே.எம்.எம். அப்துல் காதிர் : ''நோக்கியும் நோக்காதும் போல்''
- மு. வரதராசன் : ''நம்பிக்கை''
- ரா.பி. சேதுப்பிள்ளை : ''காளத்தி வேடனும் கங்கை வேடனும்''
- சு. வித்தியானந்தன் : ''நாவலர் இருவர்''
- ''நாட்டார் பாடல்களில் அழகியல் அம்சங்கள்''

## சிறுகதைகள்

- புதுமைப்பித்தன் ''காலனும் கிழவியும்''
- டாக்டர் நந்தி ''சிங்களத்து மருத்துவிச்சி''
- வ.அ. இராசரத்தினம் ''தோணி''
- என்.எஸ்.எம். ராமையா ''வேட்கை''
- மொப்பஸான் (மொழிபெயர்ப்பு - புதுமைப்பித்தன்) ''பைத்தியக்காரி''

## நாடகம்

- நீலாவணன் - ''மழைக்கை'' (பாநாடகம்)

## இலக்கிய நயம்
## தரம் 10, தரம் 11

பொருளடக்கம்


01. நம்பிக்கை
02. சின்ன மகள்
03. பூத்துக்கிடக்கும் காடு
04. வேட்கை
05. போதியோ பொன்னியம்மா
06. வெற்றிப்பயணம்
07. காளத்திவேடனும் கங்கைவேடனும்
08. தமிழின் இனிமை
09. கண்ணம்மா என் குழந்தை
10. காலனும் கிழவியும்
11. தமிழ்
12. செந்தமிழ்த்தாய்
13. நாட்டார் பாடல்
14. தோணி
15. தனிப்பாடற்றிரட்டு - காளமேகப் புலவரின் இரு பாடல்கள்
16. கையடைப்படலம் பகுதி I
17. நாட்டார் பாடல்களில் அழகியல் அம்சங்கள்
18. நளவெண்பா
19. திருக்குறள் - நட்பு
20. குறுந்தொகை
21. புறநானூறு
22. மழைக்கை

23. கோளுரை
24. நோக்கியும் நோக்காதும் போல்
25. நீருழவன்
26. புல்
27. சிங்களத்து மருத்துவிச்சி
28. காலைப்பொழுது
29. நாட்டார் பாடல்
30. இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்
31. பறாளை விநாயகர் பள்ளு
32. தனிப்பாடற்றிரட்டு
33. பைத்தியக்காரி
34. நந்திக்கலம்பகம்
35. கையடைப்படலம் பகுதி II
36. நாவலர் இருவர்
37. மணிமேகலை
38. திருக்குறள் - ஒழுக்கமுடைமை
39. மொழியின் அதியற்புத இயல்பு
40. புறநானூறு

# பகுதி - II

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

# அறிமுகம்

இப்பாடத் திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உரு வாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் நடவடிக்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த 'ஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படு கின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அடிப்படை மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் செயற்பட்டார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்பட்டமையால், மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதாக அமையவில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்றலைத் தூண்டுவதற்கும்உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் வகிபங்கு 'நிலைமாற்றுப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி 'ஈடுபடுத்தும்படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்வார். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான முடிவுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் முடிவுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாட லுடன் ஆராய்ந்து தீர்வுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப் படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் வளர்க்கப்படும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய

பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக் களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Elaboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் தீர்வுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் தீர்வுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்குத் திட்டமிட்டு, செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றுப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற் றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம ஏற்படுகிறது.

புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றுப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

## தர உள்ளீடுகள்

- மேலதிக வாசிப்புப் பகுதிகள் (சிறுகதை/கவிதை/செய்யுள்/கட்டுரை...)
- சஞ்சிகைகள்
- பத்திரிகைகள்
- அகராதி
- கலைக்களஞ்சியம்
- வானொலி
- ஒலிப்பதிவுக்கருவி, ஒலிப்பதிவு நாடா
- தொலைக்காட்சி
- கணனி

  இணையம்
- இறுவட்டு
- மேற்றலை எறியி (OHP)
- செயற்பாடுகளுக்குத் தேவைப்படுகின்ற ஏனைய பொருட்கள் (பேனை, பென்சில், கடதாசி, கத்திரிக்கோல்...)

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

**தேர்ச்சி: 2.0** **இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 2.3:** பாடப்பரப்பைக் கிரகித்து விடையளிப்பார்.

**செயற்பாடு:** வாசித்து, கிரகித்துக் கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு :** மாதிரி உரைப்பகுதி - பின்னிணைப்பு 1

செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 2

எழுது தாள்

எழுது கருவிகள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 2.3.1**

- உரைநடைப் பகுதியொன்றினை மாணவர்களுக்குத் தனித்தனியாக வழங்கி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் வாசித்த உரைநடைப்பகுதியிலிருந்து கற்றுக்கொண்ட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதன் மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- உரைநடைப்பகுதியின் பிரதான கருத்தை விளங்குதல்.
- பிரதான கருத்தை வலுப்படுத்தும் துணைக்கருத்துக்களை விளங்குதல்.
- பயன்படுத்தப்பட்ட மொழியாற்றலை அறிதல்.
- அரும்பதங்களுக்கான பொருளை அறிதல்.

(20 நிமிடங்கள்)

**படி 2.3.2**

- மாணவர்களை A, B, C, D என நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிலும் உள்ள எல்லா மாணவர்களும் பாடப்புத்தகத்திலுள்ள 'நம்பிக்கை' என்ற கட்டுரையை வாசிக்க வழிசெய்யுங்கள்.
- ஒவ்வொருவரும் தனித்தனியாக வாசித்து விளங்குவதை உறுதிப்படுத்துங்கள்.
- குழு A C ஆகியவற்றுக்கு ஒரு தலைப்பினையும் B D ஆகியவற்றுக்கு ஒரு தலைப்பினையும் வழங்குங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்தைக் குழுக்களுக்கு வழங்கி, செயற்பாட்டில் ஈடுபடத் துணைபுரியுங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 2.3.3

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டுப் பத்திரத்தினை முன்வைக்க வழிசெய்யுங்கள்.
- மாணவர் முன்வைத்த செயற்பாட்டுப் பத்திரத்தின் பொருத்தப்பாட்டினை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களிடம் வினாக்களை வினவி, விடையளிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் தமது தலைப்புகளுக்கேற்ப ஒட்டியும் வெட்டியும் விவாதத்தில் ஈடுபட வழிசெய்யுங்கள்.

படி 2.3.4

- விவாத முடிவில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்.

**தலைப்பு 1 மனிதனை மனிதனாக வாழ வைக்கப் பெரிதும் துணை புரிவது அறிவியலா? அறநெறியா?**

**குழு A, B**

**அறிவியல்**

- முற்காலத்தில் இல்லாத புதிய கருவிகள் அறிவியல் வளர்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டு இன்று பயன்படுகின்றன. (உ-ம்: போக்குவரத்து விரைவு, செய்திப் பரிமாற்றம், இயந்திரப் பாவனைகள் போன்ற இன்னோரன்ன வளர்ச்சியால் மனித வாழ்க்கை சிறப்படைகின்றது.)
- பொருட்களைச் சேமித்தால் மட்டும் போதாது. அதனைப் பயன்படுத்த அறிவியல் தேவை. (உ-ம்: அரிசி, பருப்பு, உப்பு, மிளகாய்....... )
- அறிவியல் தரும் விளக்கத்தை மனம் நம்புகிறது. அறநெறி தரும் விளக்கத்தை மனம் நம்புவதில்லை. (உ-ம்: வானில் பறக்கும் விமானம்)
- மனம் அறிவியலுக்குப் பணிகின்றது. அறநெறிக்குப் பணியவில்லை. (கட்டுரையில் இடம்பெறாத விடயங்கள் பொருத்தமாக இருப்பின் சேர்த்துக் கொள்ளவும்.)

**அறநெறி**

- அறிவியல் வாழ்க்கையில் நிம்மதி இல்லை. அறநெறி வாழ்க்கையில் நிம்மதியாக வாழலாம்.
- வாழ்க்கையில் அன்பு, அருள், உண்மை, நன்றியுணர்வு போன்றன வளர்வதற்கு வழிவகுப்பது அறநெறியாகும். (உ-ம்: திருக்குறள், நீதிநூல்)
- அறநெறிகள் மறுமைக்கும், இம்மைக்கும் பயன்தருவன.
- அன்பு, அருள் இல்லாதவர் ஒன்று சேர்ந்து பழகவோ, வாழவோ முடியாது.
- நேர்மை இல்லாத அறிவாளிகளைக் கொண்டு ஓர் அலுவலகத்தை நடத்த முடியாது. எனவே அறநெறி கூறும் அன்பு, உண்மை, நேர்மை என்பன வாழ்க்கைக்குத் தேவை.

**தலைப்பு : 2 மனிதனின் மேம்பாட்டிற்குப் பெரிதும் துணை புரிவது விஞ்ஞானமா? மெய்ஞ்ஞானமா?**

**குழு B, D**

**விஞ்ஞானம்:**

- மனிதனின் புறச்செயற்பாட்டுடன் தொடர்புடையது.
- மனிதன் ஐம்பூதங்களுடன் முரண்பட்டு, விதிகளுடன் ஒரு முடிவைக்கொண்டு வருவதன் மூலம் மேன்மையடைகின்றான்.
- வேட்டையாடிய மனிதனின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம், சிந்தனை வளர்ச்சி, மனிதனின் பல்வேறு தேவைகள், படிப்படியான விஞ்ஞான வளர்ச்சி போன்றவை மனிதனின் மேம்பாட்டிற்கு வழிவகுத்தமை.
- பல்துறை வளர்ச்சி (உ-ம் போக்குவரத்து, தொழினுட்பம், மருத்துவம், கல்வி .........)
- கண்டுபிடிப்பு (உ-ம்) விண்வெளி ஆராய்ச்சி.
- இவை யாவும் மனிதனின் வளர்ச்சிக்கான காரணிகளாக அமைகின்றன. எனவே விஞ்ஞானமே மனித மேம்பாட்டிற்குப் பெரிதும் துணை புரிகிறது.

**மெய்ஞ்ஞானம்**

- மனிதனின் அகச்செயற்பாட்டுடன் தொடர்புடையது.
- மனிதன், ஐம்பொறிகளுடன் போராடி, எந்நேரமும் கலங்காத நினைவுடன் மனதால் பேசி, அனைத்தையும் மனதால் உணர்கின்ற உன்னத நிலை மூலம் மேம்பாடடைகின்றான்.
- மனிதனின் நிலையிலிருந்து ஆன்மீக நிலைக்கு மாற்றம், அதன் மூலம் பண்பட்ட நிலை, உலகிற்கு நன்மை பயத்தல்.
- வாழ்க்கை என்ற பாதையின் வரைபடம் தான் ஆன்மீகம். இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு முதல் எம்முள் புதைந்துள்ள மெய்ஞ்ஞான நுட்பங்கள் வரை அனைத்துமே அதிலடங்கும். ஆகவே மெய்ஞ்ஞானமே மனித மேம்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிகிறது.

**பின்வரும் அம்சங்களைத் தெளிவுபடுத்துங்கள்.**

- கொடுக்கப்பட்ட தலைப்பின் பொருளை விளங்கிக் கொள்ளல்.
- முன்வைப்பதில் தெளிவான விளக்கம் இருத்தல்.
- பொருத்தமான மொழிக்கையாளுகை அமைதல்.
- தர்க்கிக்கும் ஆற்றல்.
- சமயோசிதமாகப் பேசும் ஆற்றல்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- உரைநடைப்பகுதியின் மையக் கருத்தினை விளங்கும் ஆற்றல் பெறுவார்.
- தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெறுவார்.
- முன்வைக்கும் திறனைப் பெறுவார்.
- தலைமைத்துவத் திறனை வளர்ப்பார்.
- விழுமியப் பண்பைப் பெறுவார்.

## மாதிரி உரைநடைப் பகுதி

தம்பி, இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி, உரமாக வைத்திருப்பவனும் அழிகின்றான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீய வழியிற் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் இடையே அல்லல்படுகின்றான்; அவனுடைய உடல் பல நோய்க்கிருமிகளுக்கு இடம் கொடுத்து அவனுடைய உள்ளத்தில் அமைதியைக் கெடுத்து அல்லல்படுகின்றது. உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம். ஆனால், தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது, வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழ முடியாது. இந்த உண்மையை நன்றாக உணர்ந்தவர் திருவள்ளுவர். அறநெறியும் வேண்டும், பொருள் வளமும் வேண்டும், இன்ப வாழ்வும் வேண்டும் என்று உணர்த்தும் நூல் திருக்குறள். அறத்தை நினைத்துப் பொருளை மறக்கும்படியாகத் திருவள்ளுவர் கூறவில்லை.

பொருளையோ, இன்பத்தையோ போற்றி அறத்தை மறக்கும்படியாகவும் அந்தப் பெருந்தகை கூறவில்லை. உலகத்து நூல்களில் பல அறம், பொருள், இன்பம் மூன்றில் ஒவ்வொன்றை மட்டுமே வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். வாழ்க்கையின் பல பகுதிகளையும் போற்றி வாழ வேண்டும் என்பதை உணர்த்த வந்த திருவள்ளுவர் இந்த மூன்றையும் தெளிவுறுத்தியுள்ளார். தமிழராகிய நாம் திருவள்ளுவரைப் பெற்றிருக்கிறோம். நம்மில் சிலர் அந்த நூலைக் கற்றும் இருக்கிறோம். ஆனால் திருவள்ளுவர் கூறியபடி வாழவில்லை; நல்ல தன்மை தேடுகிறோம்; வல்லமை தேடவில்லை. அதனால் தான் தாழ்வுறுகிறோம்.

## செயற்பாட்டுப் பத்திரம்

1. 'நம்பிக்கை' என்ற பாடப்பரப்பின் பிரதான கருத்து யாது?
2. வாழ்க்கைக்குத் தேவையானவை எவை எனக் கூறப்படுகின்றது?
3. 'நல்லொழுக்கம் நன்மையே தரும். தீயொழுக்கம் தீமையே தரும்' என்ற வரிகளுக்கு இப்பாடப் பகுதியில் கொடுக்கப்படும் விளக்கம் யாது?
4. இந்த உலகில் அமைதியாக வாழ்வதற்குத் தேவையானவை எவையெனக் கூறப்பட்டுள்ளன?
5. முன்னோர்கள் சொன்ன வழிகள் எவற்றுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன?
6. 'நம்பிக்கை' என்ற பாடம் தரும் படிப்பினை யாது?
7. இப்பாடத்தின் மூலம் உணர்த்தப்படும் விழுமியப் பண்புகள் யாவை?

**பின்வரும் தலைப்புகளில் கீழ் விவாதிப்பதற்குக் கலந்துரையாடிக் குறிப்புகள் எடுங்கள்.**

**A, C** - மனிதனை மனிதனாக வாழ வைக்கப் பெரிதும் துணைபுரிவது அறிவியலா? அறநெறியா?

**B, D** - மனிதனின் மேம்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிவது விஞ்ஞானமா? மெய்ஞ்ஞானமா?

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.3:** படைப்புக்களை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**செயற்பாடு:** 'சின்னமகள்' கவிதையை நயந்து, அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவோம்.

**நேரம் :** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**
- தினசரிப் பத்திரிகையின் கவிதைத் தொகுதிகள் - பின்னிணைப்பு 1
- 'சின்ன மகள்' கவிதை (பாடநூல்)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 2
- எழுது கருவிகள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.3.1**

- தினசரிப் பத்திரிகையொன்றில் வெளிவந்த நான்கு கவிதைகளைக் கொண்டு வந்து கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

- காட்சிப்படுத்தப்பட்ட கவிதைகளை, வாசிக்க வைப்பதன் மூலம் மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டுங்கள்.

- கவிதைகள் ஒவ்வொன்றும் என்ன கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளது? நீங்கள் இரசித்த அல்லது நயந்த பகுதி எது? போன்ற வினாக்களை வினாவிக் கலந்துரையாடுவதன் மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்துங்கள்.

- படைப்புக்களை (கவிதைகளை) இரசனையுடன் வாசித்தல்.
- கருத்துப் புலப்பட வாசித்தல்.
- யதார்த்த உணர்வு வெளிப்பட வாசித்தல்.
- உச்சரிப்புத் தெளிவு.
- படைப்பின் நோக்கத்தை விளங்குதல.

படி 1.3.2

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து அனைவருக்கும், 'சின்ன மகள்' கவிதைப் பகுதியினை வழங்குங்கள்.
- குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவனும் கவிதையினை முழுமையாகவும், பின்னர் பகுதி பகுதியாகவும் உணர்வு பூர்வமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்
- செயற்பாட்டுப் பத்திரத்தினை மாணவர் அனைவருக்கும் வழங்கி, அறிவுறுத்தலின் படி செயற்படுமாறு வழிப்படுத்துங்கள். (60 நிமிடங்கள்)

படி 1.3.3

- மாணவர்கள் குழு ரீதியாகக் கலந்துரையாடி, விடைகளைச் சமர்ப்பிக்க உதவுங்கள்.
- அனைத்துக் குழுக்களும் கலந்துரையாடி, விடயங்களைப் பகிர்ந்துகொள்ளச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரால் சமர்ப்பிக்கப்பட்ட விடைகளின் பொருத்தப்பாட்டைப் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு, கலந்துரையாடுங்கள்.

| | | |
|---|---|---|
| அ. சின்னமகள் | - | அன்னையினால் (அன்புத் தேவையின் போது) |
| லிஸி | - | அந்நியரால் |
| பணிப்பெண் | - | சுமைகளைத் தூக்கும்போது |
| செவிலி | - | பிள்ளைப் பராமரிப்பு |
| சமையற்காரி | - | வீட்டுவேலைகளின் போது |

ஆ. பெண்மீது பரிதாப உணர்வு

இ. காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ற, எளிமையான வசன நடை, புதுக்கவிதை நடை (அனுபவத்தின் வெளிப்பாட்டிற்கு ஏற்ற நடை)

ஈ. காலத்தின் தேவையால் பாரங்களைச் சுமக்கும் பெண், அவளது பொறுமை, தாயன்புக்காக ஏக்கம் கொண்டு, 'சின்ன மகளே' என்று அழைப்பதில் அரவணைப்பதில் பூரித்துப்போகும் உள்ளம்.

உ. பெண் பல்வேறு பொறுப்புக்களை ஏற்க வேண்டிய நிலையில் உள்ளாள்.

**கவிதை ஆக்கம்**

- ஏற்ற தலைப்பு

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- படைப்புக்களை நயக்கும் திறனைப் பெறுவார்.
- படைப்புக்களில் அனுபவ வெளிப்பாட்டைப் பிரயோகிப்பார்.
- படைப்புக்களில் வரும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- விழுமியப் பண்புகளை எடுத்துக்காட்டுவார்.

## பின்னிணைப்பு 2

### செயற்பாட்டுப் பத்திரம் 1

**உமக்கு வழங்கப்பட்டுள்ள கவிதையினை வாசித்துப், பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ. இக்கவிதையில் குறிப்பிடப்படும் பெண் எவ்வெச் சந்தர்ப்பங்களில் எவ்வெவ்வாறு அழைக்கப்படுகின்றாள்?

ஆ. இக்கவிதையைப் படிக்கும்போது, உமது உள்ளத்தில் தோன்றும் உணர்வு எத்தகையது?

இ. ஆசிரியரின் மொழி நடை பற்றி யாது கூறுவீர்?

ஈ. பெண்ணின் மென்மைத் தன்மை எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

உ. இக்கவிதை மூலம் ஆசிரியர் கூற விழையும் கருத்து யாது?

ஊ. இக்கவிதையை வாசித்த அனுபவத்தைக் கொண்டு, கவிதையொன்றினை ஆக்குக.

## தினசரிப் பத்திரிகையொன்றில் வெளிவந்த கவிதைகள்

1. தோல்வி என்பது
தேய்பிறை
வெற்றி என்பது
வளர்பிறை
இரண்டையும்
ஏற்றுக்கொண்டு
சந்தோஷமாய் வாழத்
தெரிந்தவன்
எதற்கும் துணிந்த
மனிதன.

2. உன் அன்பிற்குள் வாழ்ந்த
பசுமையான நாட்கள்
உன் அரவணைப்புக்குள் வாழ்ந்த
குழந்தைப் பருவம் - இன்று
குமரியானபோது தான் புரிந்தது
அதன் வலிமை
உனக்கு ஆயிரம் கோடி
நன்றிகள் - நீ என்னை மகளாய்
பெற்றதற்கு.

3. மகனே வெளிநாடு சென்று
உடைப் பெட்டியுடன்
வருவாயென காத்திருந்தேன்
உன் மடிந்த உடல் அல்லவா
பெட்டியில் வந்தது.

4. பனித்துளிக்கு ஆசை
பகல் முழுவதும் இருக்க
கண்ணீர்த்துளிக்கு ஆசை
கண்ணுக்குள்ளேயே இருக்க
ஆசைக்கு ஆசை ஏராளம்
நிறைவேறத்தான்
தடைகள் ஓராயிரம்.

## தேர்ச்சி: 3.0 பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி அலகு 3.1:** பல்வேறு வகைப்பட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.

**செயற்பாடு:** பாடலை நயப்போம், ஆக்குவோம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு:** 'பூத்துக்கிடக்கும் காடு' பாடற்பகுதி
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
எழுது கருவிகள், தாள்

### கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 3.1.1**

- பின்வரும் பாடலைக் காட்சிப்படுத்துங்கள்

**'சரிந்த வேங்கை முறிந்த கோங்கு**
**தகர்ந்த சாந்து விழுந்தவே**
**யிரிந்த மிருக மெழுந்த பறவை**
**இழிந்த அருவி கழிந்தவே'**
**'உருண்ட சிலைகள் ஒழிந்த வவல்கள்**
**உயர்ந்த மேடு பதிந்தவே**
**வெருண்ட கரடி விளிந்த வரவு**
**மிகுந்த வருவி பாயவே'**

நவாலியூர் சோமசுந்தரப் புலவர்-

பாடலை இரசிக்கத் தக்க வகையில் சில வினாக்களை வினாவுங்கள்.

(உ-ம்) 1. இப்பாடல் எக்காட்சியை வர்ணிக்கிறது?
2. பாடலின் ஓசைச் சிறப்பு எத்தகையது?
3. கவிஞர் தான் கூறவந்த காட்சியை எவ்வாறு சித்திரித்துள்ளார்?

- பொதுவாகப், பாடலொன்றை நாம் படிக்கும்போது, கவனஞ் செலுத்த வேண்டிய பின்வரும் விடயங்கள் குறித்துத் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| **பாடலின் கருப்பொருள்** |
| **கவிதை நடை – சந்தம் / ஓசை** |
| **உத்திகள்** |
| **நயம்** |

படி 3.1.2 **மாணவர்களை ஆறு பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.**

- 'பூத்துக்கிடக்கும் காடு' எனும் கவிதையின் பிரதிகளை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்குங்கள்.
- குழுவிலுள்ள எல்லா மாணவரும் கவிதையை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கி, விடை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 3.1.3

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் எழுதியதை, முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனையோர் தமது கருத்துக்களைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயங்களின் பொருத்தப்பாட்டைக் கருத்திற்கொண்டு, பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

○ கவிஞர் பூத்துக்கிடக்கும் காட்டைக் கண்டு, பரவசம் அடைவதும், தான் மீண்டும் மீண்டும் செல்ல விரும்புவதோடு, எம்மையும் வந்து அனுபவிக்குமாறு கூறுகின்றார்.

○ நெஞ்சின் சுமை நீங்கும், பஞ்சம் நீங்கும், எம்மைப் பற்றியுள்ள இருள் நீங்கும், வஞ்ச மனம் படைத்தோருக்கும் உற்சாகம் கிடைக்கும், அறிவு வளரும், வேதனைகள் நீங்கும்.

○ உத்திகள்:
  - வாசகரை முன்னிலையில் விளித்துக் கூறுதலால் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டல்,
  - எளிய சொற்கள் வாயிலாக ஆழமான கருத்துக்களைக் கூறல்.

○ நாட்டிலிருந்து முட்டி மோதிக்கொள்ளாமல், காட்டில் வந்து அமைதியின் இனிமையை உணர்ந்து எம்மைத் திருத்திக் கொள்ளுமாறு கேட்கின்றார்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கவிதையை இரசனை உணர்வோடு வாசிப்பார்.
- காட்டின் அழகையும் அதன்மூலம் பெறும் பயன்களையும் முன்வைப்பார்.
- தாம் விரும்பிய தலைப்பில் கவிதை ஒன்றை ஆக்குவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

'புத்துக்கிடக்கும் காடு' என்னும் கவிதையை வாசித்துப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடி, எழுதுக.

1. இப்பாடல் வாயிலாக ஆசிரியர் எதைக் கூற முற்படுகின்றார்?
2. கவிஞன் காட்டின் மூலம் பெறும் நன்மைகள் எவை எனக் குறிப்பிடுகின்றார்?
3. இப்பாடலில் கவிஞன் கையாண்டுள்ள உத்திகள் யாவை?
4. கவிஞர் மறைமுகமாக எமக்கு எடுத்துக்கூறும் அறிவுரை யாது?

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.2:** படைப்புக்கள் மூலமாகத் தன்னையும் தனது குடும்பத்தையும் தான்சார்ந்த சமூகத்தையும், தான் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு:** 'வேட்கை' சிறுகதையினை வாசித்து, நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

**நேரம் :** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு :** 'வேட்கை' என்ற சிறுகதை (பாடநூல்)
செயற்பாட்டுப் பத்திரம் 1 – பின்னிணைப்பு
காகிதாதிகள்
எழுது கருவிகள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.2.1

- சிறுகதையொன்றை வாசித்துக் காட்டுவதன் மூலம் மாணவர்களுடைய சிந்தனையைத் தூண்டுங்கள் அல்லது மாணவர் ஒருவரை சிறுகதையொன்றைக் கூறுமாறு வழிப்படுத்துங்கள்.

- இவ்வாறு குறிப்பிட்ட சிறுகதையை மாணவருடன் கலந்துரையாடுவதன் மூலம்,
  நீங்கள் இரசித்த பகுதி யாது?
  கருப்பொருள் என்ன?
  கதை கூறும் படிப்பினைகள் யாவை? போன்ற வினாக்களைத் தொடுத்து, விடைகளை அறியுங்கள்.

பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

- சிறுகதையின் நோக்கம்
- கதைக் கரு
- கதைக்களம்
- பாத்திரப் பொருத்தப்பாடு
- மொழிநடை

(20 நிமிடங்கள்)

படி 1.2.2

- மாணவர்களை ஆறு பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- 'வேட்கை' சிறுகதையை எல்லா மாணவரும் மாறி மாறி உரத்து வாசிக்கவும், செவிமடுக்கவும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வாசிக்கும் பொழுதே, புதியனவும், விளங்கிக்கொள்ள முடியாதனவுமான சொற்களை இனங்காணுமாறு வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர் அனைவருக்கும் வழங்கி, கேட்கப்பட்டவாறு செயற்பட வழிப்படுத்துங்கள். (60 நிமிடங்கள்)

படி 1.2.3

- மாணவர் குழுரீதியாக விடைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் தமது கருத்துக்களைப் பரிமாறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயங்களின் பொருத்தப்பாட்டைக் கருத்திற் கொண்டு விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

**ஆசிரியர் தொடர்பான அறிமுகம் :**

1960 களில் எழுத்துத் துறைக்குள் பிரவேசித்த என். எஸ். எம். இராமையா அவர்கள் குறைவாக எழுதிக் கணிசமான வாசகர்களின் கவனத்தை ஈர்த்தவர். மலையகத்துக்கேயுரிய தனித்தன்மைகளைக் கொண்டு சிறுகதைகள் எழுதியவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவருடைய சிறுகதைகளடங்கிய தொகுதி 'ஒரு கூடைக் கொழுந்து'. இத்தொகுப்பு 1980 இல் அந்த ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக் கொண்டது.

- **கதைக்கரு**

  தோட்டத் தொழிலாளியின் எதிர்பார்ப்பு, மனநிலை, அது நிறைவேற முடியாத நிலை
- **கதைக்களம்**

  மலையகத் தோட்டத் தொழிலாளியின் லயத்தைச் சுற்றிய சூழல்.
- முக்கிய பாத்திரங்கள்: சிவசாமி, மகன் வேலு, மருமகள், பேரன்

**பாத்திரங்களின் குணவியல்புகள்:**

சிவசாமி:
- காஸ் லைற் வாங்கியவரும் கதையின் ஆரம்ப கதாபாத்திரமும்.
- கதையோட்டத்தின் ஊடாக அவரின் பண்புகள் வெளிப்படுத்தப்படல்.
- பொருத்தமற்ற வழியில் பணம் சம்பாதிப்பவர்.
- தன்னைப் பற்றித் தானே கூறிப் பெருமை கொள்பவர்.

| | | |
|---|---|---|
| கிழவன் | :- | தள்ளாடும் வயதிலும் முயற்சி; தன் லயத்தின் சிறப்புப் பற்றிய பொதுவான ஆசை; காஸ்லைற் ஒன்றினைப் பெறவேண்டும் என்ற விருப்பமும் அதனை அடைவதற்கான முயற்சியும். |
| மகன் வேலு | :- | சரி, பிழை என்பவற்றை உணர்ந்து நேர்மையாக வாழ நினைப்பவர்; யதார்த்த சிந்தனை; உள்ளதை உள்ளவாறு வெளிப்படுத்தும் பண்பு. |
| மருமகள் | :- | சந்தர்ப்பம் அறிந்து, மற்றவர் மனம் புண்படாதவாறு பேசத் தெரிந்தவள்; குடும்பப் பொறுப்பு உள்ளவள்; சமாளித்து நடக்கும் இயல்பு. |
| பேரன் | :- | கதை மூலம் அவனது இயல்புகளை விளக்குதல் வேண்டும். |
| மொழிநடை: | | மலையகப் பிரதேசப் பண்பினைப் பிரதிபலிக்கும் மொழிப் பயன்பாடு, பேச்சுவழக்குச் சொற்கள், உவமைப் பயன்பாடு, உணர்ச்சிகளை நளினமாக வெளிப்படுத்தும் சொற்றொடர்கள். |

**தலைப்பின் பொருத்தம்**

கதையில் வரும் முக்கிய பாத்திரமான கிழவர் 'காஸ்லைற்' ஒன்றை வாங்கும் வேட்கையால் அந்தத் தள்ளாத வயதிலும் சுயமாகச் சம்பாதிக்கப் பிரயாசைப்படுதல்.

**படிப்பினைகள்:**

- இலக்கு நோக்கிய வேட்கையும் நியாயமான வழியில் அதனை அடையும் முயற்சியும்.
- தன்னம்பிக்கை
- குடும்ப ஒற்றுமை
- பரந்த மனப்பாங்கு

**மலையக மக்களின் வாழ்நிலை**

- அடிப்படை வசதிகள் போதாமை
- வறுமை – அன்றாட சீவியம் கடினம்
- பிள்ளைகளின் வருமானத்தை எதிர்பார்க்கும் பெற்றோர்.
- பெற்றோரின் தேவைகளை நிறைவேற்றாத பிள்ளைகள்.
- கூட்டு வாழ்க்கை
- மேலதிக வருமானத்தின் பொருட்டு வேறு தொழில்களில் ஈடுபடுதல்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கதையின் மையக்கருத்தை வெளிப்படுத்துவார்.
- கதையில் வரும் மாந்தரின் இயல்புகளை விளக்குவார்.
- சமூக ஊடாட்டத்தை விளங்கிக் கொள்வார்.
- மக்களின் வாழ்வியற் போராட்டங்களை விளங்கி எழுதுவார்.

## செயற்பாட்டுப் பத்திரம் 1

'வேட்கை' என்னும் சிறுகதையினை வாசித்துப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடி, அறிக்கைப்படுத்துங்கள்.

1. கதைக்கரு
2. கதைக்களம்
3. பாத்திர வார்ப்பு
4. மொழிநடை
5. தலைப்பின் பொருத்தம்
6. படிப்பினைகள்
7. மலையக மக்களின் வாழ்நிலை

## தேர்ச்சி: 4.0 இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.

**தேர்ச்சி அலகு 4.1:** இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்..

**செயற்பாடு:** 'போதியோ பொன்னியம்மா' என்ற கவிதையை வாசித்து, கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம் :** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**

- போதியோ பொன்னியம்மா கவிதை (பாடப்பகுதி)
- 'வீடுவரை உறவு, வீதிவரை மனைவி' என்ற பாடல் கொண்ட ஒலிநாடா அல்லது காட்சிப்படுத்தும் அட்டை
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 4.1.1**

- 'வீடுவரை உறவு வீதிவரை மனைவி' என்ற சினிமாப் பாடலின் அடிகளை ஒலிநாடாவில் ஒலிக்க விட்டு, மாணவரின் சிந்தனையைத் தூண்டுங்கள்.
  அல்லது
  இப்பாடலைப் பாடி மாணவரின் சிந்தனையைத் தூண்டுங்கள்.
  அல்லது
  சினிமாப் பாடலைக் காட்சிப்படுத்தி மாணவர் ஒருவரைப் பாடச் சொல்லுங்கள்.
- இவ்வாறான பாடல்களினூடாக வெளிப்படும் உணர்வு எது?
- இப்பாடலின்மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள், வாழ்வியல் அம்சங்கள் பற்றிக் கூற முடியுமா?
- ஒரு பாடலைக் கேட்கும்போது / வாசிக்கும்போது எவ்வெவ்விடயங்களில் கவனஞ் செலுத்துவீர்கள்? போன்ற வினாக்களைத் தொடுத்துக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

> - கருப்பொருள்
> - வாழ்வியல் அம்சங்கள்
> - மானிட விழுமியங்கள்
> - படிப்பினைகள்
> - உத்திகள்

(20 நிமிடங்கள்)

படி 4.1.2

- மாணவர்களை 5 பேர் கொண்ட குழுக்களாக வகுத்து அமரச்செய்யுங்கள்.
- ஒவ்வொரு மாணவ குழுவுக்கும் 'போதியோ பொன்னியம்மா' என்ற கவிதைப் பகுதியை வழங்கி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அருஞ்சொற்கள், பொருள் விளக்கம் இல்லாத பகுதிகளை விளங்கத் துணை புரியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தினைக் குழுக்களுக்கு வழங்கி, செயற்பட வழிசெய்யுங்கள்.
- குழுக்களிலுள்ள ஒவ்வொருவரும் செயற்படுவதை உறுதி செய்யுங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 4.1.3

- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்கச் செய்யுங்கள்.

  குழு i: முதலிரு வினாக்களுக்கான விடைகள்

  குழு ii: 3 ஆம் 4ஆம் வினாக்களுக்கான விடைகள்

  குழு iii: 5 ஆம் 6 ஆம் வினாக்களுக்கான விடைகள்

  குழு iv: 7 ஆம் 8 ஆம் வினாக்களுக்கான விடைகள்

  என்ற அடிப்படையில் விடயங்களை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- ஒரு குழு விடயங்களை முன்வைத்த பின் ஏனையோர் அவ்விடயம் தொடர்பாகக் கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயங்களின் பொருத்தப்பாட்டினை இனங்கண்டு, கீழ்வரும் விடயங்களையும் உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்.

1. பொன்னியம்மாவின் அன்றைய நிலை:
   - செல்வச் சீமாட்டியாக வாழ்ந்தாள்.
   - சுகதேகியாக வாழ்ந்தாள்.
   - செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக வாழ்ந்தாள்.

2. பொன்னியம்மாவின் இன்றைய நிலை:
   - உன்னிக் கருமங்களை ஊரார் செய்கின்ற நிலை.
   - தும்புக் கரங்களை உடையவளாக உள்ளாள்.
   - உறவினர் எவரும் உதவாததால் அனாதையாக வாழ்வை முடித்துள்ளாள்.
   - பாரிச வாதத்தால் பாதிக்கப்பட்டதோடு தூரப்பார்வை அற்ற நிலை.

3. பொன்னியம்மா இவ்வாறு மரணித்ததற்கான காரணங்கள்:

- உறவினர் உதவி கிடைக்காமை
- காலம் செய்த கொடுமை
- வறுமையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்

4. பொன்னியம்மாவின் விருப்பங்களும், அவள் வறுமையினைப் போக்க எடுத்த முயற்சிகளும் தடைகளும்:

- கோப்பி எனும் பானம் குடிக்கப் பல நாள் ஆசை
- அரச உதவிப் பணம் பெற்று வறுமையைக் குறைக்க வேண்டும் என்பது
- அரசாங்க உதவிப்பணம் பெற்றமை (முயற்சி)
- பணம் தடைப்பட்டாலும் மீண்டும் பெறுவதற்காக உரியவர்களுக்குக் கடிதம் எழுதக் கவிஞர் துணையை நாடுதல்.
- ஆறு வருடங்களாகப் பெற்றுவந்த உதவிப்பணம் ஊர்த் தலைவரின் செயற்பாட்டால் நிறுத்தப்படுகின்றமை.

5. பொன்னியம்மாவின் மனவுணர்வுகள்

- கோப்பி குடிக்க ஆசை இருந்தும் முடியவில்லையே என்ற உணர்வு
- தாபரிப்புக் காசு நிறுத்தப்பட்டமையால் ஏற்பட்ட சோகம்
- மீண்டும் காசைப் பெறுவதற்குப் பல காரணங்கள் காட்ட வேண்டியதாயிற்றே என்ற நிலை
- வசதியாக வாழ்ந்தவள் வறுமையால் பிறரை மன்றாட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே என்ற மனநிலை.

6. பொன்னியம்மா பற்றிய கவிஞரின் மனவுணர்வுகள்:

- வசதியாக, சுகமாக சுற்றம் சூழ வாழ்ந்தவள் இவ்வாறு சடலமாகிக் கிடக்கிறாளே என்ற உணர்வு.
- அவளது ஆசைகள் நிறைவேறவில்லையே என்ற உணர்வு
- மரணச் செயற்பாடுகளை ஊரார் செய்ய வேண்டிய நிலைக்கு இவள் ஆளாகி விட்டாளே என்ற நிலை.
- இவளது மனம் இறுதி நேரத்தில் எவ்வளவு வேதனை அடைந்திருக்கும் என்ற உணர்வு.
- இவளது பிரிவு ஊராருக்குத் துயரத்தையும் படிப்பினையையும் ஏற்படுத்தி விட்டது என்ற மனநிலை.

7. உத்திகள்:

- பொன்னியம்மாவின் இறப்பின் உருக்கத்தைக் காட்ட தற்குறிப்பேற்ற அணி கையாளப்பட்டுள்ளது. உதாரணம்: 'ஊரோடு வானும் உருகி அழுதரற்றும் மார்கழிமாத மழை'.
- பொன்னியம்மாவை முன்னிலையில் விளித்துச் சொல்லல்.
- அவளது பழைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டுக் காட்டல்.
- அவளது தோற்றத்தை யாவருக்கும் விளங்கத்தக்க வகையில் உருக்கமாக வெளிப்படுத்தல்.
- அவளது ஆசை, செயற்பாடுகள் என்பனவற்றைக் காட்டல்.

(40 நிமிடங்கள்)

கணிப்பீடும் மதிப்பீடும்

- இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.
- மானுட விழுமியங்களை விளங்குவார்.
- வாழ்வியல் அம்சங்களை தமதாக்கங்களில் வெளிப்படுத்துவார்.
- படிப்பினைகளை விளக்குவார்.

ஒப்படை: நீங்கள் விரும்பும் தலைப்பில் கீழ் 8 வரிகளைக் கொண்ட கவிதை ஒன்றை எழுதுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

'சோதியோ பொன்னியம்மா' எனும் கவிதையை வாசித்து, பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடி எழுதுக:

1. பொன்னியம்மாவின் அன்றைய நிலை.
2. பொன்னியம்மாவின் இன்றைய நிலை.
3. பொன்னியம்மா இவ்வாறு மரணித்தமைக்கான காரணங்கள்.
4. பொன்னியம்மாவின் விருப்பங்களும் அவள் வறுமை போக்க எடுத்த முயற்சிகளும் தடைகளும்.
5. பொன்னியம்மாவின் மனவுணர்வுகள்.
6. பொன்னியம்மா பற்றிய கவிஞரின் உள்ள உணர்வுகள்.
7. தான் சொல்ல வந்த விடயங்களை விளக்கக் கவிஞர் கையாண்ட உத்திகள்.
8. இக்கவிதை பற்றி நீங்கள் யாது நினைக்கிறீர்கள்?

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.2:** படைப்புக்கள் மூலமாகத் தன்னையும் தனது குடும்பத்தையும் தான்சார்ந்த சமூகத்தையும், தான் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்.

**செயற்பாடு:** 'வெற்றிப்பயணம்' என்ற கவிதையை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு:** வெற்றிப்பயணம் என்ற கவிதை (பாடநூல்)
செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
காகிதாதிகள்
எழுது கருவிகள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 1.2.1**

- மாதிரியாக ஒரு பாடலை முன்வைத்து ஆரம்பியுங்கள். (பாடலை ஆசிரியரோ மாணவரோ பாடலாம்)

உ-ம்

**'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**துச்சமாக நம்மைத் தூறுசெய்த போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'**

**- சுப்பிரமணிய பாரதியார் -**

1. இப்பாடல் சமூகத்திற்குக் கூறவரும் செய்தி யாது?
2. பாடலாசிரியர் கையாண்ட சொல்லாட்சி பற்றி யாது நினைக்கிறீர்? போன்ற வினாக்களை வினவி மாணவரது சிந்தனையைத் தூண்டுங்கள்.

பாடல் ஒன்றைக் கற்கும்போது, கவனத்திற் கொள்ள வேண்டிய பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

| |
|---|
| ○ கருப்பொருள் |
| ○ சொல்லாட்சி |
| ○ உணர்ச்சி வெளிப்பாடு |
| ○ நயத்தல் |
| ○ சமூக சீர்திருத்தம் |
| ○ கையாளப்பட்ட உத்தி |

(20 நிமிடங்கள்)

**படி 1.2.2**

- வெற்றிப்பயணம் என்ற கவிதையை மாணவர் ஒவ்வொருவரும் வாசிக்க வழிசெய்யுங்கள்.
- மாணவர்களை ஆறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரத்தில் உள்ள ஒவ்வொரு விடயத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தங்கள் செயற்பாட்டுப் பத்திரத்தினை அறிக்கைப்படுத்த வழி செய்யுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படி 1.2.3**

- மாணவர் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வழிசெய்யுங்கள். ஏனையோர் விடயத்தைக் கேட்டுக் கருத்தைக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர் முன்வைத்த கருத்துக்களின் பொருத்தப்பாட்டை இனங்கண்டு, பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

1. காலை நேரம் நடப்பவை

○ கவிதை தரும் கருத்து (உ-ம்) கருமுகில் கலைதல், காற்று வீசுதல், இருள் விலகுதல்
○ உழவர் பெருமை (பாரதத்தைக் காத்தல்)
○ தமிழர் வீரம்
○ நங்கையின் சிறப்பு (நாற்று நட்டு நாடு காத்தல்)
○ ஆறுகளைத் தடுத்து அணைகள் கட்டுதல்
○ ஏழை கண்ணீரும் அடிமை வாழ்வும் ஒழிதல்
○ அச்சமின்றித் தடைகளை எதிர்கொள்ளல்
○ சுரண்டலை ஒழித்துச் செல்வம் சேர்த்து இன்பமடைதல்
○ புதிய உலகமொன்றைத் தோற்றுவித்தல் (இவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்)

2. இக்காலத்திற்கு இக்கவிதை பொருத்தமானதா?
பொருத்தமானது என்றால் காரணம்....

○ உழைப்பின் உயர்வைக் காட்டி அச்சம் நீங்கித் தன்மானத்துடன் வாழ வேண்டும் என்ற தேவை இன்றும் உள்ளமை.
○ சாதி மத பேதம் காணும் இவ்வுலகில் அவற்றை நீக்கி நீதியை மதித்து வாழ வேண்டிய ஒரு காலகட்டம் இது. இதனால் இக்கவிதை இக்காலத்துக்குப் பொருத்தமானது.
(இது போன்ற காரணங்களை மாணவர் முன்வைக்க வழிப்படுத்துங்கள்)

3. **இக்கவிதையில் கையாளப்பட்ட உத்திகள்**

- மாணவர் விளங்கிக்கொள்ளக் கூடிய எளிய நடை (உ-ம்) வீசுது, காணுது போன்ற பேச்சு வழக்கு நடை
- எளிய சந்தம், அணிகள் கையாளப்பட்டுள்ளமை
  (உ-ம்) 'சமுத்திரங்கள் திரண்டெழுந்த தன்மைபோல்'
- எதுகை, மோனைச் சொற் பிரயோகம்
  (உ-ம்) கரு – கண், ஏர் - எழில் - மோனை
  கரு – தரு, ஏர் - பேர், நாற்று, சேற்று, ஆற்று - எதுகை
  இது போன்று அணிகள் பற்றிய விளக்கம் எழுதப்பட்டிருத்தல்.

4. மாணவர் குறிப்பிடும் பாடல் அடிகளையும் அதற்குப் பொருத்தமான காரணங்களையும் கருத்திற் கொள்க.

5. சமூக சீர்திருத்தக் கருத்து
   அடிமை வாழ்வைத் தகர்த்து இவ்வுலகமானது, எல்லோருக்கும் சொந்தம் என மகிழ்ந்து பாடுதல்.

6. பாரதியையும் பாரதிதாசனையும் குறிப்பிட்டுப் பாடலடிகளை உதாரணங்கள் காட்டி விளக்குதல்.
   உதாரணம்: 'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்.....'

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடலின் கருப்பொருளைக் கூறுவார்.
- பல்வேறு உத்திகள், சொல்லாட்சிகள் மூலம் வாசகரையோ கேட்போரையோ கவரலாமென்பதை விளக்குவார்.
- பாடலில் கூறப்பட்டுள்ள சமூக சீர்திருத்தக் கருத்துக்களை விளக்கிக் கூறுவார்.
- பாடலில் தான் நயந்த பகுதியையும் அதற்கான காரணத்தையும் கூறுவார்.
- பாடலாசிரியர் கூறவந்த கருத்தை எவ்வாறு உணர்ச்சியுடன் வெளிப்படுத்துகிறார் என்பதைத் தெளிவுபடுத்துவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

'வெற்றிப் பயணம்' எனும் கவிதையைப் படித்துக் கீழ்வரும் விடயங்கள் பற்றி அறிக்கைப்படுத்துங்கள்.

1. கவிதை தரும் கருத்தினை உமது நடையில் தருக.
2. இக்கவிதையின் தற்காலப் பொருத்தப்பாட்டினை விளக்குக.
3. கவிதையில் கையாளப்பட்டுள்ள உத்திகள் எவை என விளக்குக.
4. இக்கவிதையில் உமது உள்ளத்தை மிகவும் கவர்ந்த பாடலடிகள் எவை? அதற்கான காரணத்தைத் தருக.
5. இப்பாடலில் கூறப்பட்ட சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் யாவை?
6. இக்கவிஞரில் செல்வாக்குச் செலுத்தும் கவிஞர்கள் யாவர்? உதாரணங்களுடன் விளக்குக.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.4:** விமர்சன நோக்குடன் படைப்புப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

**செயற்பாடு:** 'காளத்தி வேடனும் கங்கை வேடனும்' என்ற கட்டுரையை வாசித்து, ஒப்பியல் நோக்கில் விமர்சிப்போம்.

**நேரம் :** 200 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**
- 'காளத்தி வேடனும் கங்கை வேடனும்' கட்டுரை - பாடநூல்
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- ஆசிரியருக்கான மேலதிகக் குறிப்புகள் - பின்னிணைப்பு 2
- அகராதி

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.4.1

- கம்பராமாயணத்தில் வரும் கும்பகர்ணனும் மகாபாரதத்தில் வரும் கர்ணனும் (கன்னன்) முறையே இராவணனுக்கும் துரியோதனனுக்கும் செய்த 'செஞ்சோற்றுக் கடன்' பற்றிச் சுருக்கமாக மாணவருக்குக் கூறிப் பாடத்தை ஆரம்பியுங்கள்.
  ஒப்பியல் நோக்கில் எழுதப்பட்ட கட்டுரைகளை வாசிக்கும்போது, கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை? என மாணவரிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
  பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்:

  - கட்டுரையில் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்து (கரு)
  - கதாபாத்திரங்களிடையே காணப்படும் ஒற்றுமைப் பண்புகள்
  - கதாபாத்திரங்களிடையே காணப்படும் வேற்றுமைப் பண்புகள்
  - மொழிப்பிரயோகம் / கட்டுரையாசிரியரது மொழிநடை
  - புதிய சொற்கள்
  - இரசனைக்குரிய விடயங்கள்

(20 நிமிடங்கள்)

படி 1.4.2

- பாடநூலிலுள்ள 'காளத்தி வேடனும் கங்கை வேடனும்' என்ற கட்டுரையை மாணவர் தனித்தனியாகக் கருத்தூன்றி வாசிக்க அறிவுறுத்துங்கள்.
- மாணவரை ஐந்து குழுக்களாக்குங்கள்.
- பின்னிணைப்பிலுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- மாணவர் குழுக்களாக இயங்கி அறிக்கை தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
- குழுக்களுக்கிடையே சென்று, தேவைப்படுமிடத்து ஆலோசனை வழங்குங்கள்.

படி 1.4.3

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையை முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தத்தமது கருத்துக்களைத் தெரிவிக்க உற்சாகப்படுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

1. **காளத்தி மலையிலே தோன்றிய வேடனாகிய கண்ணப்பன்**
   **கங்கைக் கரையிலே தோன்றிய வேடனாகிய குகன்.**

2. கண்ணப்பரின் சிறப்பம்சங்கள்: அன்பு நெறியைக் கடைப்பிடித்தவன்; காளத்திநாதன் மீது அன்பு வைத்தவன்; தனக்கினிய இறைச்சியே தன் தலைவனாகிய இறைவனுக்கும் இனியதாகும் என்று எண்ணி, இறைவனுக்கு ஊட்டியவன்; இறைவனைப் பிரிய மனமில்லாதவன்; காளத்திநாதனை இராப்பொழுதில் கண்ணிமையாது காத்து நின்றவன்; இறைவனிடம் பயன்கருதாப் பக்தி பூண்டவன்.

3. குகனது சிறப்பம்சங்கள்: அன்பு நெறியைக் கடைப்பிடித்தவன்; இராமன் கங்கைக்கரையை அடைந்த செய்தியை அறிந்ததும் அவனைக் காண உடனே சென்றான்; தனக்கினிய மீனையும் கொம்புத் தேனையும் இராமனுக்கு உணவாகக் கொடுத்தான்; இராமனைப் பிரிந்திருக்க விரும்பாதவன்; இரவு முழுவதும் கண்ணிமையாது மூவரையும் (கங்கைக்கரையில்) காவல் செய்தவன், இராமன் மீது பயன் கருதாத பக்தி கொண்டவன். பரதனது சேனையைக் கண்டதும் பரதன் இராமனை வெல்லக் கருதி வந்தானென நினைத்துப் போர்க்கோலம் பூண்டவன்.

4. 1. தமக்கினிய உணவையே உண்ணக் கொடுத்தமை
   2. தத்தமது தலைவரைப் பிரிந்திருக்கலாற்றாத தன்மை
   3. தத்தமது தலைவரைக் கண்ணிமையாது காத்து நிற்றல்

5. இராமன், நாடு துறந்து காடு புகுந்த பின்னர், அவன்பால் அன்பு கொண்டவர் மூவர்; சுக்ரீவன் கைம்மாறாக கிஷ்கிந்தை அரசைப் பெற்றான் ; விபீஷணன் இலங்கையரசைப் பெற்றான் ; ஆனால் குகனோ பக்திக்காகப் பக்தி செய்து கைம்மாறு கருதாத அன்பைச் செலுத்தினான்.

6. காட்டப்பட்டிருக்கும் அடிகளையும் காரணங்களையும் கவனிக்கவும்.

7. 1. அ. குகனால்
      ஆ. இராமனுக்கு
      இ. கங்கைக்கரையில் குகன் இராமனைச் சந்தித்தபோது கூறப்பட்டது.
   2. அ. குகனால்
      ஆ. இராமனுக்கு
      இ. குகன் இராமனைச் சந்திக்கச் சென்றபோது, தான் கொணர்ந்த மீனையும் தேனையும் அவன் முன்னால் வைத்து இவ்விதம் கூறினான்.

(40 நிமிடங்கள்)

படி 1.4.4

- மாணவர்களை மீண்டும் குழு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- "காளத்திநாதர் மீது கண்ணப்பன் கொண்ட அன்பிலும் பார்க்க இராமன் மீது குகன் கொண்ட அன்பு சிறந்தது." என்ற கூற்றை ஒட்டியும் வெட்டியும் பேசத்தக்கவாறு (விவாதம்) குழுக்களாக இணைந்து குறிப்புகள் எடுக்க வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 1.4.5

- குழுக்களிலிருந்து எழுமாற்றாக ஆறுபேரைத் தெரிவு செய்யுங்கள்.
- மாணவர்களை வகுப்பு நிலையில் அமரச் சொல்லுங்கள்.
- தெரிவு செய்த மாணவர்களை விவாதத்தில் ஈடுபடச் செய்யுங்கள்.
- விவாதிக்கும் விடயங்கள், ஒட்டியும் வெட்டியும் பேசுமாற்றல் என்பவற்றைக் கவனியுங்கள்.
- விவாத முடிவில் மாணவர்களுக்கு கருத்துக்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்

- ❖ குறிப்புகள் எடுக்கும்போது கவனிக்க வேண்டியவை
  உதாரணம்: - பிரதான கருத்துக்களை இனங்காணல்
- ❖ விடயங்களை விமர்சிக்கும் பாங்கு
- ❖ விவாதத்திற்குரிய ஒழுங்கு விதிகளைப் பின்பற்றல்
  உதாரணம்: - கருத்துக்களை ஒழுங்குமுறையில் முன்வைத்தல்.
  - கருத்துக்களை ஒட்டியும் வெட்டியும் விவாதிக்கும் ஆற்றல்
  - கவனமாகச் செவிமடுத்தல்
  - தொகுத்துக் கூறல்

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- கட்டுரையாசிரியர் கையாண்ட மொழிநடை பற்றி விளக்குவார்.
- கதாபாத்திரங்களை ஒப்பிட்டு விமர்சிப்பார்.
- கட்டுரையாசிரியர் காட்டும் பாத்திரங்களின் ஆகியோரது சிறப்பம்சங்களைப் பட்டியற்படுத்துவார்,
- தாம் இரசித்த பகுதிகளை எடுத்துக் காட்டுவார்.
- கதாபாத்திரங்களின் ஆகியோரது சிறப்புப் பற்றி விவாதிப்பார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

1. '..................... இலக்கிய உலகம் போற்றும். இருவரும் உயரிய அன்பு நெறியைக் கடைப்பிடித்து, அழியாப் புகழ் பெற்றனர்' என்று கட்டுரையாசிரியர் விதந்து கூறிய இருவரும் யாவர்?

2. கட்டுரையாசிரியர் குகனதும் கண்ணப்பரதும் எவ்வெச் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டியுள்ளார்?

3. கட்டுரையாசிரியர் கண்ணப்பன், குகன் ஆகிய இரு பாத்திரங்களையும் ஒப்பிட்டுச் சுவைபட எடுத்துக்காட்டிய மூன்று குணச் சிறப்புக்களைத் தருக.

4. கைம்மாறு கருதாத குகனது அன்பைக் கட்டுரையாசிரியர் ஒப்பிட்டுக் காட்டும் சிறப்பை எடுத்துக் காட்டுக.

5. இக்கட்டுரையை வாசித்து முடித்ததும். நீங்கள் மிகவும் இரசித்த பகுதிகளைக் குறிப்பிடுக. காரணத்தையும் சுருக்கமாகத் தருக.

6. பின்வரும் கூற்றுக்கள் அ. யாரால் ஆ. யாருக்கு இ. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டவை எனத் தருக.

   1. 'தேவா நின் கழல் சேவிக்க வந்தனன்
      நாவாய் வேட்டுவன் நாயடியேன்'

   2. 'ஐயனே ! தேனும் மீனும் திருத்திக் கொண்டுவந்தேன்
      தேவரீர் திருவமுது செய்தருள வேண்டும்'

## செஞ்சோற்றுக்கடன்

'கர்ணனும் கும்பகர்ணனும்' என்ற கட்டுரையை எழுதியவர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களாவார். கர்ணனும் கும்பகர்ணனும் செஞ்சோற்றுக்கடனுக்காகத் தமது உயிரையே தியாகம் செய்தவர்கள்.

கும்பகர்ணன், இலங்கை வேந்தனாகிய இராவணனுடைய தம்பியாவான். வீரத்திலும் வலிமையிலும் சிறந்தவன். சீதையை இலங்கை மன்னன் சிறை வைத்தது தகாத செயல் என்று அறிவுரை கூறியும், இராவணன் செவிமடுக்கவில்லை. இராமன், கும்பகர்ணனைத் தன்பக்கம் சேர்க்க விபீடணனைத் தூது அனுப்பியும் கும்பகர்ணன் இணங்கவில்லை. இராமனது கணையால் தான் ஆவி துறப்பது நிச்சயம் எனத் தெரிந்திருந்தும், ஆவியையும் அளவிறந்த செல்வத்தையும் வெறுத்து, தமையனுக்காக உயிர் துறந்தவன்.

கர்ணன் குந்திதேவியின் மூத்த புதல்வன். பஞ்ச பாண்டவருக்கு மூத்தவன். குழந்தையாக இருக்கும்போதே குந்திதேவியால் பேழையினுள் வைத்து ஆற்றில் விடப்பட்டவன். ஆதரவற்ற அக்குழந்தையைத் தேர்ப்பாகன் கண்டெடுத்து வளர்த்தான். இளமைப் பருவத்திலேயே கர்ணனது வீரத்தைக் கண்ட துரியோதனன், கர்ணனை ஆதரித்து வளர்த்து, அங்கத நாட்டுக்கு அரசனாக்கினான். அவனுடன் தோழமையும் கொண்டான். பாரதப்போர் தொடங்கும்போது, குந்திதேவி கண்ணபிரானது ஏவலின்படி, கர்ணனைப் பாண்டவர் பக்கம் சேரும்படி அழைத்தாள். ஆனால் கர்ணன் மறுத்து விட்டான். தனக்கு நன்றி செய்த துரியோதனன் பக்கமே நின்று போர் செய்து ஆவி துறந்தான்.

### பட்டினத்தார்

இவர் பத்து அல்லது பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என வரலாற்றாசிரியர் கூறுவர். இவருடைய பாடல்கள் சைவத் திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. உலக வாழ்க்கையில் செய்யத்தக்க கடமைகளைச் செம்மையாகச் செய்து, உள்ளத்தில் மட்டும் கடவுளின் நினைவு கொண்டால் போதும் என்பது பட்டினத்தார் கருத்தாகும்.

## கண்ணப்பர்

இவரது இளமைப் பெயர் திண்ணன். பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரின் வேடுவர்களின் மன்னனாகிய நாகனின் மகன். 16 வயதிலேயே அரசுரிமையைத் தந்தையிடமிருந்து பெற்றார். வேட்டுவ மன்னன் பொறுப்பை ஏற்ற திண்ணன், வேட்டைக்குச் சென்றபோது, மலையில் காளத்திநாதனை (சிவபெருமானை)க் கண்டார். தான் விரும்பி உண்ணும் இறைச்சியையே இறைவனுக்குக் கொடுத்தார். காளத்திநாதரின் கண்களில் இருந்து இரத்தம் வழிந்தபோது, திண்ணன் தனது கண்களையே பெயர்த்து அப்பினார். காரணப் பெயராகத் திண்ணனாருக்குக் கண்ணப்பர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

**சிறுத்தொண்டர் :** இறைவன் மேல் வைத்த பக்தியினால் தனது மகனையே தியாகம் செய்தவர். 63 நாயன்மார்களில் ஒருவர்.

**திருநீலகண்டர்:** 63 நாயன்மார்களுள் ஒருவர். மனைவியின் சபதத்துக்குட்பட்டு, அவளைத் தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்தினார்.

**தேர்ச்சி: 4.0** இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.

**தேர்ச்சி அலகு 4.2:** இலக்கியங்கள் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுமாற்றை விளக்குவார்.

**செயற்பாடு:** பாரதிதாசனின் 'தமிழின் இனிமை' என்ற பாடலைப் படித்துத் தமது கருத்துக்களை முன்வைப்பார்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**
- பாரதிதாசனின் 'தமிழின் இனிமை' என்ற பாடல் (பாடநூல்)
- 'தமிழுக்கும் அமுதென்று பேர்' பாடல் பிரதி – பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 2
- அகராதி
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 4.2.1**

- பின்னிணைப்பிலுள்ள பாரதிதாசன் பாடிய 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்று தொடங்கும் பாடலைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர் ஒருவரை அப்பாடலை உரத்துப் பாடச் சொல்லுங்கள்.

பாடலைப் படிக்கும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் யாவை? என்ற வினாவை மாணவரிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் பற்றி மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்

- பாடலில் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்து (கருப்பொருள்)
- பாடலின் பொருள்
- புதிய சொற்கள்
- பாடலின் இரசனை (உவமையணி, உருவக அணி, சொல்லாட்சி, மொழிநடை, ஓசைச்சிறப்பு, உணர்ச்சி)

(20 நிமிடங்கள்)

**படி 4.2.2**

- 'தமிழின் இனிமை' என்ற பாடலை மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கருத்தூன்றிப் படிக்கும்படி அறிவுறுத்துங்கள்.
- மாணவரை ஐந்து குழுக்களாக்குங்கள்.
- குழுக்களாக இயங்கிப், பாடலை ஓசையுடன் பாடிப்பழக வகை செய்யுங்கள்.
- குழுக்களிடையே சென்று தேவையேற்படின், ஓசையுடன் பாடிக்காட்டுங்கள்.
- பின்னிணைப்பிலுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தைக் குழுக்களுக்கு வழங்கி, அறிக்கை தயாரிக்கும்படி அறிவுறுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 4.2.3

- குழு நிலையில் தயாரித்த அறிக்கையை முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க உற்சாகப்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

1. தமிழின் இனிமை
2. கனியிடை ஏறிய சுவை, முற்றல் கழையிடை ஏறிய சாறு, பனிமலர் ஏறிய தேன், பாகிடை ஏறிய சுவை, பால், இளநீர் என்பனவாகும்.
3. பொழிலிடை வண்டின் ஒலி, ஓடைப் புனலிடை வாய்க்கும் கலி, குழலிசை, வீணை ஓசை, குழவிகள் மழலைப் பேச்சு, பெண்கள் கொஞ்சிடும் இதழின் வாய்ப்பு என்பனவாகும்.
4. ‘என்னுயிர்’ என்று கவிஞர் கூறுவது தமிழையாகும்.
5. புலவர், தமிழையும் தன்னையும் உடலுக்கும் உயிருக்கும் ஒப்பிடுகின்றார்.
6. கவிஞரின் அறிவினில் உறைவது தமிழாகும்.
7. ‘தமிழை என்னுயிர் என்பேன்’
   ‘தமிழும் நானும் மெய்யாய் உயிராய்’
   ‘தமிழ் என் அறிவினில் உறைதல்’
   தமிழின் விந்தையை எழுதத் தகுமோ?
   ‘உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே’
8. உவமானம்: குயில் கூவுதல்
   உவமேயம்: மனையாள் பேச்சு
   பொதுத்தன்மை: இனிமை
   மனைவி பேசுவது குயிலினது ஓசை போல இனிமையாக இருக்கிறதாகப் புலவர் கூறியுள்ளார். அல்லது
   குயிலினது ஓசையை மனைவியின் பேச்சுக்கு உவமையாகக் கூறியுள்ளார்.
9. ஒரு வாக்கியமாக இருப்பதை அவதானியுங்கள். உணர்வு

   வெளிப்படுத்தப்பட்டிருப்பதையும் அவதானியுங்கள்.

10. கழை – கரும்பு
    பொழில் - பூங்கா, சோலை
    கலி - ஓசை, சத்தம்
    பண் - இசை (வீணையினது)
    விழைதல் - விரும்புதல்
    அன்னை – தாய்
    மனையாள் - மனைவி
    உதயம்- தோற்றம்
    நனிபசு - சிறந்த பசு
    புனல் - நீர்
    குழல் - புல்லாங்குழல்
    குழவிகள் - குழந்தைகள்
    மெய் - உண்மை
    சந்ததம் - நிதமும்
    பரிதி - சூரியன்
    மதுரம் - இனிமை

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடலின் பிரதான கருத்தைக் கூறுவார்.
- கவிஞர் தமிழ்மொழிமேல் கொண்ட பற்றுதலை எடுத்துக் காட்டுவார்.
- உவமையணிகளை விளக்குவார்.
- பாடலின் இரசனையை வெளிப்படுத்துவார்.
- புதிய சொற்களின் பொருளை எழுதுவார்.
- பாடலை ஓசையுடன் பாடுவார்.
- தமிழின் சிறப்பைத் தாமும் விளக்குவார்.

## இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்

## செயற்பாட்டுப் பத்திரம்

1. இப்பாடலில் கவிஞர் கூறியுள்ள முக்கிய கருத்து யாது?
2. கவிஞர் 'இனியன' என்று கூறுவன யாவை?
3. கவிஞர் 'விழைகுவன்' என்று கூறுபவை எவை?
4. 'என்னுயிர்' என்று கவிஞர் கூறுவது எதனை?
5. தமிழையும் தன்னையும் புலவர் எதற்கு ஒப்பிடுகிறார்?
6. கவிஞரின் அறிவினில் உறைதல் எது?
7. பாரதிதாசன் தமிழ்மேல் கொண்ட பற்றுதலைக் காட்டும் பாடல் அடிகளைத் தருக.
8. பின்வரும் அடியிலுள்ள உவமையை விளக்குக : 'குயில் போல் பேசிடும் மனையாள்'
9. இப்பாடலைப் படித்து முடித்ததும் உமது உள்ளத்தில் எழும் உணர்வினை ஒரு வாக்கியத்தில் எழுதுக.
10. பின்வரும் சொற்களின் பொருள் தருக: கழை, நனிபசு, பொழில், புனல், கலி, குழல், பண், குழவிகள், விழைதல், மெய், அன்னை, சந்ததம், மனையாள், பரிதி, உதயம், மதுரம்.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.1:** பாடப்பகுதிகளை ஈடுபாட்டுடன் வாசிப்பார்.

**செயற்பாடு:** 'கண்ணம்மா என் குழந்தை' என்ற பாடலை ஈடுபாட்டுடன் வாசித்துக், கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

**நேரம் :** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**
- பாடநூல் ('கண்ணம்மா என் குழந்தை' என்ற பாடல்)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- அகராதி
- ஒலிப்பதிவுக் கருவி
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.1.1**

- பாடலொன்றை ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்து, அல்லது பாடலொன்றைக் கரும்பலகையில் காட்சிப்படுத்தி மாணவர் ஒருவரைப் பாடச் செய்யுங்கள்.
- பாடலொன்றைப் பாடும்போது / வாசிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? என மாணவரிடம் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
  பின்வரும் விடயங்களை மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

  - பாடலில் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்து (கருப்பொருள்)
  - பாடலின் பொருள்
  - புதிய சொற்கள்
  - அணிகள் (உவமையணி, உருவக அணி)
  - ஓசைச்சிறப்பு
  - இரசனை

(20 நிமிடங்கள்)

**படி 1.1.2**

- 'கண்ணம்மா என் குழந்தை' என்ற பாடலை மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே வாசிக்கச் செய்யுங்கள்.
- மாணவரை ஐந்து குழுக்களாக்குங்கள்.
- பாடலைப் பாடிப் பயிற்சி பெற வகை செய்யுங்கள்.
- குழுக்களிடையே சென்று தேவையான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- பின்னிணைப்பில் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தைக் குழுக்களுக்கு வழங்கி, அறிக்கையைத் தயாரிக்கச் செய்யுங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 1.1.3

- குழு நிலையில் தயாரித்த அறிக்கையை முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவைத் தெரிவு செய்து பாடலைப் பாடச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

1. பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு பாடியுள்ளார்.

2. கிளியே, கண்ணம்மா, களஞ்சியமே, கனியமுதே, பேசும் பொற்சித்திரமே, ஆடிவருந் தேனே

3. கவிஞருக்கு ஏற்படும் இன்பம்: கலிதீர்த்து ஏற்றம் புரிதல், உள்ளம் குளிருதல், ஆவி தழுவுதல், கருவம் ஓங்கி வளருதல், மேனி சிலிர்த்தல், கள்வெறி கொள்ளுதல், உன்மத்தமாகுதல்.
கவிஞருக்கு ஏற்படும் துன்பம்: சஞ்சலமாகுதல், நெஞ்சம் பதைத்தல், நெஞ்சில் உதிரம் கொட்டுதல்

4. குழந்தைகளின் செயல்களும் பலன்களும்
மழலை மொழியால் துன்பம் தீர்த்தல், முல்லைச் சிரிப்பால் மூர்க்கந் தவிர்த்தல்,
முகஞ்சிவத்தல் - மனம் சஞ்சலமாதல், நெற்றி சுருங்குதல் - நெஞ்சம் பதைத்தல்.
ஓடிவருதல் - உள்ளம் குளிருதல்
ஆடித் திரிதல் - ஆவி தழுவுதல்
கன்னத்தில் முத்தமிடல் - கள்வெறி கொள்ளல்
கண்ணில் நீர் வடிதல் - நெஞ்சில் உதிரங்கொட்டுதல்

5. உருவக அணிகள்
குழந்தையைப் பின்வருமாறு உருவகித்துக் கூறுகின்றார். சின்னஞ்சிறு கிளி, செல்வக் களஞ்சியம், கனியமுது, பேசும் பொற் சித்திரம், ஆடிவருந்தேன், கண் பாவை,

6. ஒன்பதாம் பாடலில் காணப்படும் சிறப்பு: ஏடுகள் சொல்லும் கதைகளைப் பார்க்கிலும் குழந்தை கூறும் கதைகள் இன்பமானவை. தெய்வம் காட்டும் அன்பிலும் பார்க்க குழந்தை காட்டும் அன்பு சிறந்தது; உயர்வானது.

7. பத்தாம் பாடலில் காணப்படும் சிறப்பு : வைரமணிகளை மார்பில் அணிவதிலும் பார்க்க, குழந்தையை மார்பில் அணைப்பது சிறந்தது; இன்பம் பயப்பது.

8. செல்வங்களில் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம். விளக்கம் நயந்து எழுதப்பட்டுள்ளதா என்பதைக் கவனியுங்கள்.

9.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| களஞ்சியம் | - | பண்டகசாலை | ஆவி | - | உயிர் |
| கலி | - | துன்பம் | சஞ்சலம் | - | துன்பம் |
| ஏற்றம் | - | சிறப்பு | உதிரம் | - | இரத்தம் |
| கனி | - | பழம் | மூர்க்கம் | - | கோபம் |
| சீர | - | சிறப்பு | | | |

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடலின் மையக் கருத்தைக் கூறுவார்.
- கவிஞரின் மன உணர்வினை விளக்கிக் கூறுவார்.
- பாடலில் காணப்படும் உருவக அணிகளை இனங்கண்டு கூறுவார்.
- பாடலைப் பாடி முடித்ததும் தானடையும் உணர்வை வெளிப்படுத்துவார்.
- தான் நயந்தவற்றை விளக்குவார்.
- பாடலைப் பாடி நயப்பார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

1. இப்பாடலில் பாரதியார் யாரைப் பற்றிக் கூறியுள்ளார்?

2. பாரதியார் குழந்தையை எவ்விதம் விளித்துப் பாடுகிறார்?

3. குழந்தையினால் கவிஞருக்கு ஏற்படும் இன்பமும் துன்பமும் யாவை?

4. கவிஞர் காட்டும் குழந்தையின் செயல்களும் பலன்களும் எவை?

5. இப்பாடலில் காணப்படும் உருவக அணிகளைத் தருக.

6. ஒன்பதாம் பாடலில் காணப்படும் சிறப்புகளைச் சுருக்கமாக விளக்குக.

7. இப்பாடலில் உங்களுக்குப் பிடித்த பாடல் அடிகளை எழுதி விளக்கம் தருக.

8. பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.

   களஞ்சியம், கலி, ஏற்றம், கனி, ஆவி, சஞ்சலம், உதிரம், மூர்க்கம், சீர்.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.3:** படைப்புக்களை நயந்து அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**செயற்பாடு:** புதுமைப் பித்தனின் 'காலனும் கிழவியும்' என்ற சிறுகதையை வாசித்துக் கருத்துக்களை வெளியிடுவோம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**
- பாடநூல் ('காலனும் கிழவியும்' எனும் சிறுகதை)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- அகராதி
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.3.1**

- 'மாணவரை வாசிக்கத் தூண்டுவதில் சிறுகதைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன' என்ற கூற்றைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- சிறுகதைகள் நம்மை ஏன் வாசிக்கத் தூண்டுகின்றன? என்ற வினாவை வினவிக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களை மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- சிறுகதையின் கரு
- கதாபாத்திரங்களின் பண்புகள், கதைக்களம்
- சிறுகதையின் ஆரம்பம், வளர்ச்சி, முடிவு
- ஆசிரியரின் மொழி நடை
- படிப்பினைகள்
- இரசனை
- வர்ணனை
- காட்சிகள்
- புதிய சொற்கள்

(10 நிமிடங்கள்)

**படி 1.3.2**

- பாடநூலிலுள்ள (காலனும் கிழவியும்) என்ற சிறுகதையைத் தனித்தனியாக வாசிக்கும்படி மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.
- மாணவரை ஐந்து குழுக்களாக்குங்கள்.
- பின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட செயற்பாட்டுப் பத்திரத்தைக் குழுக்களுக்கு வழங்கி, அறிக்கையைத் தயாரிக்கச் செய்யுங்கள்.

(70 நிமிடங்கள்)

படி 1.3.3

- குழுக்கள் தாம் தயாரித்த அறிக்கையை முன்னிலைப்படுத்த வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

1. கதாசிரியரின் இயற்பெயர் : சோ.விருத்தாசலம்
   - புனைபெயர் - புதுமைப்பித்தன் காலம் (1906 – 1948)
   - சாப விமோசனம், கபாடபுரம், அகலிகை, காஞ்சனை, துன்பக்கேணி, ஒருநாள் கழிந்தது, பொன்னகரம், காலனும் கிழவியும் போன்ற சிறுகதைகள் கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.
   - 'சிறுகதை மன்னன்' எனச் சிறப்பிக்கப்பட்டார்.
   - மத்தியதர வர்க்கப் பிரச்சினைகளையே தமது சிறுகதைகளில் சுட்டிக்காட்டினார்.
   - சென்னைத் தமிழையும், எள்ளல் கலந்த ஒரு நகைச்சுவை நடையையும் தமது சிறுகதைகளில் பயன்படுத்தியுள்ளார்.

2. கதாபாத்திரங்களின் குணாதிசயங்கள்:

   தர்மராஜா: தன் கடமையை எப்படியாவது செய்து முடிக்க வேண்டும் என்ற முயற்சியுடையவன். யமனெனினும் இரக்க குணம் கொண்டவன்.

   மருதாயி: மன உறுதியும் சாமர்த்தியமும் கொண்டவள், எச்சந்தர்ப்பத்திலும் பதறாதவள்.

   மாடசாமி: துடிப்பான இளைஞன். கிழவியின் மேல் பாசம் கொண்டவன். கிழவிக்குத் துணையாக வாழ்பவன்.

3. புதுமைப்பித்தனின் மொழி நடை: சிறு சிறு வாக்கியங்கள், நகைச்சுவை கலந்த நடை, பாத்திரங்களுக்கேற்ற பேச்சு மொழி, தனித்துவமான சொல்லாட்சி (வெள்ளைக் கோயில் - சுடுகாடு) பாத்திரங்களின் குணவியல்புகளை வர்ணித்தலின் சிறப்பு, எள்ளி நகையாடும் தன்மை, புதிய விடயங்களுக்குப் புராண கதாபாத்திரங்களைக் கையாளுதல்.

4. சிறுகதையின் தொடக்கம்: உதாரணம்:

   கதைக்களம் பற்றிய விளக்கமாக அமைந்துள்ளது. தொடர்ந்து வாசிக்கும் ஆவலைத் தூண்டுவதாக உள்ளது.

   சிறுகதையின் முடிவு: உதாரணம்:

   இரசிக்கக் கூடியதாக உள்ளது.

5. இரசித்தமைக்கான காரணங்களை முன்வைக்கும் சிறப்பைக் கவனியுங்கள்.

6. சிறுகதை பற்றிய கருத்து : உதாரணம்:

'நம்பிக்கையுடன் வாழ்பவர்கள் யமனுக்கும் அஞ்சத் தேவையில்லை' என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் நகைச்சுவையுடன் கதை எழுதப்பட்டுள்ளது. கதையின் ஆரம்பம் கதையைத் தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது. பேச்சுவழக்கில் அமைந்த மொழிநடை சுவாரசியமாக உள்ளது.

7. உதாரணம்: மனஉறுதி கொண்டவள். யமனையும் தனது பேச்சால் மடக்கும் சாமர்த்தியம் உடையவள். நம்பிக்கையுடன் வாழ்பவள்.

8. உதாரணம்: தன் கடமையை நிறைவேற்றுவதற்காகப் பலவழிகளில் முயற்சிப்பவன்.

9. உதாரணம்: முனிஸீபு, கும்பினிக்காரன், சம்பிரதாயங்கள், ஜாஸ்தி, புறக்கடை

10. கதை புலப்படுத்தும் செய்தி : அர்த்தமுள்ள மானிட வாழ்வு, கிழவியின் மனவுறுதி

11. எழுதிய விடயங்களைக் கவனியுங்கள்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சிறுகதையின் கருவைக் கூறுவார்
- கதாசிரியர் பற்றி விளக்குவார்.
- சிறுகதையின் அமைப்பினை விளக்குவார்.
- பாத்திரங்களின் குணாதிசயங்களை எழுதுவார்.
- கதையில் தான் இரசித்தவற்றைச் சுவைபடக் கூறுவார்.
- கதாசிரியரின் தனித்தன்மைகளை விளக்கிக் கூறுவார்.
- கதைகளை வாசித்து விமர்சிப்பார்.
- புதுமைப்பித்தனின் கதைகளைத் தேடி வாசிப்பார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

1. 'காலனும் கிழவியும்' என்ற சிறுகதையின் ஆசிரியர் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
2. பின்வரும் கதாபாத்திரங்களின் குணாதிசயங்கள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
    1. தர்மராஜா 2. மருதாயி 3. மாடசாமி
3. புதுமைப் பித்தனின் மொழிநடை பற்றி விளக்குக.
4. சிறுகதையின் தொடக்கம், முடிவு பற்றிய உமது கருத்தைத் தருக.
5. நீங்கள் இரசித்து வாசித்த ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி, அதற்கான காரணத்தையும் தருக.
6. 'காலனும் கிழவியும்' என்ற சிறுகதை பற்றிய உங்கள் கருத்துக்களைத் தருக.
7. மருதாயி கிழவியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எழுதுக.
8. தர்மராஜாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எழுதுக.
9. இக்கதையில் வரும் புதிய சொற்களைப் பட்டியற்படுத்துங்கள்.
10. கதை புலப்படுத்தும் செய்தி யாது?
11. இக்கதையை வாசித்துமுடித்தபின்பு உங்கள் உள்ளத்தில் எழும் உணர்வுகளை எழுதுக.

## பின்னிணைப்பு 1

**ஆசிரியர்களுக்கான மேலதிக குறிப்பு:**

மார்கண்டேயர் - மிருகண்டு முனிவரின் மகன். இவர் தமது ஆயுளெல்லை பதினாறென்பதை அறிந்து தீர்க்காயுள் பெறக் கருதிச் சிவமூர்த்தியைப் பூசித்து வந்தார். ஆயுளின் முடிவில் யமன் வந்து, பாசக்கயிறு வீச, அவர் சிவபூசையினின்று நிலை தவறாதவராயிருந்தார். சிவமூர்த்தி சிவலிங்கத்திடத்திலிருந்து உக்கிரமூர்த்தியாய் யமனுக்கு முன் தோன்றி யமனை விழ உதைத்து, மார்க்கண்டேயர் சிரஞ்சீவியாக பதினாறு வயதுடனே இருக்க அருளிச் செய்தார்.

**தேர்ச்சி: 4.0** **இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்தல்.**

**தேர்ச்சி அலகு 4.1:** இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.

**செயற்பாடு:** பாரதியாரின் 'தமிழ்' என்ற தலைப்பிலமைந்தக் கவிதையை வாசித்துக் கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம் :** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**
- 'தமிழ்' கவிதை
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

படி 4.1.1

- வகுப்பறையில் தமிழ்த்தாய் வாழ்த்தினை ('வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ் மொழி') மாணவர் எல்லோரும் சேர்ந்து பாடுமாறு கூறுங்கள். ஆசிரியரும் சேர்ந்து இசையுடன் பாடி தமிழ்த்தாய்க்கு வணக்கம் கூறி, ஒரு மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்துங்கள்.
- தமிழ்த்தாய் வாழ்த்தினைப் பாடியவர் யார்?
- பாரதியார் கவிதைகளில் உங்களுக்குப் பிடித்த கவிதைகள் எவை?
- பிடித்தமைக்கான காரணங்கள் யாவை?

போன்ற வினாக்களை வினவிப் பின்வரும் விடயங்களை மாணவருக்குத் தெளிவுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.

- பாரதியார் பற்றிய அறிமுகம்
- பாரதியும் தமிழும்
- மொழிநடை
- பொருள்
- உத்தி
- அறக்கருத்துக்கள்
- படிப்பினைகள், மானுட விழுமியங்கள்
- வாழ்வியல் அம்சங்கள்
- மானுட நேயம்
- பொறுப்புணர்வு

(20 நிமிடங்கள்)

படி 4.1.2

- மாணவரை நான்கு குழுக்களாக்குங்கள்.
- கவிதையை ஒவ்வொரு குழுவும் வாசிப்பதற்கு நேரம் வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை நிரப்ப வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை வகுப்பு நிலைக்குக் கொண்டு வாருங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தைக் குழுவில் உள்ள ஒருவர் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 4.1.3

- குழுநிலையில் தொகுத்த அறிக்கையை முன்னிலைப்படுத்தும் போது, எழுமாற்றாக வினாக்களை வினவி, கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- ஏனையோர் விடயத்தைக் கேட்டுக் கருத்துக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களின் விடைகளின் பொருத்தப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, பின்வரும் கருத்துக்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

**பாரதியாரின் வேட்கை:**

1. தமிழ் மக்கள் தம் தாய்மொழியை நேசித்து வாழ்த்துவதோடு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டும் என்பதாகும்.

**அறக்கருத்து**

2. **ஒருவன் தனது தாய் மொழியை நேசிக்கவும் மதிக்கவும் வேண்டும்.**
    1. நம் தாய்மொழியைப் பேணுதல்.
    2. அதை உலகமெலாம் பரப்புதல்.
    3. சிறப்புக்குரியவர்களைப் போற்றுதல்.
    4. புகழ்ச்சியோடு வாழ்தல்.
    5. பிறநாட்டு நூல்களையும் எம் மொழியில் பெயர்த்தல்.
    6. என்றும் இறவாத புகழுடைய நூல்களை இயற்றுதல்.
    7. பழங்கதை பேசுவதில் மகிமை இல்லை.
    8. உள்ளத்தில் ஒளியும் அதன் மூலம் வாக்கிலே ஒளியும் உண்டாக்குதல்.
    9. கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுதல்.
    10. தமிழமுதின் சுவை உண்டார் அமரர் சிறப்பினைப் பெறுதல்.
3. **மானுட நேயம்**
    - i. பாமரராய், விலங்குகளாய் இகழும் வண்ணம் வாழுதல் ஆகாது.
    - ii. உண்மையான உழைப்பாளர்களைப் போற்றும் தன்மை.
    - iii. பிறநாட்டு நல்லறிஞர்களையும் போற்றுதல்.
    - iv. எல்லோரையும் மதித்தல்.
    - v. அமரர் சிறப்புக்கு வழிவகுத்தல்.

4. **பாரதியாரின் பொறுப்புணர்வு**

பாரதியாரின் தமிழ்ப் பற்றும், தமிழ்ப் பெரியார் மீதுள்ள பற்றும், பிற நாட்டாரைப் போற்றும் தன்மையும், பெயரளவில் மட்டும் நாம் தமிழனாய் இருந்துவிடாது பணி செய்யுமாறு தூண்டுகின்றன.

5. **மொழிக்கையாட்சி**

படிக்காத பாமர மக்களுக்கும் உணர்வைத் தூண்டும் எளிமையான நடை / மக்களை முன்னிலைப்படுத்தி விளிக்கும் ஆற்றல் / தான் கூறவந்த கருத்தை வாசகரும் ஏற்கும் வகையில் கூறும் திறன்.

6. **படிப்பினைகள்:**

1. தாய்மொழியாம் தமிழைப் போற்றி வளர்த்தல்.
2. மொழியாற்றலில் ஒருவன் மேன்மை அடைதல்.
3. பழங்கதைகள் பேசுவதில் பயனில்லை.
4. உள்ளத்திலே தெளிவு வாக்கிலே சிறப்பை உண்டாக்கும்.
5. கலையும் கவியும் பெருகும்போது வாழ்விலே மேன்மை உண்டாகும்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாரதி பற்றியும் அவர் தமிழ் மீது கொண்ட ஈடுபாடு பற்றியும் அறிந்து கொள்வார்.
- கவிதையில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் அம்சங்கள் பற்றி எடுத்துக் கூறுவார்.
- கவிதையில் கூறப்படும் அறக்கருத்தைத் தெரிந்து கொள்வார்.
- கவிதையில் கூறப்படும் மானுட நேயம் பற்றி எடுத்துக் கூறுவார்.
- பாரதியின் மொழியாட்சியினை விளக்கிக் கூறுவார்.
- கவிதையினூடாகக் கூறப்படும் படிப்பினைகள் பற்றி எடுத்துக் கூறுவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

1. பாரதி தமிழ்மொழி மீது கொண்டுள்ள ஈடுபாடு எவ்வாறு புலப்படுகின்றது?
2. தமிழ்மொழி சிறப்புற்று விளங்க என்னென்ன செய்ய வேண்டும் என்று பாரதி கூறுகிறார்?
3. இக்கவிதைப் பகுதியில் மானுடநேயம் பற்றிக் கூறும் வகையினை விளக்குக.
4. பாரதியின் பொறுப்புணர்வு உமது உள்ளத்தில் எத்தகைய உணர்வினைத் தோற்றுவிக்கிறது?
5. பாரதியின் மொழியாட்சி பற்றி யாது கூறுவீர்?

**தேர்ச்சி: 4.0** **இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 4.1:** இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.

**செயற்பாடு:** **'செந்தமிழ்த்தாய்'** என்னும் கவிதைப் பகுதியினை வாசித்து, நயந்து கருத்துக்களைப் பகுத்து நோக்குவோம்.

**நேரம்:** 120 மணித்தியாலம்

**தர உள்ளீடு:**
- 'செந்தமிழ்த்தாய்' கவிதைப் பிரதிகள் (பாடநூல்)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 4.1.1**

- பின்வரும் கவிதையை முன்வைத்து ஆரம்பியுங்கள்.

**"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்**
**கழையிடை ஏறிய சாறும்**
**பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்**
**நனிபசு பொழியும் பாலும் - தென்னை**
**நல்கிய குளிரிளநீரும்**
**இனியன என்பேன் எனினும் - தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்!"**

- இக்கவிதையைக் கரும்பலகையில் அல்லது அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- ஓசைநயத்தோடு பாடிக் காட்டுங்கள். மாணவரை பாட / வாசிக்கச் செய்யுங்கள்.
- பாடலில் இடம் பெற்றுள்ள விடயங்கள் தொடர்பாகப் பின்வரும் வினாக்களை வினவுங்கள்.
  - இப்பாடலில் இனியன எனக் கூறப்படுபவை எவை?
  - அவற்றினும் இனிமையாகப் புலவர் எதனைக் கூறியுள்ளார்?
  - நாம் ஏன் தமிழை இனிமையானது எனக் கூறுகிறோம்?

- வினாக்களை வினவிக், கலந்துரையாடுவதன் மூலமாகப் பின்வரும் விடயங்கள் பற்றி மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

> - கவிதையின் கருப்பொருள்
> - வெளிப்படும் உணர்வு / இரசனை
> - படிப்பினை
> - வாழ்வியல் அம்சங்கள்
> - உத்திகள்

(20 நிமிடங்கள்)

படி 4.1.2

- மாணவரை நான்குபேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- கவிதையை மாணவருக்கு வழங்குங்கள்.
- இசையோடு பாடக்கூடிய ஒருவர் பாட, குழுவில் ஏனையோர் செவிமடுத்தல் / முடியாதவிடத்து ஓசையோடு படிக்க வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவருக்கு வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 4.1.3

- வகுப்பு நிலையில் அமர்ச் செய்யுங்கள்.
- குழுவின் சார்பில் ஒருவர் முன்வந்து தான் எழுதிய விடைகளை முன்வைக்க வகை செய்யுங்கள்.
- ஏனைய குழுவினரும் தம் கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- பாடல் தொடர்பாகப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடித் தெளிவுபடுத்துங்கள்.

> - **தொடர்கள் சந்தி பிரித்தல்**
>   1. அந்தமி லெம்மொழி மாதா .....
>      அந்தம் இல் எம் மொழி மாதா
>   2. எம்செவிக்கினிக்கின்ற மொழியெது தானோ
>      எம் செவிக்கு இனிக்கின்ற மொழி எது தானோ
> - தமிழ்மொழியைத் தாயாக உருவகித்தல்
> - தமிழ்த்தாயின் இன்னல்கள் கண்டு மனம் நோதல்
> - தோன்றும் உணர்வு – அவலம்
> - ஆதங்கத்தை வெளிப்படுத்தும் சொற்றொடர்கள்;
>   - மாதா படும் அல்லலைத் தீர்க்க அறிவு வராதா
>   - அன்னை மொழிதனை நாமோ – வெறுத் தருவருத் தவமதித் திடலழகாமோ
>   - ஐயோ! அருமந்த தமிழினை அறியாது கெட்டோம்
>
> (40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடலின் பொருளினைக் கூறுவார்.
- அரும்பதங்களை விளக்குவார்.
- பாடலின் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட விழுமியக் கருத்துக்களை விளங்கிக் கொள்வார்.
- தமிழ்மொழியின் பெருமைதனை அறிந்து அதனை வளர்க்க முற்படுவார்.
- தமிழ்மொழியே நம் தாய் மொழி என்ற அடிப்படைக் கொள்கையில் உறுதியாயிருப்பார்.
- தமிழ்மொழி என்றும் காக்கப்பட வேண்டியதொன்றாகும் என்ற கருத்தில் உறுதியாயிருப்பார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

1. பாடலின் பொருளைச் சொந்த நடையில் எழுதுங்கள்.
2. பின்வரும் தொடர்களைச் சந்தி பிரித்து எழுதுங்கள்.
   - அந்தமி லெம்மொழி மாதா.....
   - எம்செவிக்கினிக்கின்ற மொழியெது தானோ....
3. தமிழ்மொழியை ஆசிரியர் எவ்வாறு உருவகிக்கின்றார்?
4. ஆசிரியரின் ஆதங்கத்திற்கான காரணங்கள் எவை?
5. இச்செய்யுளைப் படிக்கும்போது, உங்கள் மனதில் தோன்றும் உணர்வு யாது?

**தேர்ச்சி: 1.0** — **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளியிடுவார்.**

**தேர்ச்சி அலகு 1.4:** விமர்சன நோக்குடன் படைப்பு பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.

**செயற்பாடு:** **'தமிழ்' 'தமிழின் இனிமை' 'செந்தமிழ்த்தாய்'** ஆகிய மூன்று கவிதைப் பகுதிகளையும் வாசித்து, ஒப்புநோக்கி விமர்சனம் செய்வோம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**
- பாடநூல் கவிதைப் பகுதிகள் (தமிழ், தமிழின் இனிமை, செந்தமிழ்த்தாய்)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.4.1**

- **பின்வரும் பாடலடிகளைக் கரும்பலகையில் எழுதி / அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.**

பாடல் 1: **சீதமணி நெடு வானக்குளத்திடை**
**வெண்ணிலாவே — நீ**
**தேசு மிகுந்த வெண்தாமரை போன்றனை**
**வெண்ணிலாவே**

**-பாரதியார்-**

பாடல் 2 : **தயிர்க்கடலில் வெண்ணெய்போல — வெண்ணிலாவே**
**தனிவிசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே**
**பெண்கள் முகம்போல் வருவாய் வெண்ணிலாவே**
**பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே**

**-சோமசுந்தரப் புலவர் -**

- இரு பாடல்களிலுமுள்ள கருப்பொருள் யாது?
- இரு பாடல்களிலும் மொழிநடை, ஓசை எவ்வாறு அமைந்துள்ளன?
- இரு பாடல்களிலுமுள்ள ஒத்த தன்மைகள் யாவை?
- சிறப்பான தன்மைகள் எவை?

- இவ்வாறான வினாக்களை வினவிப், பின்வரும் விடயங்கள் உள்ளடங்கக் கூடியதாகக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ○ கருப்பொருள்<br>○ மொழிநடை<br>○ உத்தி<br>○ கவிஞனின் கற்பனை<br>○ வாழ்வியல் அம்சங்கள்<br>○ படிப்பினைகள்<br>○ மொழிப்பிரயோகம் / மொழிநடை என்பவற்றை ஒப்பிட்டு நோக்கி விமர்சித்தல். |

(20 நிமிடங்கள்)

படி 1.4.2

- மாணவரை ஆறு குழுக்களாகப் பிரித்து, பின்னிணைப்பாகவுள்ள தமிழ், தமிழின் இனிமை, செந்தமிழ்த்தாய் ஆகிய கவிதைப் பிரதிகளை ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள்.
- அனைவரும் தனித்தனியாக வாசிக்கவும், கவிதையின் சிறப்புக்களைக் கலந்துரையாடி அறிவதற்கும் வழிப்படுத்துங்கள்.
- பின்னிணைப்பாகவுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை அனைவருக்கும் வழங்கி, அறிவுறுத்தலின் படி செயற்பட வழிப்படுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 1.4.3

- எல்லாக் குழுக்களும் குறிப்பிடப்பட்ட எல்லாத் தலைப்புக்களிலும் தமது கருத்துக்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுவினர் தம் கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மனதிற்கொண்டு, கருத்துக்களைத் தெளிவுபடுத்துங்கள்.

| | |
|---|---|
| • **தலைப்பின் பொருத்தம்** | |
| மூன்று கவிஞர்களும் பாடும் பொருள் ஒன்று எனினும், தொனிப்பொருள் மாறுபாட்டுக்கு ஏற்ப தலைப்பு அமைந்திருத்தல் | |
| • **உள்ளடக்கம்** | |
| பாரதியார் : | தமிழ்மொழியை வளர்த்தலால் தமிழ் வாழும் என்பது |
| பாரதிதாசன்: | தமிழின் சிறப்புக்களை உணர்ந்து, சிறப்பானவற்றோடு ஒப்பிட்டு உயர்வு படுத்துவது |
| சோமசுந்தரப் புலவர்: | தமிழைத் தாயாக உருவகித்து, தாயின் நலிவைக்கண்டு வருந்தி, அதைத் தீர்க்கும் வகை தேடல். |
| • **மொழிநடை** | |
| பாரதியார் : | இலகு தமிழ், பேச்சுத்தமிழ் |
| பாரதிதாசன்: | இலக்கிய வழக்குச் சொற்கள் - எளிதானவை |
| சோமசுந்தரப் புலவர்: | இறுக்கமான செய்யுள் நடை<br>எதுகை, மோனைச் சிறப்புக்கள் |
| **இரசனை / உணர்ச்சி** : | மொழிநடை / சொல்லாட்சிகள் |
| **உணர்ச்சி வெளிப்பாடு** : | தமிழின் இனிமையினை ஒப்பிட்டு நயத்தல் |

உயிரை வளர்ப்பது தமிழ் எனல்

- **உத்திகள்**

வாசகரை விளித்துக்கூறும் பாங்கு; வினா மூலம் விழிப்புணர்வு
உ-ம்: தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்
தமிழின் விந்தை எழுதத் தகுமோ

- **வாசகரிடையே அவல உணர்வைத் தூண்டும் உத்தி**

உ-ம்: அல்லலைத் தீர்க்க அறிவு வராதா
அருவருத் தவமதித் திடலழகாமோ

- **வாழ்வியல் அம்சங்கள்** : மனித வாழ்வினை இயற்கை அழகோடும் அனுபவங்களோடும் இசைவாக்குதல்.

**படிப்பினைகள் / மானுடநேயம்**

1. தமிழன் எனப் பெயர் பூண்டால் மட்டும் போதாது. பணிசெய்தல் வேண்டும்.
2. தாய்மொழியைப் பேணிக்காத்தல்.
3. இயற்கையினை அனுபவிப்பது கலைக்கு ஆதாரம்.
4. சிறப்புடைய பெரியோர்களையும் அவர்தம் பணிகளையும் போற்றுதல்.
5. இலக்கியங்கள் வாழ்வை வளம்படுத்தும்.

- இத்தகைய உதாரணங்கள் போல் ஆசிரியர்களும் உதாரணங்களை முன்வைத்தல்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- இலக்கியத்தின் கருப்பொருளைக் கூறுவார்.
- அதில் கையாளப்பட்டுள்ள உத்திகள், அணிகள், சிறப்புக்களை விளக்குவார், ஒப்புநோக்குவார்.
- வாழ்வியல் அம்சங்கள், அறக்கருத்துக்கள், படிப்பினைகளை ஒப்புநோக்கி விமர்சிப்பார்.
- கவிஞரின் கற்பனை ஆற்றலை மதிப்பிடுவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

அறிவுறுத்தல்கள்:

- எல்லாக் குழுவினரும் மூன்று கவிதைப் பகுதிகளையும் நன்றாக வாசியுங்கள்.
- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் மூன்று கவிதைகளையும் ஒப்பிட்டு நோக்கி விமர்சனம் செய்யுங்கள்.

விடயங்கள்:

1. தலைப்பின் பொருத்தப்பாடு
2. உள்ளடக்கம்
3. உத்திகள்
4. வாழ்வியல் அம்சங்கள்
5. படிப்பினைகள் / மானுட நேயம்

- இம்மூவரில் தமது கருத்துக்களைக் கவி வடிவில் முன்வைப்பதில் சிறந்து விளங்குபவர் யார்? உதாரணங்களுடன் விளக்குக.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளியிடுவார்.**

**தேர்ச்சி அலகு 1.3:** படைப்புக்களை நயந்து அவற்றின் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**செயற்பாடு:** நாட்டார் பாடலை நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவோம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு**
- பாடநூல் (தாலாட்டுப் பாடல் 'அணில் கோதா மாம்பழமே')
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- ஒலிப்பதிவுக் கருவி
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.3.1**

- ஏற்கெனவே கற்ற அல்லது தெரிந்த நாட்டார் பாடல் ஒன்றைப் பாடிக்காட்டுங்கள். அல்லது நாட்டார் பாடல் பாடத் தெரிந்த மாணவர் ஒருவரைப் பாடச்செய்யுங்கள். பாடலைப் பாடியபின் பின்வரும் வினாக்களை வினவுங்கள்.
    - நாட்டார் பாடல் எச்சந்தர்ப்பத்தில் பாடப்படுகின்றது?
    - ஏன் பாடப்படுகின்றது?
    - அதனை ஏன் நாட்டார் பாடல் என்கிறோம்?
    - நாட்டார் பாடல் என்றால் என்ன?
    - அது எவ்வாறு அமைகின்றது?

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கக் கூடியதாகக் கலந்துரையாடுங்கள்.

    - **அனுபவப் பகிர்வு**
    - **இரசனை**
    - **தனியாள், சமூக விமர்சனம்**
    - **நாட்டார் பாடலின் பண்புகள், விழுமியங்கள்**
    - **நாட்டார் பாடல் பாடப்படும் சந்தர்ப்பங்கள்**
    - **நாட்டார் பாடலின் பயன்பாடு**

(20 நிமிடங்கள்)

படி 1.3.2

- மாணவரை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- குழுக்களுக்குப் பாடலை வழங்குங்கள்.
- குழுவில் ஒருவர் பாட, ஏனையோர் செவிமடுக்க வைப்பதோடு, சேர்ந்து பாடுவதற்கும் இடமளியுங்கள்.
- பாடலில் இடம்பெற்றுள்ள விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அறிக்கையைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுங்கள். (60 நிமிடங்கள்)

படி 1.3.3

- மாணவரை வகுப்பு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திர விடைகளை முன்வைக்கச் செய்யுங்கள்.
- பாடலை ஆக்கிய குழுவினரை இணைந்து பாடச் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்.

- **தாலாட்டுப்பாடல் பாடுவது**
  குழந்தையைத் தூங்கவைக்க
  தனது மனவுணர்வுகளை வெளிப்படுத்த
- **குடும்ப, சமூக உறவுகளைப் பேணுதல்**
  குழந்தைப் பருவத்திலேயே உறவுகளின் சிறப்பினை உணர வைத்தல்.
- மல்லிகைப் பூச்செண்டு
  பால் வார்க்கும் சங்கு
  அமுதூட்டுங்கை
  அரைஞாண்கயிறு
  } மாமி, ஆச்சி, அண்ணா இவர்கள் அடித்ததால் குழந்தை அழவில்லை. அடிக்கவும் மாட்டார்கள். இங்கு, இவர்கள் இவற்றால் அடித்ததாகக் கூறப்படுவது குழந்தைமீது இவர்கள் வைத்துள்ள அதிக பிரியத்தைக் காட்டுவதற்காகவே ஆகும்.
- **ஆண்பனையின் நுங்கு** :
  ஆண்பனை காய்ப்பதில்லை. அதாவது அருமையாக வந்துதித்த குழந்தை என்று போற்றிப் பாடப்படுகின்றது
- **அணில்கோதா மாம்பழமே:**
  மாம்பழத்தை அணில் கோதாமல் இருக்காது. அணில் கோதாமல் இருக்கும் மாம்பழமாகக் குழந்தை காணப்படுகின்றது. இவ்வுவமை குழந்தையின் முழுமையான அழகைக் காட்டக் கையாளப்பட்டுள்ளது.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாடலின் சிறப்புக்களை / அது கூறும் விழுமியக் கருத்துக்களை எடுத்துக் கூறுவார்.
- நாட்டார் பாடலின் பயன்பாட்டினை விளக்குவார்.
- பாடலிலுள்ள ஓசை நயத்துக்கேற்ப, தாமும் பாடலை ஆக்குவார்.
- தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்
- சமூக உறவுகள் குழந்தைப் பருவத்திலேயே, வளர்க்கப்பட வேண்டும் என்ற மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.

## பின்னிணைப்பு 1

### செயற்பாட்டுப் பத்திரம் I

அணில் கோதா மாம்பழம் என்ற தாலாட்டுப்பாடலை ஆதாரமாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. தாலாட்டுப் பாடல் பாடுவதன் நோக்கம் யாது?
2. தாய் தாலாட்டும்போது, உறவினர்களையும் பாடலில் சேர்த்துக் கொள்வதன் காரணம் யாது?
3. உறவுகள் அடித்ததாகக் கூறப்பட்டுள்ள சொற்றொடர்களில் காணப்படும் சிறப்புகளை விளக்குங்கள்.
4. பின்வரும் சொற்றொடர்களை விளக்குங்கள்: 'ஆண்பனையின் நுங்கே', 'அணில்கோதா மாம்பழமே'

### செயற்பாட்டுப்பத்திரம் II

- தரப்பட்டுள்ள தாலாட்டுப் பாடலை அடியொற்றித் தொடர்ந்து 18-20 வரிகள் கொண்ட பாடலை ஆக்குங்கள்.
- இசையமைத்துப் பாடிப் பயிற்சி பெறுங்கள்.
  (பாத்திரமேற்று அபிநயத்துடனும் பாடலாம்)

| | |
|---|---|
| **தேர்ச்சி: 1.0** | **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.** |
| **தேர்ச்சி அலகு 1.2:** | படைப்புக்கள் மூலமாகத் தன்னையும் தனது குடும்பத்தையும் தான் சார்ந்த சமூகத்தையும் தான் வாழும் உலகத்தையும் விளங்கி, அவை பற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார். |
| **செயற்பாடு:** | தோணி' என்னும் சிறுகதையினூடாகச் சமூகத்தை விளங்கிக் கொள்வோம். |
| **நேரம்:** | 120 நிமிடங்கள் |
| **தர உள்ளீடு :** | - பாடநூல் ( 'தோணி' சிறுகதை)<br>- எழுதுதாள்<br>- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1 |

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.2.1**

'சிறுகதை சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி' என்ற கூற்றினைக் கரும்பலகையில் எழுதி, மாணவரைச் சிந்திக்கத் தூண்டி, விடயந் தொடர்பாகப் பின்வரும் வினாக்களை வினவுங்கள்.

- நீங்கள் சிறுகதைகள் வாசித்ததுண்டா?
- எவ்வாறான சிறுகதைகளை விரும்பி வாசிப்பீர்கள்?
- அதற்கான காரணங்கள் என்ன?
- பொதுவாகக் கூடுதலாக மக்கள் வாசிக்கும் கதைகள் எத்தகைய தன்மை வாய்ந்தவை?

- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கக் கூடியதாகக் கலந்துரையாடலை நடத்துங்கள்.

**சிறுகதையினூடாக:**

- **தனிமனித இயல்பு / உணர்வு**
- **எதிர்பார்ப்பு**
- **குடும்ப உறவுகள் - அவற்றில் ஏற்படக்கூடிய உறவும் - சிக்கலும்**
- **அதற்குரிய காரணங்களும், விளைவுகளும், தீர்வுகளும்.**
- **சமூகப் போக்கு – உலகப் போக்கு - இவற்றை விளங்கிக் கொள்ளல்.**

(20 நிமிடங்கள்)

படி 1.2.2

- மாணவரை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- 'தோணி' என்ற சிறுகதையின் பிரதிகளை ஒவ்வொரு குழுவிலுமுள்ளோருக்கும் வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு 1) வழங்கி, அதில் இடம்பெறும் ஐந்து உப தலைப்புக்களில் ஒரு தலைப்பினை தெரிவுசெய்து, ஒவ்வொரு மாணவனும் தனித்தனியே தனது கருத்துக்களைக் குறித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- பின்னர் ஒவ்வொரு குழுவிலும் குறிப்பிட்ட ஒவ்வொரு தலைப்பிலும் குறிப்பு எழுதிய மாணவர்களை மீண்டும் தனித்தனி குழுவாக அமைத்துத் தாம் குறித்த விடயங்கள் தொடர்பாக, கருத்துப் பரிமாற்றம் செய்து, அதனை முழுமைப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மீண்டும் தனது தாய்க்குழுவில் இணைந்து, தாம் எழுதிய கருத்துக்களைத் தமது குழுவினருக்கிடையில் கலந்துரையாடி செயற்பாட்டுப்பத்திரத்தை முழுமைப்படுத்த வாய்ப்பினை ஏற்படுத்துங்கள்.
- தமது செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்க தயார்ப்படுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 1.2.3.

- நிரப்பிய அறிக்கையைக் குழு நிலையில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த பின்னர், குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஏனையோர் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.
- எல்லாக் குழுவினரும் தமது செயற்பாட்டு அறிக்கையை முன்வைத்த பின்னர், அவற்றின் பொருத்தப்பாடு பற்றிக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- கதாசிரியர் பற்றிய தகவல்கள் :

1947ஆம் ஆண்டில் மலர்கள்' என்ற தலைப்பிலமைந்த கவிதையை 'வசந்தம்' என்ற இதழில் எழுதி, எழுத்துலக வாழ்வை ஆரம்பித்தவர் வ.அ. இராசரத்தினம். இவர் மூதூரைச் சேர்ந்தவர். சேனையூர் மகா வித்தியாலய அதிபராகப் பணியாற்றியவர். சிறுகதை, நாவல், நாடகம், மொழிபெயர்ப்பு என்று பல்வேறு துறைகளிலும் தடம் பதித்தார். கொழுகொம்பு, துறைக்காரன், கிரௌஞ்சப் பறவைகள் என்பவை இவரின் நாவல்கள். சமுதாயத்தின் பல்வேறு கோலங்களையும் பிரச்சினைகளையும் இலக்கிய உணர்வுடன் புலப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

- கதையின் மையக்கருத்து:

மீனவர்களின் அவல வாழ்வு

- கதை சொல்பவருடைய எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்
    1. 'தோணி' சொந்தமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. ஆனால் கதை முடியும் மட்டும் 'தோணி' கனவாகவே உள்ளது.
    2. இயற்கை கூடச் சதி செய்கிறது.
    உதாரணம்: பெண்ணின் தகப்பனார் கடலில் இறத்தல்.

- மீனவரின் அவலநிலை
    1. எவ்வளவு மீன் பிடித்தாலும் அவை அவர்களுக்குச் சொந்தமில்லை
    2. அவர்களின் உழைப்பும் அவர்களுக்குச் சொந்தமில்லை.
    3. வாழ்நாள் முழுக்கக் கடலுடனேயே வாழ்கின்றார்கள்.
    4. முதலாளிகள் இவர்களைச் சுரண்டிக்கொண்டே இருப்பதால் இவர்களால், சொந்தமாக ஒரு தோணி கூட வாங்க முடிவதில்லை.

- 1. பாத்திரம் ஒன்றின் அபிலாஷைகளையும் ஏக்கங்களையும் வெளிப்படுத்துவதனூடாகக் கதையை ஆசிரியர் நகர்த்திச் செல்கின்றார்.
  2. வர்ணனைகள், உவமைகள் கூட மீனவர்களின் வாழ்வியல் அம்சங்களுடன் தொடர்புபட்டே அமைகின்றன.

உ-ம்: நீரின் இடைமட்டத்தில் ஆடும் பாசிக்கொடியைப் போல எப்போதும் மென்மையாக ஆடிக்கொண்டுதான் அவள் நடப்பாள். கற்பாரில் நிற்கும் செம்மீனவப்பெண் போலச் செக்கச் செவேலென்று அழகாக இருப்பாள். வண்டலிலே மின்னும் கிளிஞ்சல் போல் இருக்கும் அவள் கண்களை இன்றைக்கு முழுவதுமே பார்த்துக் கொண்டிருக்கலாம்.

- கதையினை வாசித்து முடித்த பின்னர், எந்த ஒரு சமூகத்தையும் அடக்கி ஒடுக்கக் கூடாது என்றும், உழைப்பாளி எவனோ அவனுக்கு நியாயமான முறையில் அவனது உழைப்பு போய்ச் சேர வேண்டும் என்றும், எந்த மனிதனும் மனிதனாக மதிக்கப்பட வேண்டும், அவனது கனவுகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தோன்றும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- சிறுகதைகளை வாசித்து விமர்சிப்பார்.
- சிறுகதைகளை வாசிப்பதன் மூலம் தான் வாழும் உலகினை விளங்கிக் கொள்வார்.
- இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் என்பதை உணர்ந்து கொள்வார்.
- கதைகளைத் தேடி வாசிக்கும் மனப்பாங்கினைப் பெறுவார்.
- சிறுகதைகள் ஊடாகக் கூறப்படும் படிப்பினைகளை விளக்கிக் கூறுவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

'தோணி' என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் தலைப்புகளின் கீழ் விடயங்களைத் தொகுத்து முன்வையுங்கள்.

(குழுவில் உள்ள உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பைத் தெரிவு செய்து, விடயங்களைக் குறிக்கவும்)

1. கதையின் மையக்கருத்து.
2. இக்கதையின் பிரதான பாத்திரத்தின் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்.
3. மீனவரின் அவலநிலை சித்திரிக்கப்படும் விதம்.
4. கதாசிரியர் மொழிநடையும் கதைசொல் பாங்கும்.
5. கதையினை வாசிப்பதால் ஏற்படும் மன உணர்வு.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 2.3:** பாடப்பரப்பைக் கிரகித்து விடையளிப்பார்.

**செயற்பாடு:** காளமேகப் புலவரின் சிலேடைக் கவிதைகளைக் கற்போம்.

**நேரம்:** 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**
- காளமேகப் புலவரின் சிலேடைப் பாக்கள் இரண்டு (பாடநூல்)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு - 1
- பாடற்பொருள் - பின்னிணைப்பு - 2
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 2.3.1**

- பின்வரும் பாடற்பகுதியை ஓர் அட்டையில் அல்லது கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

  'ஓடுமிருக்குமதனுள்வாய் வெளுத்திருக்கும்
  நாடுங் குலை தனக்கு நாணாது'

  இப்பாடலடியைப் பிரித்து வாசித்துப் பொருள் கூறமுடியுமா என வினவிப் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கக் கூடியதாகக் கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - **பாடலின் நேர் பொருள்**
  - **பாடலின் சிலேடைப் பொருள்**
  - **ஓசை நயம்**
  - **சொல்லாட்சி**
  - **உத்திகள்**

(20 நிமிடங்கள்)

**படி 2.3.2**

- மாணவரை நான்கு பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- பாடலைத் தனித்தனியாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கி, செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- தமது செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்க ஆயத்தப்படுத்தவும்.

(60 நிமிடங்கள்)

படி 2.3.3.

- குழுவின் சார்பில் ஒருவர் முன்வந்து செய்யுள்களை வாசித்துப் பொருள் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனையோர் தமது கருத்துக்களைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

தொடர்ந்து பின்வரும் விடயம் தொடர்பாகத் தெளிவுபடுத்துங்கள்.

பாடப்பிரிப்பு

- **வாரிக் களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டை புகும்**
  **போரிற் சிறந்து பொலிவாகும் - சீருற்ற**
  **செங்கோல் மேனித் திருமலைராயன் வரையில்**
  **வைக்கோலுமால் யானையாம்**

புகழ் பொருந்திய சிவந்த, அழகிய மேனியை உடைய திருமலைராயனின் மலைமீது வைக்கோல் வயலில் இருந்து எடுக்கப்பட்டு. நெற்களத்திலிட்டுத் துவைக்கப்படும். பின்னர் கட்டுக் கட்டாகத் திரிக்கப்பட்டு நெற்கோட்டையைச் சூழ்ந்திருக்கும். பெரிய குவியலாக குவிக்கப்படும். அக்குவியலானது மலைபோல் உயர்ந்து தோன்றி விளங்கும். பெரிய யானையானது யுத்த களத்தில் சேனைகளைத் தாக்கிக் கொன்று யுத்தம் முடிந்த பின்னர், அரசனது கோட்டைக்குள் செல்லும். சண்டை செய்வதில் மற்றுப் படைகளைப் பார்க்கிலும் மேம்பட்டு விளங்குமாதலால் வைக்கோல் கூட யானைக்குச் சமனாகும்.

- **ஆடிக்குடத்தடையும் ஆடும் போதேயிரையும்**
  **மூடித்திறக்கின் முகங்காட்டும் - ஓடி மண்டை**
  **பற்றிற் பரபரெனும் பாரிற் பிண்ணாக்கும் உண்டாம்**
  **உற்றிடு பாம் பெள்ளனவே யோது**

பாம்பானது - படமெடுத்து ஆடிக்குடத்தினுள் புகும். படமெடுத்தாடும்போது இரைச்சலிடும். குடத்திலிட்டு மூடியபின் அதைத் திறந்து பார்த்தால் தன் தலையை எடுத்துக்காட்டும். அது ஓடிவந்து தலையில் தீண்டுமானால் பரபரென்ற உணர்ச்சி உண்டாகும். அதற்குப் பிளவுபட்ட நாக்கு (பிள் நாக்கு) உண்டு. எள்ளானது - செக்கிலே ஆட்டப்பட்டுக் குடத்தில் எடுத்து அடைக்கப்படும். செக்கில் ஆட்டும்போது இரைச்சல் ஓசையை உண்டாக்கும். குடத்தில் அசையாமல் வைத்து மூடித் திறந்து பார்த்தால் பார்ப்பவர்களுடைய முகம் அதிற்தெரியும். தலையில் வைத்தால் குளிர்ச்சியான உணர்ச்சி உண்டாகும். எண்ணெய் ஆட்டும்போது எள்ளுப் பிண்ணாக்கு உண்டாகும்.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

1. பாடலைப் பிரித்து வாசிப்பார்.
2. பாடலின் பொருளைக் கூறுவார்.
3. சிலேடையாகக் கூறபபடடுள்ளவற்றில் உள்ள பொதுத்தன்மைகளை எடுத்துக் காடடுவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

1. பாடல்களை சந்தி பிரித்து எழுதுங்கள்.
2. பாடல்களின் பொருளைச் சொந்த நடையில் எழுதுங்கள்.
3. இப்பாடல்களில் சிலேடையாகக் கூறப்பட்ட விடயங்கள் யாவை?
4. அவை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன?

**பின்னிணைப்பு 2**

**தேங்காய்க்கும் நாய்க்கும்**

ஓடுமிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது'

1. தேங்காயானது சிரட்டையோடுமிருக்கும், அதன் உட்பக்கமானது (உள்வாய்) வெண்மையான பருப்போடு கூடியிருக்கும். எல்லோரும் விரும்பும் (நாடும்) தேங்காயக் குலையில் இருக்கும் என்பது ஒரு பொருள்.

2. நாயானது விரைவாக ஓடும். இளைத்து ஓரிடத்தில் இருக்கும். அதன் வாயினுட்பக்கம் வெண்மையாயிருக்கும். இரையை விரும்பி (நாடும்) த் தேடிச் செல்லும். குரைப்பதற்க (குலை) வெட்கப்படாது என்பதே இன்னொரு பொருள்.

எனவே இரு கருத்துத் தரும் சொற்றொடர்களை அமைத்துப் பாடப்பட்ட இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ளது சிலேடை அணியாகும்.

**தேர்ச்சி: 4.0** **இலக்கிய அனுபவத்தின் மூலம் வாழ்வை மேம்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 4.1:** இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.

**செயற்பாடு:** கம்பராமாயணப் பின்னணியை அறிந்து கொள்வதோடு கையடைப்படலத்தை விரிவாகக் கற்போம்.

**நேரம் :** 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு :**
- பாடநூல் (கையடைப் படலம் பகுதி)
- கையடைப் படலம் கதைச்சுருக்கம் - பின்னிணைப்பு 1
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 2

**கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 4.1.1**

- பின்வரும் பாடலைக் கரும்பலகையில் அல்லது கடதாசி மட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

“மால்கடிந்த தவமுனி வான்மீகி என்பான்
வனத்திடையே தான் கண்டு கொண்டு வந்த
பால் வடிந்து முள்ளடர்ந்து பருத்து நீண்டு
பரிமளிக்கும் பலவின்கனி பாருக்கீந்தான்
மேல் படிந்த பிசினகற்றி மெள்ளக் கீறி
மெதுவாகச் சுளையெடுத்து தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனெனும் தமிழ்த்தாயர் நோற்ற மைந்தன்.”

-நாமக்கல் கவிராயர்-

- மாணவர்கள் பாடலை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பாடல் தொடர்பாகப் பின்வரும் வினாவினை வினவுங்கள்.
  இப்பாடலில் இராமாயணம் பற்றி என்ன கூறப்படுகின்றது?
- கம்பராமாயணம் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- கம்பராமாயணத்தின் முதன்நூல் வான்மீகி இராமாயணம்.
- வான்மீகி இராமாயணத்தை ஒட்டியே கம்பன் இராமாயணத்தை இயற்றினான். தமிழ்ப் பாரம்பரியத்திற்கேற்பவே கம்பராமாயணம் இயற்றப்பட்டுள்ளது.
- கம்பராமாயணம் - பால காண்டம்
  - அயோத்தியா காண்டம்
  - ஆரணிய காண்டம்
  - கிட்கிந்தா காண்டம்
  - சுந்தர காண்டம்
  - யுத்த காண்டம் என வகுக்கப்பட்டுள்ளது
- ஒரு காண்டம் பல படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இராமாயணத்தின் கதாநாயகன் இராமன்.
- இராமாயணப் பாத்திரங்கள்

(20 நிமிடங்கள்)

படி 4.1.2

- மாணவர்களை 6 பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- பின்னிணைப்பு 1 இல் கொடுக்கப்பட்ட வாசிப்புப் பகுதியை வழங்குங்கள். தேவையானவிடத்து விளக்கமளியுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரம் I ஐ குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழுவாகச் செயற்படுவதற்கு உதவுங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 4.1.3

- மாணவர்களை வகுப்பு நிலைக்குக் கொண்டு வாருங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்கச் செய்யுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் தொடர்பாக ஏனைய மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடல் மூலம் பின்வரும் விடயங்கள் பற்றி மாணவர்களுக்கு விளக்கம் அளியுங்கள்.

1. வான்மீகி இராமாயணமே கம்பராமாயணத்திற்கு முதன்நூலாக விளங்குகிறது.
    - வடமொழிப் பாரம்பரியத்தைத் தழுவி இயற்றப்பட்டது வான்மீகி இராமாயணம்.
    - வான்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப் பாரம்பரியத்திற்கு ஏற்ப இயற்றப்பட்டது கம்பராமாயணம்.
    - இது ஆறு காண்டங்களைகக் கொண்டு விளங்குகின்றது.

2. கையடை என்பது அடைக்கலம் என்று பொருள்படும். (கதையோடு தொடர்புபடுத்தி விளக்குக)

கையடைப் படலத்தின் பாத்திரங்கள்:

தசரதன், கௌசிகன், வசிட்டன், இராமன், இலக்குமணன்

கதைச் சுருக்கம் :

- தசரதன் சபா மண்டபம் அடைதல்.
- அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருத்தல்.
- கௌசிக முனிவன் வருகை தரல்.
- மன்னன் முனிவனை வணங்குதல்.
- முனிவன் அரசனைப் புகழ்தல்.
- செய்ய வேண்டியது என்னவென மன்னன் கேட்டல்.
- வேள்வி காக்க இராமனை அனுப்பும்படி முனிவன் கேட்டல்.
- அரசன் மறுத்தல்; தான் வருவதாகக் கூறல்.
- கௌசிகன் கோபமடைதல்.
- வசிட்டன் வருகை, இராமனை அனுப்புமாறு மன்னனிடம் கூறுதல்.
- இராம இலக்குமணனை முனிவருடன் அனுப்புதல்.

(40 நிமிடங்கள்)

படி 4.1.4

- மாணவரை மீண்டும் குழு நிலைக்கு வரச் செய்யுங்கள்.
- கையடைப்படலப் பாடல்களை (4 பாடல்கள்) வழங்குங்கள்.
- பாடல்களை வாசித்து விளங்க உதவுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் II இனை வழங்குங்கள்.
- குழுவாகக் கலந்துரையாடி செயற்பாட்டுப் பத்திரத்தை நிறைவு செய்ய வழி செய்யுங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 4.1.5

- மாணவர்களை வகுப்பு நிலைக்கு வரச் செய்யுங்கள்.
- நிரப்பிய செயற்பாட்டுப் பத்திரங்களை முன்வைக்கச் சொல்லுங்கள்.
- ஒரே குழு எல்லா விடைகளையும் முன்வைக்காது, எழுமாற்றாக எல்லாக் குழுக்களும் விடைகளை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.
- ஏனைய மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.**

1. பாடல்களின் பொருள் (பின்னிணைப்பு 2 ஐப் பார்க்கவும்)
2. அரும் பதங்கள் -

| | |
|---|---|
| விரசுறு - பொருந்திய | அயிர்த்து – சந்தேகித்து |
| வென்றி – வெற்றி | துனியுறு – கோபம் மிக்க |
| நனை + வரு – அரும்புகள் + நிறைந்த | விசும்பு – ஆகாயம், தேவலோகம் |

3. பின்னிணைப்பு 2 ஐப் பார்க்கவும்.

4. இப்பாடலடிகளில் தசரதனின் சிறப்பு மிகவும் உயர்வாகக் கூறப்படுகின்றது. தேவேந்திரனை ஒத்தவன் தசரதன் என்பது கூறப்படுகின்றது. தேவலோகத்தவர் 'இவன் இந்திரனோ' என்று சந்தேகிக்கும் படி தசரதன் விளங்குகிறான். இங்கு ஐயவணி கையாளப்படுகின்றது. இந்திரனுக்கும் தசரதனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை தேவலோகத்தவர் வாயிலாகக் கவிஞர் வெளிப்படுத்துகிறார்.

5. பின்னணைப்பு 2 ஐப் பார்க்கவும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- கம்பராமாயணம் தொடர்பான விடயங்களை அறிந்து முன்வைப்பார்.
- கையடைப் படலத்தின் கதைச் சுருக்கத்தைக் கூறுவார்.
- கையடைப்படலப் பாடல்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- பாடல்களுக்கான பொருள்களை எழுதுவார்.
- கையடைப் படலத்தில் வருகின்ற கதாபாத்திரங்களின் குணவியல்புகளை முன்வைப்பார்.

**ஆசிரியருக்கான குறிப்பு:**

இச்செயற்பாட்டினை மாதிரியாகக் கொண்டு அல்லது வேறொரு செயற்பாட்டின் மூலமாக ஏனைய ஐந்து பாடல்களையும் கற்பிக்க வேண்டும்.

ஒருநாள் நவரத்தின கசிதமான சிங்காசனத்தையுடைய சபையில் அனேக அலங்காரங்களோடு மகாராஜா கொலுவீற்றிருந்தார். அப்போது, ஆகாயத்தில் திரிகின்ற தேவலோகத்துச் சாரணர், 'இது தெய்வலோகம்,' என்றெண்ணி சமீபத்தில் நெருங்கிப் பார்த்து, ராஜாவுக்கு ஆயிரங் கண்ணில்லாததால், தேவேந்திரனல்லனென்று ஐயந்தீர்ந்து போய் விட்டார்கள். இவ்வளவு இந்திரபோக பாக்கியத்துடனேயிருக்கின்ற தசரத மகாராஜாவின் சபைக்குச் "சகல சீவராசிகளையும் உலகங்களையும், பிரமதேவன் முதலிய தேவர்களையும் இதோ சிருஷ்டிக்கின்றேன்!" என்று தொடங்கிய கௌசிகராகிய விசுவாமித்திரர் எழுந்தருளினார். அப்போது இராஜாதிராஜனாகிய தசரத மகாராசர் தம் மார்பில் அணிந்திருக்கிற இரத்தினாபரணங்கள் சூரியனுடைய பிரகாசம் போல் ஜொலிக்க, பிரமதேவர் வரக்கண்ட தேவேந்திரனைப்போல், எழுந்திருந்து அவருடைய உபய சரணாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, இரத்தின சிங்காசனத்தில் ஏறச்செய்து அர்க்கியம் முதலிய கடமைகளனைத்தும் மிகுந்த உபசாரத்தோடு செய்து, "சுவாமி!, இன்றைய தினம் என் வினை தீர்ந்தது. தேவரீர் எழுந்தருளினது இப்பூமி செய்த புண்ணியமோ! அல்லது அடியேன் செய்த தவமோ! அல்லது இந்நகரில் யான் சேவிக்கத்தக்கதாய் என் முன்னோர்கள் பூர்வத்தில் செய்த தவமோ?" என்று பலவாறு சந்தோஷத்துடனே சொல்ல, அதற்கு விசுவாமித்திர மகரிஷி, "ராஜாதிராஜராகிய தசரத சக்கரவர்த்தியே! என்னைப் போன்ற ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் ஒரு துன்பம் நேரிடுமானால், கைலாயமும் திருப்பாற்கடலும் சத்தியலோகமும் அமராபதியும் இந்த அயோத்தி மாநகரமும் அல்லாமல், அதைச் சொல்லிக் கொள்ளுகிறதற்கு வேறோர் இடமுண்டோ? பூர்வத்தில், தேவேந்திரன் அசுரருக்குத் தோற்றுத் தன் ஆட்சியை இழந்து, உம்மிடத்தில் சொல்லிக்கொள்ள, அப்போது நீர் அந்த அசுரரையும் அவர்களுக்குத் தலைவனாகிய சம்பரனையும் சங்கரித்து, அத்தேவேந்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்த அரசல்லவா இப்போது தேவேந்திரன் ஆண்டு வருகின்றது? அப்படிப்பட்ட சாமர்த்தியத்தையுடைய உமக்குச் சமானமான ராசாக்கள் இந்தப் பதினான்கு உலகத்திலேயும் உண்டோ? என்று மிகுந்த சந்தோஷத்துடன் சொல்ல, அது கேட்டு ராஜாதிராஜர், மிகவும் களிப்படைந்து, "இது வரையில் யான் இராச்சியபாரஞ் செய்துகொண்டுவந்த பலன் இன்றைக்குச் சித்தியாயிற்று! இனி நான் நடந்துகொள்ள வேண்டுவதைத் தேவரீர் ஆக்கியாபித்தால், அந்தப்படி நடந்து கொள்ளுகிறேன்," என்று சொன்னான்.

அதற்கு மகரிஷியானவர், "கேளும் மகாராஜாவே, தருக்கள் சூழ்ந்த ஆரணியத்தில் யான் செய்யும் தவமாகிய யாகத்திற்கும் மற்றோர் தவத்துக்கும் இடையூறு செய்யும் காமக்குரோதாதிகள் இடையில் வந்து துன்பஞ் செய்வது போல, இராட்சதர் துன்பஞ் செய்து கொண்டு வருகிறார்கள். அப்படி நேரிடாமல் என் யாகத்தைக் காத்து நிறைவேற்றுகிறதற்கு உம்முடைய நான்கு பிள்ளைகளுள் முதல்வனாகிய நீலமேக சொருபனை எனக்குக் கொடுக்க வேண்டும்", என்று உயிரைக் கேட்கின்ற பொல்லாத யமனைப் போல் கேட்டார்.

அக்கேள்வியானது, மார்பில் வேல் பட்ட இரணக்குழியில் அக்கினி நுழைந்தாலெப்படியோ, அப்படிச் சக்கரவர்த்தியின் இரு செவிகளிலும் நுழைந்த மாத்திரத்தில், சஞ்சலமானது. பிடித்திழுக்கவும், பிராணனானது ஊசலாடவும், கண்ணில்லாதவன் சில நாள் கண்ணுண்டாயிருந்து பின்பு அதையிழந்து எப்படித் துன்பப்படுவானோ அப்படித் துன்பப்பட்டு, அத்துன்பத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு, "சுவாமி, அவன் அறியாதவன்; இன்னம் ஆயுதப் பரீட்சைகளில் நன்றாய்ப் பழகாதவன். காரியம் எதுவானாலும் நான் வருகின்றேன். அந்த இராட்சதருக்குத் துணையாய்ச் சிவபிரமாதிகள் வந்தாலும் அவர்களையெல்லாம் தூமிசப்படுத்தி, உம்முடைய யாகத்துக்கு யாதொரு விக்கினமும் வாராமல் காக்கிறேன்; சுவாமி, எழுந்தருளும்," என்று தசரத சக்கரவர்த்தியார் சொல்ல, அது கேட்டவுடன் மகரிஷி அதிக கோபத்தோடு எழுந்தார். அது கண்டு தேவர்கள் பயந்து, "இன்றைக்கு ஊழிக்காலமோ! என்று சந்தேகித்து நடுங்கினார்கள். சூரியனும் ஒளித்துக் கொண்டான். சராசரங்களுக்கெல்லாம் அதிக பயமுண்டாயிற்று. விசுவாமித்திரருக்குக் கோபாக்கினியினாலே புருவங்கள் நெற்றியிலேறின.! நகைப்பும் வந்தது! கண்கள் சிவந்தன! திசைகளெல்லாம் இருளடைந்தன! இவ்வளவு கோபங்கொண்ட விசுவாமித்திரருடைய எண்ணந்தெரிந்த வசிஷ்ட மாமுனிவர், அவருக்குப் "பொறுத்துக்கொள்ளும்" என்று தணிவு சொல்லி, ராஜாவைப் பார்த்து, "மகாராஜா, உம் புத்திரனுக்கு உறுத்தலாகிய உறுதி வருங்காலத்தை மறுக்கின்றீரோ? மழையினால் பெருகும் வெள்ளங்கள் யாவும் ஒழுங்காகச் சமுத்திரத்தினிடம் போய்ச் சேர்வது போல், உம் பிள்ளை அளவில்லாத வித்தையை அடைகிறதற்குச் சம்பவித்த காலத்தை மறுக்காதீர்," என்று சொல்ல, குருவினுடைய வாக்கியத்தை மகாராஜா சிரமேல் தாங்கினவராய்,"இலட்சுமிபதியாகிய ஸ்ரீராமனை அழைத்து வாருங்கள்," என்று ஆக்கியாபித்தார். உடனே அறிவில் மிகுந்த ஸ்ரீராமரும் அருகில் வந்து சேர்ந்தார். வந்த ஸ்ரீ ராமரையும், இலட்சுமணனையும் அரசர் விசுவாமித்திரருக்குக் காட்டி, "சுவாமி, இவர்கட்குத் தாயுந் தந்தையும் நீரே; தந்தேன் ; உமது விருப்பப்படி செய்து கொள்ளும்" என்று சொன்னார். அப்போது விசுவாமித்திரர் கோபந் தணிந்து, அதிக சந்தோஷத்தோடு ஆசீர்வாதஞ் செய்து, ராம லட்சுமணர்களை அழைத்துக்கொண்டு, "இனி யாகத்தை நிறைவேற்றுவோம்" என்று சபையை விட்டுப் புறப்பட்டார்.

## பின்னிணைப்பு 2

1. பாடலின் பொருள்

1. தனது ஒப்பற்ற வெண்கொற்றக்குடை நிழலில் உலகம் முழுதும் விளங்கவும், வெற்றி பொருந்திய பேரிகைகளின் ஓசை முழங்கவும் முனிவர்கள் துதிக்கவும், கரை சேருவதற்கு அருமையான ஒப்பற்ற ஆனந்தக் கடலிலே அரசர்களுக்கு அரசனான தசரதன் மூழ்கி வாழும் காலத்திலே

2. ஒருநாள் அரும்புகள் நிறைந்த கற்பக விருட்சத்தையுடைய சுவர்க்கலோகத்தின் சிறந்த நகரத்தில் வாழ்கின்ற தேவர்கள் எல்லோரும் இந்திரசபை, என ஐயுற்று வந்து சேரும்படி, நினைத்தற்கும் அருமையானதும் தேவலோகத்தளவு உயர்ந்ததுமாகிய இரத்தினத்தாலமைந்த ஒப்பற்ற சபா மண்டபம் விளக்கமடையும்படி தசரதன் வந்தடைந்தான்.

3. தூய்மையும் மென்மையுமுடைய சிங்காசனத்தில் சக்கரவர்த்தி வீற்றிருந்தான். அப்பொழுது. உயர்ந்த ஆகாயத்திலே சஞ்சரிக்கும் சாரணராகிய தேவர்கள், தமது தலைவனான இந்திரன் இவனோ என்று சந்தேகித்துப், பின்னர் தசரதனை உற்றுப் பார்த்தனர். ஆயிரம் கண்கள் தசரதனுக்கு இல்லையாதலால் இவன் தேவேந்திரன் அல்லன் என்று ஐயம் நீங்கித் தெளிவடைந்தனர்.

4. சிங்கம் போன்ற வலிமை கொண்ட சக்கரவர்த்தியின் எதிரில், நிலை பெற்ற உயிர்கள் எல்லாவற்றையும் அவற்றின் இடமான உலகங்களையும் வேறாகப் படைத்துத், தேவர்களையும் நான்கு முகங்களையுடைய பிரமதேவனையும் இப்பொழுதே படைப்பேன் என்று கூறியபடி பெருங்கோபமிக்க விசுவாமித்திரன் தோன்றினான்.

5. அ. பாடல்கள் கூறும் கதைத்தொகுப்பு:
தசரதச் சக்கரவர்த்தி செங்கோலாட்சி செய்தான். உலகத்து உயிர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தன. தேவர்களும் அவனைத் துதித்தனர். தேவலோகத்தவரும் வந்து சேரும்படியான இரத்தினத்தாலமைந்த சபா மண்டபத்தில் மன்னன் வீற்றிருக்க, தேவேந்திரனோ என தேவர் ஐயுற்றனர். சிங்கம்போல் வலிமை மிக்க தசரதனுக்கு எதிரில் கோபம் மிக்கவராக 'உலகங்களையும் உயிர்களையும் தேவரோடு பிரமனையும் படைப்பேன்' என்று கூறியபடி விசுவாமித்திரர் வந்தார்.

ஆ. பாத்திரங்களின் இயல்பு
தசரதச் சக்கரவர்த்தி சிங்கம் போல் வலிடையுடையவன், தேவேந்திரனோ என தேவர்கள் ஐயுறும்படியான தோற்றம் கொண்டவன். இரத்தினத்தாலமைந்த சபா மண்டபத்தையுடையவன். தூய்மையும் மென்மையுமுள்ள சிங்காசனத்தில் வீற்றிருப்பவன்.
விசுவாமித்திரர் மிக்க தவவலிமை கொண்டவர். தனது தவப்பயனால் உலகங்களையும் உயிர்களனைத்தையும் தேவர்களோடு பிரமனையும் படைப்பேன் என்று கூறும் ஆற்றல் படைத்தவர். மிக்க கோபத்தோடு காணப்பட்டார்.
தேவர்கள்: அரும்புகள் நிறைந்த கற்பக விருட்சத்தையுடைய சுவர்க்கலோகத்து சிறந்த நகரத்தில் வாழ்கின்றவரே தேவர்கள். இவர்கள் உயர்ந்த பெரிய ஆகாயத்திலே சஞ்சரிப்பர்.

இ. பின்வரும் அடிகளின் சிறப்பு
- விரகுரு தனிக்குடை - ஒப்பற்ற சிறப்புப் பொருந்திய தசரதச் சக்கரவர்த்தியின் வெண்கொற்றக்குடை உலகனைத்துக்கும் நிழல் வழங்குகின்றது.
- கற்பக நாடு - கற்பக விருட்சத்தையுடைய சுவர்க்கலோகம். அங்குள்ள சிறந்த நகரங்களில் தேவர்கள் உள்ளனர்.
- நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை - தசரதச் சக்கரவர்த்தியை தேவேந்திரனோ என ஐயுற்ற சாரணர், அவனுக்கு ஆயிரம் கண்கள் இல்லாததால் அவன் இந்திரனல்லன் என்று ஐயம் நீங்கினர்.
- துனியுறு முனிவன் - பெருங்கோபம் மிக்க முனிவனான விசுவாமித்திரன் உலகங்களையும் உயிர்களையும் தேவர்களோடு பிரமனையும் படைப்பேன் என்றபடி தசரதன் முன்னே தோன்றினான்.

**செயற்பாட்டுப் பத்திரம் 1**

1. **பின்வரும் விடயங்கள் தொடர்பாக அறிக்கைப்படுத்துங்கள்.**

    அ. வான்மீகி இராமாயணம்

    ஆ. கம்பராமாயணம்

    இ. கம்பராமாயணக் காண்டங்கள்

2. பின்னிணைப்பு 1 இல் கொடுக்கப்பட்ட வாசிப்புப் பகுதியைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.

    1. கையடை என்பதன் கருத்து யாது?
    2. கையடைப் படலத்தில் வரும் பாத்திரங்களைக் குறிப்பிடுங்கள்.
    3. கையடைப் படலக் கதையை 100 சொற்களில் சுருக்கி எழுதுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம் 2**

**தனிநிலையில் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள். (தேவையாயின் ஏனையோருடன் கலந்துரையாடலாம்.**

(1) பாடல்களைக் கருத்தூன்றி வாசித்து பாடல்களின் பொருளைத் தொகுத்து எழுதுங்கள்.

(2) அரும் பதங்களைப் பட்டியற்படுத்துங்கள்

(3) பாடலின் எழுவாய் பயனிலைகளை இனங்கண்டு எழுதுங்கள்.

(4) “சேயிரு விசும்படைத் திரியுஞ் சாரணர் நாயகனிவன் சொலென்றுயிர்த்து” என்ற பாடலடிகளின் சிறப்பினை விளக்கி எழுதுக.

(5) குழுநிலையில் கலந்துரையாடி பின்வருவனவற்றுக்கு விடை தருக.

   (அ) பாடல்களில் கூறும் கதைத் தொகுப்பு

   (ஆ) பாத்திரங்களின் இயல்பு

   (இ) பின்வரும் அடிகளின் சிறப்பை விளக்குக.

   - கற்பக நாடு
   - விரசுறு தனிக்குடை
   - நாட்டமோர் ஆயிரமில்லை
   - துனி உறு முனிவன்

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.3:** படைப்புக்களை நயந்து அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**செயற்பாடு:** 'நாட்டார் பாடல்களில் அழகியல் அம்சங்கள்' கட்டுரையை வாசித்து, நயந்து, கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம்:** 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**

- பாடநூல் ( நாட்டார் பாடல்களில் அழகியல் அம்சங்கள்)
- செயற்பாட்டுப் பத்திரம் - **பின்னிணைப்பு** 1
- ஒலிநாடா
- எழுதுகருவி, எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.3.1**

- உங்களுக்குத் தெரிந்த நாட்டார் பாடலை இரசனையோடு பாடிக் காட்டுங்கள். அல்லது சினிமாப் படத்தில் வரும் நாட்டார் பாடலை ஒலிநாடாவில் ஒலிக்க விடுங்கள் / பாடிக் காட்டுங்கள்.

உதாரணம்:

"ஊரார் உறங்கையிலே.. உற்றாரும் தூங்கையிலே.. நல்ல பாம்பு வேடம்....." பாடலைக் கேட்டபின் பாடலில் காணப்படும் வாழ்வியல் அம்சங்கள், இரசனை, அனுபவப் பகிர்வு என்பன பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

நாட்டார் பாடலில் வெளிப்படுத்தப்படும்:

- தனிமனித இயல்பு
- வாழ்வியல் அம்சங்கள்
- விழுமியங்கள்
- இரசனை
- அனுபவப் பகிர்வு
- நகைச்சுவை உணர்வு

(20 நிமிடங்கள்)

படி 1.3.2

- 'நாட்டார் பாடல்களில் அழகியல் அம்சங்கள்' எனும் பாடத்தை மாணவர் ஒவ்வொருவரும் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- வாசிக்கும்போது, பாடப் பகுதியில் காணப்படும் அம்சங்களைக் கருத்திற் கொண்டு நயந்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- வாசித்த பின் மாணவர்களை நான்கு குழுக்களாக அமரச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை (பின்னிணைப்பு 1) வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து முன்வைக்க வழிசெய்யுங்கள்.

(80 நிமிடங்கள்)

படி 1.3.3.

- குறிப்பிட்ட ஒரு தலைப்பின் கீழ் ஒவ்வொரு குழுவும் தனது அறிக்கையை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த விடயங்கள் பற்றி மாணவர்கள் கருத்துரைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயங்களின் பொருத்தப்பாட்டினை இனங்கண்டு, கீழ்வரும் விடயங்களையும் உள்ளடக்கிக் கலந்துரையாடுங்கள்.

**அழகுணர்ச்சி**

- எமது உள்ளத்தை ஈர்ப்பதும், உள்ளத்தில் இன்பக் கிளர்ச்சியை உண்டாக்குவதும், உள்ளத்திற்கு நிறைவைத் தருவதும் எதுவோ, அதுவே அழகியல் என விபரிக்கப்படுகின்றது.
- இந்த அழகியலை இயற்கையிலும் காணலாம், செயற்கையிலும் காணலாம்.
- இயற்கை அழகை 'கைபுனைந் தியற்றாக் கவின்' என வியக்க, செயற்கை அழகைப் படைத்த மனிதனின் திறமையை நயக்கின்றோம்.
- நமது அழகுணர்ச்சியைத் தூண்டும் சாதனங்களான இயல், இசை, நாடகம் எனும் மூன்றும் அழகியற்கலைகள் எனப்படும்.

**வாழ்வியல் அம்சங்கள்**

- மனித வாழ்வில் நல்லவை நடைபெறும்போது வாழ்த்துக்கள் கூறப்படுவது இயல்பு. இந்தவகையில் ஒரு குழந்தை பிறந்தபோது மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுவதாக "அயலும் புடையும் வாழவேண்டும்..... என்ற வாழ்த்துப் பாடல் அமைகிறது.
- வாழ்த்துப் பாடல்கள், தொழிற்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், நீதிப்பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என நாட்டார் பாடல்கள் பலவகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.
- உழவுத் தொழில் செய்யத் தொடங்கும்போது, உழவர்கள் இறைவனுக்கு வணக்கம் செலுத்திவிட்டே தொடங்குகின்றனர். இங்கு 'பட்டி பெருக வேணும் தம்பிரானே...

என்று கூறப்படுவதைக் காணலாம். இதனூடாக இறைவனைத் துதிக்கும் பண்பு காட்டப்படுகின்றது. அடுத்து, குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி வாழ்த்துப் பாடும்போது, 'அயலும் புடையும் வாழ வேண்டும்' எனக் குறிப்பிடுகிறாள். இதிலிருந்து அவளது சமூக நல நோக்கு இங்கு காட்டப்படுகின்றது.

**விழுமியங்கள்**

- ஊரும் உலகும் சிறப்படைய வேண்டும் என்ற மனப்பாங்கு 'பட்டி பெருக வேண்டும்..... பாடலிலும், குழந்தை மேல் பாசம் காட்டும் பண்பானது 'ஆண்பனையின் நுங்கே... அணில் கோதா மாம்பழமே... எனும் பாடலிலும், நீதிக் கருத்து. 'ஓதிப்படிச்சி ஊர்புகழ வாழ்ந்தாலும்.... ஏழைக்குச் செய்த தீங்கை – அல்லா
  எள்ளளவும் ஏற்க மாட்டான்.... எனும் பாடலிலும் நயமுடன் எடுத்துக் காட்டப்படுகின்றன.

**நகைச்சுவை**

- ஒருவரைப் பரிகாசம் பண்ணும் தோரணையில், ஒப்பிட்டுக் காட்டுவதாகச் சில நகைச்சுவைப் பாடல்கள் அமைகின்றன.
- இங்கு இளமையான பெண்ணுக்குப் பேசப்பட்ட மணவாளனுக்கு வழுக்கை விழுந்திருப்பதை நையாண்டி பண்ணிக், கீழ்வரும்பாடல் அமைகிறது:

**'கச்சான் அடித்த பின்பு காட்டில் மரம் நின்றது போல்**
**உச்சியிலே நாலுமயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை'**

அடுத்து, நரைத்த கிழவனுக்கு இளம்பெண் ஒருத்தியை மணஞ்செய்து கொடுக்க இருப்பதை அறிந்த தோழி இரக்கப்பட்டுப் பாடுவதாகப் பின்வரும் பாடல் அமைகிறது:

**'நாணற்பூப்போல நரைத்த கிழவனுக்கு**
**கும்மாளப் பூப்போல - இந்த**
**குமர்தானோ வாழுறது'**

என்று கிழவனின் நரையையும் பெண்ணின் இளமையையும் இயற்கை அம்சங்களுடன் பொருத்தமாகவும் நகைச்சுவை ததும்பும் விதமாகவும் ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

**அணிகள்**

**உவமை அணி**

**'கச்சான் அடித்த பின்பு காட்டில் மரம் நின்றது போல்**
**உச்சியில் நாலு மயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை'**

ஓரமெல்லாம் வழுக்கை விழுந்து, உச்சியிலே நாலு மயிர் மாத்திரம் உள்ள மாப்பிள்ளைக்குக் காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட காட்டுமரம் உருவகிக்கப்பட்டுள்ளது. (இதுபோல் காணப்படும் மற்றைய உவமை அணிகளையும் விளக்கிக் காட்டுங்கள்.)

உருவக அணி

**'கொவ்வை இதழ் மகனே – என்**
**குவிந்த நவரத்தினமே'**

இங்கு குழந்தை நவரத்தினத்திற்கு உருவகிக்கப்பட்டுள்ளது.

**'கணபுரத்தென் கருமணியே.....'**

இங்கு குழந்தை கருமணிக்கு உருவகிக்கப்பட்டுள்ளது.

(60 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- நாட்டார் பாடல்களை நயந்து, கருத்துக்களை முன்வைப்பார்.
- நாட்டார் பாடல்களில் காணப்படும் பின்வரும் அம்சங்கள் பற்றி விளக்கிக் கூறுவார்:
  - அழகுணர்ச்சி
  - வாழ்வியல் அம்சங்கள்
  - விழுமியப் பண்பு
  - நகைச்சுவை
  - அணிகள்

ஒப்படை: 'ஏட்டு இலக்கியத்துக்கு அடிப்படையாக நாட்டார் இலக்கியம் அமைந்துள்ளது'. விளக்குக.

# செயற்பாட்டுப் பத்திரம்

- நாட்டார் பாடல்களில் காணப்படும் பின்வரும் அம்சங்கள் பற்றி விளக்குக.
  - அழகுணர்ச்சி
  - வாழ்வியல் அம்சங்கள்
  - விழுமியப் பண்பு
  - நகைச்சுவை
  - அணிகள்

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.3:** படைப்புக்களை நயந்து அவற்றின் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**செயற்பாடு:** 'நளவெண்பா' செய்யுள்களை வாசித்து நயப்போம்.

**நேரம்** : 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**

- நளவெண்பா – பாடற்பகுதி
- நளவெண்பா கதைச்சுருக்கம் - பின்னிணைப்பு 1
- மேலதிகக் குறிப்புக்கள் - பின்னிணைப்பு 2
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 3

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.3.1**

- பின்வருவன போன்ற வினாக்களை வினவி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
    - பண்டைத்தமிழ் இலக்கியங்கள் சில கூறுக?
    - அவற்றுள் கதை கூறுவனவாக அமைந்துள்ள இலக்கியங்கள் யாவை?
    - மகாபாரதத்தைப் பாடிய புலவர் யார்? (வேதவியாசர்)
    - பாரதக் கதையில் வரும் பாத்திரங்கள் சில கூறுக? (பாண்டவர், கௌரவர், கிருஷ்ணர்)
    - பாரதக்கதையில் கிளைக்கதைகள் ஏன் கூறப்பட்டுள்ளன? (அறத்தை வலியுறுத்த, ஆலோசனை வழங்க, படிப்பினைக்காக)
    - தருமருக்கு பிருகஸ்தவ மகரிஷி கூறிய கதை என்ன? (நளன் தமயந்தி கதை)
    - அந்தக் கதையைத் தமிழில் பாடிய புலவர் யார்? (புகழேந்தி)

- நளன், தமயந்தி கதையை மாணவர் வாயிலாகவே கூற வையுங்கள். அல்லது பின்னிணைப்பு 1 இல் உள்ள நளன் தமயந்தி கதைச் சுருக்கத்தைக் கூறி மாணவரை கதையில் ஈடுபாடு கொள்ள வையுங்கள்.

- பின்வரும் விடயங்களை மாணவருக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- பண்டைய இலக்கியங்கள் கதை மூலம் வாழ்க்கை விளக்கங்களையும் அறக் கருத்துக்களையும் கூறுதல்.
- கதைகளுக்கேற்பப் பாத்திரங்களைச் சித்திரித்தல்.
- பழங்கால இலக்கியங்களின் செய்யுள்நடை.
- இரசனை, நவரச வெளிப்பாடு.
- உத்திகள் (அணி).
- கற்பனை.

(20 நிமிடங்கள்)

படி 1.3.2

- மாணவர்களை 5 பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- 5 பாடல்களையும் ஒவ்வொருவரும் வாசிப்பதற்கு வகை செய்யுங்கள்.
- பின்னிணைப்பு 4 இல் தரப்பட்டுள்ள ஆசிரியருக்கான மேலதிக விளக்கங்களின் துணையுடன் மாணவர்களுக்குத் தேவைப்படும் விளக்கங்களை வழங்குங்கள்.
- பின்னிணைப்பு 3 இல் உள்ள செயற்பாட்டுப் பத்திரத்தைக் குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவனுக்கும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவனும் ஒரு பாடலை எடுத்து செயற்பாட்டுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.
- பின்னர், ஐவரும் இணைந்து அதே செயற்பாட்டுப் பத்திரத்துக்குப் பொதுவான அறிக்கை ஒன்றைத் தயாரிக்க உதவுங்கள்.

(60 நிமிடங்கள

**படி 1.3.3**

- குழு ரீதியாகப் பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கையை ஒவ்வொரு குழுவும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வேறுபட்ட கருத்துக்களை மாணவர் கூற முற்படின் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

- சந்திபிரித்தல்

  'கொம்பர் இளம் குருகே கூறாது இருத்தியால்
  அம்புயத்தின் போது ஐ அறுகாலால் - தும்பி
  திறக்க தேன் ஊறும் திருநாடன் பொன்னை
  உறக்கத்தே நீத்தேனுக்கு ஒன்று'

  பொருள் : மரக்கொப்பில் இருக்கின்ற இளமைமிக்க பறவையே! தாமரை மொட்டைத் தனது ஆறுகாலால் வண்டு தீண்டித் திறக்கும்போது, தேன் பெருகும். இத்தகைய வளம் மிக்க நாடான விதர்ப்ப தேசத்து மன்னன் மகளான திருமகளை (தமயந்தி) அவள் உறங்கும்போது பிரிந்து வந்தேன். நீயோ எனக்கு எதுவிதமான ஆறுதலும் கூறாமல் இருக்கிறாயே...

உத்தியின் சிறப்பு : தமயந்தியின் பிரிவுத் துயரினால் நளன் பெரிதும் கழிவிரக்கம் கொள்கிறான். அந்நேரத்தில் அவனது மனநிலையை விளக்கப் புகுந்த கவிஞர், அமைதியாக இருக்கும் பறவையை நளன் விளித்து, அது தனக்கொரு ஆறுதலும் கூறவில்லையே என்று ஏக்கத்துடன் பேசுவதாகக் காட்டியுள்ளார். தவறிழைத்த நளனின் மனவுணர்வு இப்பாடலில் அருமையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இது போன்று ஏனைய பாடல்களுக்கும் விளக்கம் அளிக்கலாம்.

(60 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

1. பாடல்களைச் சந்திபிரித்துப் பொருளுணர்ந்து வாசிப்பார்.
2. மனனம் செய்து ஓதுவார்.
3. பாடல்களின் பொருளை எழுதுவார்.
4. பாடல்களில் கையாளப்பட்டுள்ள உத்திகளின் சிறப்பை விளக்கி எழுதுவார்.
5. பாடல்களை நயப்பார்.

**நளவெண்பா - கதைச்சுருக்கம்**

'நளவெண்பா'வை இயற்றிவர் புகழேந்திப் புலவர். இந்நூல் சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டது. சோழப் பெருமன்னர் காலத்தில் இந்நூல் கிடைக்கப்பெற்றது.

வளப்பம் மிக்க நிடத நாட்டிற்குரிய அரசன் நளன். விதர்ப்ப நாட்டு மன்னன் வீமராசனின் மகள் தயமந்தி. இருவரும் அன்னப்பறவையின் மூலமாக ஒருவரை ஒருவர் அறிந்து அன்பு கொண்டனர். தமயந்தியின் திருமணத்திற்குச் சுயம்வர நாள் குறித்தான் வீமன். தமயந்தியை மணக்க தேவர்கள் விரும்பினர். நளனையே அவளிடம் தூதாக அனுப்பினர். சுயம்வர நாளன்று, தேவர்கள் நளன் உருவில் அமர்ந்திருந்தனர். தமயந்தி உண்மை நளனை அறிந்து மாலையிட்டாள். நளனும் தமயந்தியும் வீமன் அரண்மனையில் சில நாட்கள் தங்கி, விதர்ப்பநாடு திரும்பினர். பன்னிரண்டு ஆண்டுகள் இன்புற்று இருந்தனர்.

தேவர்கள் பொறாமை கொண்டனர். கலி என்பவன் நளனுக்குத் துன்பம் கொடுக்க எண்ணினான். நளனைத் தொடர்ந்தான். நளன் அறிவு திரிந்தான். நளனும் புட்கரனும் சூதாடினர். நளன் எல்லாப் பொருள்களையும் இழந்தான். தன் மக்கள் இருவரையும் ஒரு வேதியன் மூலம் வீமன் நாட்டுக்கு அனுப்பினான். தமயந்தியுடன் நகரை விட்டு நீங்கினான். இரவு நேரம் வந்தது. நளனும் தமயந்தியும் ஒரு பாழ் மண்டபத்தில் தங்கினர். நளன் தமயந்தியைத் தனியே விட்டுப் பிரிந்தான். தமயந்தி துயில் எழுந்தாள்; நளனைக் காணவில்லை, அலைந்து தேடினாள்; பயன் இல்லை. விதர்ப்ப நாடு அடைந்தாள்.

நளன் தமயந்தியை விட்டுப் பிரிந்த பின் பலவாறு துன்புற்றான். இறுதியாக அயோத்தி மன்னன் இருதுபன்னனிடம் தேர்ப்பாகனாகவும் சமையற்காரனாகவும் வாகுகன் என்னும் பெயரில் மாற்றுருவுடன் இருந்தான். நளன் உயிரோடு இருப்பதையும் அவன் நிலையையும் தமயந்தி அறிந்தாள்; வீமனிடம் கூறினாள். வீமன் நளனும் தமயந்தியும் மீண்டும் சேர்ந்து வாழ வழிவகுத்தான். தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என அறிவித்தான். அதுகேட்ட அயோத்தி மன்னன் தேர்ப்பாகனாகிய நளனுடன் விதர்ப்பநாடு அடைந்தான்.

நளன் தேரை விட்டுச் சமையலறைக்குள் புகுந்தான். நளனின் செயல்களை அறிந்து வரும்படி தோழி ஒருத்தியை அனுப்பினாள் தமயந்தி. தோழி நளனின் செயற்பாட்டை அவதானித்து வந்து தமயந்தியிடம் கூற, வாகுகனே நளன் என்பதை அறிகிறாள்.

நளன் தமயந்தியோடும் மக்களோடும் சேனைகளோடும் புறப்பட்டு மாவிந்த நகரின் அருகில் உள்ள சோலை ஒன்றில் தங்கினான். தூதுவரை அனுப்பிப் புட்கரனை அழைத்து வந்து மறு சூதாடித் தனது நாடு, நகரம் முழுதையும் வெற்றி பெற்றான். நளன் நிடத நாட்டு மன்னனானான். மக்கள் மகிழ்வடையத் தன் மனைவி மக்களோடு பல்லாண்டுகள் சிறப்புடன் ஆட்சி செய்தான்.

## ஆசிரியருக்கான மேலதிகக் குறிப்புக்கள்

### சந்திபிரித்தல்

**உதாரணம்:** அம்புயத்தின் போதை யறு காலால்
அம்புயத்தின் + போது + ஐ + அறு + காலால்

- கதாபாத்திரம் : நளமகாராசன்
  மனநிலை : பிரிவுத் துயரம் / கழிவிரக்கம்
  உத்திகள் : தற்குறிப்பேற்ற அணி
  இயற்கை நிகழ்வுகளைத் தனக்குத் துணைக்கழைத்து இரங்குதல்.

- மொழி நடை
  பொருத்தமான எதுகை மோனை
  பொருளுணர்ச்சியைப் புலப்படுத்தும் சொற்கள்
  ஆற்றொழுக்கான நடை
  செப்பலோசை
  உதாரணம் : - காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட.....
  - பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும் கானலே....

- அருஞ்சொற்கள்
  கொம்பர் - மரக்கொம்பு
  குருகு - பறவை
  அம்புயம் - தாமரை
  ஆழி — சமுத்திரம்
  நாவாய் - மரக்கலம்
  அலவல் - நண்டு
  போது - மலரும் பருவத்தரும்பு

## பின்னிணைப்பு 3

### செயற்பாட்டுப் பத்திரம்

1. செய்யுளைச் சந்திபிரித்துப் பொருளுணர்ந்து வாசிக்குக.
2. செய்யுளை மனனம் செய்து, பொருளை உமது நடையில் எழுதுக.
3. கதாபாத்திரத்தின் மனவுணர்வைப் புலப்படுத்தப் புலவர் கையாண்டுள்ள உத்தியின் சிறப்பினை விளக்குக.

**தேர்ச்சி: 4.0** **இலக்கிய அனுபவத்தின் அடிப்படையில் வாழ்வை மேம்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 4.1:** இலக்கியங்களினூடாக வெளிப்படும் கருத்துக்களைப் பகுத்து நோக்குவார்.

**செயற்பாடு:** நட்பின் சிறப்பைக் குறள் மூலம் அறிவோம்.

**நேரம்:** 200 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**
- திருக்குறள் - நட்பு – பாடநூல்
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- எழுதுகருவி, எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 4.1.1**

- நட்பு தொடர்பாக நாலடியார் கூறுவதென்ன என்பது கீழே தரப்பட்டுள்ளது. அதனை வாசிக்க மாணவர் ஒருவரை வழிப்படுத்துங்கள்.

**நட்பு**

யானை போன்றவர் நட்பு என்றும், நாய் போன்றவர் நட்பு என்றும் நட்பை இருவகையாக்கிக் கூறுகிறார் நாலடியார். யானை போன்றவர் நட்பு விரும்பத் தகாதர் என்றும், நாய் போன்றவரின் நட்பே கொள்ளத் தக்கது என்றும் கூறுகிறது. யானை அறிந்தறிந்தும் பழகிய பாகனையே கொல்லுமளவிற்கு நன்றியுணர்வு அற்றது. ஆகையால் நம்பத் தகாதது. யானை போன்றவரும் எவ்வளவு நெருங்கிப் பழகி நன்மை செய்திருந்தும் ஒரு குற்றம் நேர்ந்தபோது, அதையே பெரிதாகப் பாராட்டித் தீங்கு செய்யத் துணிவர். ஆனால் நாய் நன்றி மறவாது, சில நாள் அன்புடன் தீனியிட்டுக் காத்தவர் தன் மேல் வேலை எறிந்து புண்படுத்தியபோதும், அந்த வேல் உடம்பில் தைத்துள்ள நிலையிலும் அவரைக் கண்டு, வால் குழைக்கும் அளவிற்கு நன்றியுணர்வு மிக்கது. நாய் போன்ற நண்பரும் செய்த நன்றியை நினைத்துப் போற்றி, எதிர்பாராமல் நேர்ந்த குற்றத்தையோ, குறையையோ பொருட்படுத்தாமல் பழைய அன்பையே காட்டுவர். ஆதலின் யானை போன்றவரின் நட்பை விலக்கி, நாய் போன்றவரின் நட்பைக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகின்றது.

(கண்ணகி – டாக்டர் மு.வ)

- நட்பு பற்றிச் சில வினாக்களை வினவுவதனூடாக மாணவர்களுடன் கலந்துரையாடி நட்பின் சிறப்பினையும் நன்மையினையும் குறித்து அவர்களது கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

> பண்டைய இலக்கியங்களினூடாகப் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன.
> - அறக்கருத்துக்கள்
> - மானுட விழுமியங்கள்
> - படிப்பினைகள்

(20 நிமிடங்கள்)

படி 4.1.2

- திருக்குறளில் 'நட்பு' என்ற அதிகாரத்தை மாணவர் ஒவ்வொருவரும் சந்தி பிரித்து வாசித்துப் பொருள் அறிய வழி செய்யுங்கள்.
- மாணவர் அனைவருக்கும் செயற்பாட்டுப் பத்திரம் I இனை வழங்குங்கள்.
- தனித்தனியே எழுதுவதற்கு வழிகாட்டுங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 4.1.3

- மாணவர்கள் தங்கள் செயற்பாட்டுப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வழிசெய்யுங்கள்.
- மாணவர்கள் செயற்பாட்டுப் பத்திரம் தொடர்பாகக் கருத்துரைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயப் பொருத்தப்பாட்டினை அறிந்து கீழ்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**நட்பின் சிறப்பு**

1. நட்புப் போல, செய்துகொள்ளத் தக்க அரிய பொருள் வேறு இல்லை. நட்புச் செய்து கொண்டால், அதைப்போல் காவல் வேறு இல்லை.
2. அறிவுடைய மக்களின் நட்பானது வளர்பிறை போல் வளர்ந்து வரும். அறிவில்லா மக்களின் நட்பானது தேய்பிறை போல் குறைந்து கொண்டே போகும்.
3. நூற்பொருள், கற்குந்தோறும் இன்பம் அளிப்பதைப்போல் நல்ல குணமுடையவர் நட்புப் பழகுந்தோறும் இன்பம் தரும்.

**நட்பின் பயன்**

4. நட்புச் செய்வது இருவரும் சிரித்துப் பொழுதுபோக்குவதற்கு அல்ல, தவறான செயல் செய்யும்போது, முற்பட்டு இடித்துரைப்பதற்காகும்.
5. ஒருவனுடன் ஒருவன் நட்பாவதற்கு தேச ஒற்றுமையும் பழக்கமும் வேண்டியதில்லை. இருவரும் ஒத்த உணர்ச்சியினராதல் நட்பு என்ற உரிமையைக் கொடுக்கும்.
6. கண்டபோது முகம் மலர நடப்பது நட்பு அல்ல. அன்பினால் உள்ளம் மலர நடப்பதே நட்பு ஆகும்.

7. தவறான வழிகளில் செல்லும்போது தடுத்து, நல்ல வழிகளில் நடக்கச் செய்வதுடன் துன்பம் வந்தபோது உடன் இருந்து அதை அனுபவிப்பதே நட்பு.
8. ஆடைகுலைந்தவன் கை அப்பொழுதே சென்று உதவிக் காப்பதுபோல, நண்பனுக்குத் துன்பம் வந்தபோது விரைந்து சென்று அதைப் போக்குவதே நட்பு ஆகும்.

**நட்பின் இலக்கணம்**

9. நட்பிற்குச் சிறந்த அரசிருக்கையாவது எக்காலத்தும் மாறுபடுதல் இல்லாமல் அறப் பொருள்களில் தளராமல் தாங்கும் திண்மை ஆகும்.
10. 'இவர் எமக்கு இத்துணை அன்பினர், யாம் இவர்க்கு இத்தன்மையத்தவர்' என்று புனைந்துரைப்பினும் நட்புச் சிறிதாகி விடும்.

உவமைகள்

"நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு

இங்கு அறிவுடையார் நட்பு வளர்பிறைக்கும் அறிவில்லாதவர் நட்பு தேய்பிறைக்கும் உவமிக்கப்பட்டுள்ளது.

"நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்
பண்புடையார் தொடர்பு"

நல்ல குணமுடையவருடன் கொள்ளப்படும் நட்பு நூலினைக் கற்குந்தோறும் ஏற்படும் இன்பத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

ஆடை குலையும்போது உடனடியாகச் சென்று கைகள் காப்பதுபோல, நண்பனுக்கு ஆபத்து வந்தவேளை விரைந்து சென்று உதவிக் காப்பதுவே சிறந்த நட்பு என உவமிக்கப்பட்டுள்ளது.

(40 நிமிடங்கள்)

**படி 4.1.4**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் II இலுள்ள விடயங்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- குழுவாகக் கலந்துரையாடிச் செயற்பாட்டைப் பூரணப்படுத்த உதவுங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 4.1.5**

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய மாணவர்கள் கருத்துரைகள் வழங்குவதற்கு வாய்ப்பளியுங்கள்.

- பின்வரும் விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

**1. கவிதை**

பொருள் : அறிவுடையோர் நட்பு வளர்பிறை போன்றது

அறிவிலார் நட்பு தேய்பிறை போன்றது.

மொழிநடை: மரபுக்கவிதையாயின் : சந்தம்

புதுக்கவிதையாயின் : சொற்செறிவு

உத்திகள்: (உதாரணம்) உவமை, உருவகம் போன்ற அணிகள், குறியீடு

**2. சொற்பொழிவு**

பொருள் : நல்லவர்களோடு பழகுவது, நூலொன்றைப் படிக்குந்தோறும் நயம் ,பெறுவது போன்றது.

மொழிநடை: செம்மையானது

கற்போரைக் கவர்தல்

வேறு மேற்கோள்கள்,

அனுபவப் பகிர்வுகள்

**3. கதை**

கரு : ஆபத்துக் காலத்தில் துன்பநேரத்தில் உடனோடிச் சென்று உதவுவதே நண்பனின் கடமை.

ஆரம்பம், முடிவு } ஆர்வமூட்டும் வகையில் அமைதல்

**4. உரையாடல்**

பொருள் : ஒருவனோடு நட்புப் பூண்பது, நகைச்சுவையாகப் பேசிச் சிரிப்பதற்கல்ல, வேண்டாத நடத்தைகளின்போது இடித்துரைப்பதற்கே ஆகும்.

- உரையாடல் எழுதும் வடிவம்
- எடுத்துக்கொண்ட விடயத்தோடொட்டி உரையாடல்
- சொற்செறிவு

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- திருக்குறளில் கொடுக்கப்பட்ட பாடப்பரப்பில் உள்ள அறக்கருத்துக்களைத் தெரிந்து கொள்வார்.
- மானுட விழுமியம், நட்பின் சிறப்பு என்பவற்றை அறிந்து கொள்வார்.
- நட்பின் பயன் அதன் இலக்கணம் என்பவற்றை எடுத்து விளக்குவார்.
- திருக்குறளில் இடம்பெறும் உவமைகளை இனங்கண்டு, விளக்கிக் கூறுவார்.

## செயற்பாட்டுப் பத்திரம் I

- நட்பு என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு, கீழ்வருவனவற்றை விளக்குக:
    1. நட்பின் சிறப்பு
    2. நட்பின் பயன்
    3. நட்பின் இலக்கணம்
    4. கையாளப்பட்டுள்ள உவமைகள்

## செயற்பாட்டுப் பத்திரம் II

1. "நிறைநீர நீரவர் கேண்மை, பிறைமதிப்
பின்நீர பேதையர் நட்பு" எனும் குறட்பாவின் தொனிப்பொருளுக்கு ஏற்ற விதத்தில் 25 சொற்களுள் ஒரு கவிதை எழுதுக.

2. 'நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு" எனும் குறட்பாவின்
தொனிப்பொருளுக்கேற்றவாறு 15 வரிகள் கொண்ட சொற்பொழிவு ஒன்றை எழுதுக.

3. "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" எனும் குறட்பாவின் தொனிப்பொருளுக்கு ஏற்ற விதத்தில் 60 சொற்களுள் ஒரு கதை எழுதுக.

4. 'நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்பொருட்டு" எனும் குறட்பாவின்
தொனிப்பொருளை விளக்கும் வகையில் 15 வரிகள் கொண்ட உரையாடல் ஒன்றை எழுதுக.

**தேர்ச்சி: 1.0** **இலக்கியங்களை வாசித்து, நயந்து கருத்துக்களை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 1.3**: படைப்புக்களை நயந்து அதன் நோக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**செயற்பாடு:** குறுந்தொகைச் செய்யுளை நயந்து கற்போம்.

**நேரம்**: 120 நிமிடங்கள்

**தர உள்ளீடு**:
- குறிஞ்சிப் பாடல் ( பாடப்பகுதி)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- எழுதுகருவி,
- எழுதுதாள்

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 1.3.1**

- ஆரம்பகால இலக்கியங்கள் பற்றித் தெரியுமா?
  அவை எவ்வெப்பெயர்களில் நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன என வினவிக் கலந்துரையாடிப் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

○ சங்கம் நிறுவித் தமிழ்வளர்த்த காலம் சங்க காலம்.
○ அது கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது.
○ சங்ககால இலக்கியங்கள் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு
○ மக்கள் வாழ்க்கையே இலக்கியத்தின் பொருளாக அமைந்தமை.
○ இலக்கியங்கள் அகம், புறம் என வகுக்கப்பட்டமை
அகம் - காதலொழுக்கம் பற்றியது.
புறம் - போர், வீரம், கொடை பற்றியது.
○ எட்டுத்தொகை நூல்களுள் அகப்பொருள் சார்ந்த நூலாகக் குறுந்தொகை விளங்குகிறது.
○ குறைந்த அடிகளையுடைய செய்யுள்களின் தொகுப்பு. ஆகையால் குறுந்தொகை எனப்பட்டது.
○ இப்பாடலில், குறி கூறும் அகவன் மகள் குறி பார்க்கும்போது, தான் கண்ட மலையைப் பற்றிப் பாடுகிறாள். தனது தலைவனது மலைவளத்தைப் பாடக்கேட்ட தலைவி மிக்க மகிழ்வுற்று மீண்டும் பாடுமாறு கேட்பதாக இப்பாடல் அமைகிறது.
○ இப்பாடலின் நோக்கம் தலைவியைத் தோழி சந்தோஷப்படுத்துவதாகும்.

(40 நிமிடங்கள்)

**படி 1.3.2**

- மாணவர்களைக் குழுக்களாக வகுத்து அமரச் செய்யுங்கள்.
- எல்லா மாணவர்களுக்கும் குறிஞ்சித் திணைப் பாடல் பகுதியை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிலுள்ள அனைவரும் 'அகவன் மகளே...' எனும் பாடலை மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பாடலைக் கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- பாடலைப் பதம் பிரித்து வாசித்துக் காட்டுங்கள்.
- பாடலில் இடம்பெறும் அருஞ்சொற்களுக்கு விளக்கமளியுங்கள்.
- பின்னிணைப்பிலுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை ஒவ்வொருவருக்கும் வழங்கிக், குழுவாகக் கலந்துரையாடிச் செயற்பட வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

**படி 1.3.3.**

- ஒவ்வொரு மாணவர் குழுவுக்கும் நிரப்பிய செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- எழுமாற்றாக மாணவர்களை எழுப்பி, முன்வைக்கப்படும் விடயம் தொடர்பான வினாக்களை வினவச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர் முன்வைத்த கருத்துக்களின் பொருத்தப்பாட்டினை இனங்கண்டு, கீழ்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

1. தலைவன் பற்றிய செய்தியைத் தலைவியின் தாயார் அறிவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கம்.
2. தலைவனது மலைவளம் பற்றிக் கேட்பதில் தலைவிக்குள்ள விருப்பம்.
3. தெய்வங்களை அழைத்துப் பாடும் கட்டுவிச்சியே (குறத்தியே)
வெண்மையான சங்கு மணிமாலை அணிந்து (நெடும்) நீண்ட கூந்தலைக் கொண்ட கட்டுவிச்சியே, நீ இப்பொழுது பாடிய பாட்டை மீண்டும் பாடுக. மீண்டும் மீண்டும் பாடுக. அவரது மலைவளத்தைக் குறித்துப் பாடிய பாட்டை மீண்டும் பாடுவாயாக.
4. 
   1. மனவு - சங்குமணி
   2. கோப்பு - மாலை
   3. குன்றம் - மலை
   4. முறம் - சுளகு
   5. அகவன் மகள் - குறத்தி கட்டுவிச்சி

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- படைப்புக்களை நயந்து விளக்குவார்.
- இலக்கிய இரசனைக்குரிய மனப்பாங்கை வளர்ப்பார்.
- படைப்பின் நோக்கத்தை விளக்குவார்.
- படைப்புக்களை நயந்து, கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

குறுந்தொகையில் இடம்பெறும் 'அகவன் மகளே' எனும் பாடலின் துணைக்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. அகவன் மகளே'.... எனும் பாடலின் பிரதான நோக்கம் யாது?
2. இப்பாடலினூடாக அறிந்துக் கொள்ளக் கூடிய விடயங்கள் யாவை?
3. இப்பாடல் தரும் பொருளை உமது நடையில் எழுதுக?
4. அருஞ்சொற்களுக்குப் பொருள் தருக.
    1. மனவு
    2. கோப்பு
    3. குன்றம்
    4. முறம்
    5. அகவன் மகள்

**தேர்ச்சி: 2.0** **இலக்கியங்களைக் கற்பதன் மூலம் விருத்தி செய்த மொழியாற்றலை வெளிப்படுத்துவார்.**

**தேர்ச்சி அலகு 2.3:** பாடப்பரப்பைக் கிரகித்து விடையளிப்பார்.

**செயற்பாடு:** ஔவையாரின் 'நாடா கொன்றோ' என்ற செய்யுளைப் படித்துக் கருத்துக்களை முன்வைப்போம்.

**நேரம்:** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**
- புறநானூற்றுப் பாடல் ( பாட நூல்)
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1
- எழுதுகருவி, எழுதுதாள்
- அகராதி

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 2.3.1**

பின்வரும் பாடலைக் கரும்பலகையில் காட்சிப்படுத்தி மாணவரொருவரைப் பாடச் செய்யுங்கள்.

**"நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை"**

பாடலொன்றைப் படிக்கும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் யாவை? என மாணவரிடம் வினவிக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- பாடலின் கருப்பொருள் / மையப் பொருள்
- பாடலின் பொருள்
- அணிச் சிறப்பு
- விழுமியக் கருத்து
- ஓசைச் சிறப்பு
- மொழியாட்சி

(10 நிமிடங்கள்)

**படி 2.3.2**

- பாடநூலிலுள்ள 'நாடா கொன்றோ.. காடா கொன்றோ' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலை மாணவர் தனித்தனியாக மௌனமாகப் படிக்கும்படி அறிவுறுத்துங்கள்.
- எழுமாற்றாக மாணவரை எழுப்பிப், பாடலை உரத்து வாசிக்கச் செய்யுங்கள். தேவையானவிடத்து நெறிப்படுத்துங்கள்.

- மாணவரை ஐந்து குழுக்களாக அமரச் செய்யுங்கள்.
- பின்னிணைப்பிலுள்ள ஒப்படையை மாணவர்களுக்கு வழங்கி, அறிக்கை தயாரிக்க வழிகாட்டுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 2.3.3.**

- குழுக்கள் அறிக்கையை முன்வைக்க வகைசெய்யுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க ஆலோசனை வழங்குங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

1. கருப்பொருள் : மக்கள் நல்லவர்களாக இருந்தால்தான் நாடும் நன்றாக இருக்கும்.
2. பாடலின் பொருள்: நிலமே! நீ வாழி, நீ நாடாக இருக்கட்டும் காடாக இருக்கட்டும் பள்ளமாக இருக்கட்டும் மேடாக இருக்கட்டும். எவ்விதமாக இருந்தாலும் நல்ல ஆண்மக்கள் வாழ்ந்தால் அங்கு நீயும் நல்லதாக இருப்பாய். உனக்கென ஒரு தனிப் பண்பில்லை.

   (பாழ்நிலமாக இருந்தாலும் நல்லவர் வாழ்ந்தால் நல்ல நிலமாகக் கணிக்கப்படும். நல்ல நிலமாக இருந்தாலும் தீயவர் வாழ்ந்தால் தீயநிலமாகக் கணிக்கப்படும். எனவே தன்னிடத்து வாழ்வோர் இயல்பே நிலத்திற்குரியது. நிலத்திற்கென தனி ஒரு இயல்பு இல்லை.

3. ஒரு நாட்டின் சிறப்பு அங்கு வாழும் மக்களிலேயே தங்கியுள்ளது என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.
4. நயம்:
   - நான்கு அடிகளில் காத்திரமான கருத்துக் கூறப்பட்டுள்ளது.
   - மக்கள் முயற்சியும் நல்லொழுக்கமும் உடையவர்களாக வாழவேண்டும் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
   - சிறிய சிறிய சொற்கள் கையாளப்பட்டுள்ளன.
   - வேற்றுமொழிச் சொற்கள் (வடமொழி), கையாளப்படவில்லை.
5. பாடலில் வந்துள்ள புதிய சொற்கள்:
   - அவல் - நல்லை
   - மிசை - ஆடவர்

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பாடலின் பொருளை எழுதுவார்.
- பாடலில் காட்டப்படும் கருத்தை எடுத்துரைப்பார்.
- பாடலின் சிறப்பை எழுதுவார்.
- பாடலில் வருகின்ற அருஞ்சொற்களை விளக்குவார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

ஔவையாரின் 'நாடா கொன்றோ' என்ற பாடலை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பாடலின் கருப்பொருள் யாது?
2. பாடலின் பொருளைத் தருக.
3. இப்பாடலில் பொதிந்துள்ள கருத்தை எழுதுக.
4. இப்பாடலில் காணப்படும் நயத்தைக் கூறுக.
5. பாடலில் வந்துள்ள புதிய சொற்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**தேர்ச்சி: 3.0** **பல்வேறுபட்ட படைப்புக்களை வாசிப்பதன் மூலமாக இலக்கியத் தரம் வாய்ந்த இலக்கியங்களைப் படைப்பார்.**

**தேர்ச்சி அலகு 3.1:** பல்வேறு வகைப்பட்ட படைப்புக்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.

**செயற்பாடு:** நாடக இலக்கியத்தை வாசித்து, நயந்து நடிப்போம்.

**நேரம்:** 160 நிமிடங்கள்

**தர உள்ளீடு:**
- 'மழைக்கை' என்ற பா நாடகப் பிரதிகள் ( பாட நூல்)
- எழுதுகருவி, எழுதுதாள்
- செயற்பாட்டுப் பத்திரம் - பின்னிணைப்பு 1

## கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள்

**படி 3.1.1**

- மாணவர்களிடம் மகாபாரதக் கதையைப் பற்றியும் அதில் இடம்பெறும் முதன்மையான பாத்திரங்கள் எவை என்பன பற்றியும் வினவி, அவர்கள் மூலமாகக் கிடைக்கும் தகவல்களைப், பாத்திரங்கள் பற்றிய செய்திகளைக் கரும்பலகையில் சுருக்கமாக எழுதி மேலும் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக விளக்கமளியுங்கள்.

- மகாபாரத அறிமுகம்
- அதில் இடம்பெறும் முக்கிய பாத்திரங்கள்
- கர்ணன் என்ற பாத்திரம் பற்றிய சுருக்கமான விளக்கம்.
- கர்ணன் பற்றி மாணவர் அறிந்த நாடகம் முதலியன. (திரைப்படம், கதைகள்)

(20 நிமிடங்கள்)

**படி 3.1.2**

- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். "மழைக்கை' என்ற பா நாடகத்தை ஒவ்வொரு குழுக்களுக்கும் வழங்கி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- வாசிக்கும்போது அவ்விலக்கியம் ஒரு பா நாடகம் என்பதை மாணவர் இனங்காணுமாறு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாத்திரத்தைத் தெரிந்து, தமக்குரிய பாத்திரத்தை ஏற்று வாசிக்கச் செய்யுங்கள்.
- பாத்திரத்திற்கேற்ற பண்பு, தொனியுடன் வாசிக்க வேண்டும் என அறிவுறுத்துங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம்- 1 ஐ குழுக்களுக்கு வழங்கி, குழுவாகக் கலந்துரையாடிச் செயற்படச் செய்யுங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 3.1.3

- ஒவ்வொரு குழுவாகப் பா நாடகத்தைப் பாத்திரமேற்று வாசிக்கச் செய்யுங்கள்.
- எல்லாக் குழுக்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வாசித்து முடித்த பின் நாடகம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- ஒவ்வொரு குழுவிலும் எழுமாற்றாக ஒருவரை எழுப்பிப், பூர்த்தி செய்த செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்கச் சொல்லுங்கள். ஏனையோர் தமது கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- நாடகத்தை விமர்சனம் செய்யவும் மதிப்பீடு செய்யவும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- o பா நாடகத்தின் பண்புகள்.
- o பாத்திரத்திற்கேற்ப வாசித்து நடித்தல்.
- o தொனி, நடிக்கும் பாங்கு, வெளிப்பாடு
- o நாடகத்தில் வரும் பாத்திரங்களின் குணப்பண்புகள். (பின்னிணைப்பு 2)
- o விழுமியங்கள் / படிப்பினைகள்.

(30 நிமிடங்கள்)

படி 3.1.4

- மாணவரை வகுப்பு நிலைக்கேற்ப குழுநிலைப்படுத்துங்கள்.
- பா நாடகத்தை உரைநடையாக வாசித்துப் (நடித்துப்) பார்க்கும் படி கூறுங்கள்.
- நாடகத்தை உரைநடையில் எழுத வழிப்படுத்துங்கள்.
- தத்தம் பகுதியை பாத்திரத்திற்கேற்ப நடித்துப் பயிற்சி பெற வழிப்படுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 3.1.5

- மாணவரை வகுப்பு நிலையில் அமரச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரையும் பாத்திரமேற்று நடிக்க வழிப்படுத்துங்கள்.
- நடிப்புப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- நாடகத்தின் பண்பு - பாத்திரங்களின் குணப்பண்பு - விழுமியங்கள்
- நடிப்புத்திறன் வெளிப்பாடு - நாடகம் கூறும் கருப்பொருள்
- பா நாடகம் நடிப்பதற்கும் உரைநடையில் அமைந்த நாடகம் நடிப்பதற்கும் உள்ள வேறுபாடு

(30 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- பாவில் அமைந்த நாடகத்தை உரைநடையில் எழுதுவார்.
- பாத்திரப் பண்புகளுக்கேற்ப நடிப்பார்.
- கருத்தூன்றி வாசிப்பதனூடாக வாசிப்புத் திறன் பெறுவார்.
- நாடகத்திலுள்ள விழுமியக் கருத்துக்களை எடுத்துக் காட்டுவார்.
- 'அறமே வெல்லும்' என்ற கருத்தை விளங்கிக் கொள்வார்.

## செயற்பாட்டுப் பத்திரம்

பின்வரும் வினாக்களுக்குத் தனித்தனியே விடையளியுங்கள்.

1. 'மழைக்கை' என்ற பதத்தின் பொருத்தப்பாட்டினை விளக்குங்கள்.
2. நாடகப் பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்கி எழுதுங்கள்.
3. ஒவ்வொரு பாத்திரத்தின் வாயிலாகவும் நீங்கள் பெறும் படிப்பினை என்ன?
4. இந்நாடகப் பாத்திரங்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்? கவர்ந்தமைக்கான காரணங்களைத் தருக.

## பின்னிணைப்பு 2

### பண்புகள்

**1. கன்னன்** : பிறரை மதிக்கும் பண்பு. வீட்டுக்கு வருவோரை வரவேற்றல், தாய் சகோதரர் மீது பற்றுடைமை.

செயல்கள் : தனக்கு வரும் ஆபத்துபற்றி நோக்காது, கேட்பதைக் கொடுத்தல் வேண்டும் என்ற கொள்கையில் தளராமல் எவ்வேளையிலும் கேட்பதைக் கொடுத்தல்.

உறவுநிலை : குந்தியின் மகன், பஞ்பாண்டவர்களுக்கு அண்ணன், துரியோதனனுக்கு உற்ற நண்பன்.

படிப்பினை : கொள்கையில் இருந்து மாறக் கூடாது. பாதுகாக்க வேண்டிய இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டும். எதிரி எனினும் நாடி வருவோரை வரவேற்று உபசரிக்க வேண்டும்.

தோற்றம் : மன்னனுக்குரிய கம்பீரமான தோற்றம், உடல் உறுதி போன்று மனவுறுதியும் காணப்படுதல்.

**2. கண்ணன்** : தான் செய்ய நினைத்ததை உரியவரைக் கொண்டு சுமுகமாக, தந்திரமாகச் செய்து முடித்தல், சரியாகத் திட்டமிடும் தன்மை. தன் நோக்கத்தை நிறைவேற்றலில் கவனம் செலுத்தல், எந்நிலையிலும் தளம்பாதிருத்தல்.

செயல்கள் : தன் காரியம் சாதிப்பதற்காகச் சந்திக்க வேண்டியவரை உரியவாறு சந்தித்தல்.

உறவுநிலை : குந்தியின் மருமகன் முறையானவர்.

படிப்பினை : சந்தர்ப்பம் அறிந்து காரியம் சாதித்தல், இரகசியம் பேணலின் அவசியம்.

தோற்றம் : மன்னனுக்குரிய கம்பீரமான தோற்றமும், தெய்வீகத் தோற்றமும் உடையவராதல்.

3 **குந்திதேவி** : தன பிள்ளைகள் மீது மிகுந்த பாசமுடையவர். பிள்ளைகள் யாவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதில் விருப்பு. இரகசியம் பேணல். மனவுறுதியுடைமை.

செயல்கள் : கண்ணனின் வழிப்படுத்தலின்படி செயற்பாட்டில் ஈடுபடல்.

உறவுநிலை : கன்னன், பஞ்சபாண்டவர் முதலியோரது தாய்.

தோற்றம் : வயோதிபத் தாய்க்குரிய தோற்றம்.

4 **இந்திரன்** : சந்தர்ப்பத்திற்கேற்ப செயற்படல்.

செயல்கள் : வேடம் தரித்தல், மகனுக்காகக் கன்னனிடம் செல்லல்.

உறவுநிலை : அர்ச்சுனனின் தந்தை

# பகுதி - III

# கணிப்பீடும் மதிப்பீடும்

# அறிமுகம்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர் களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்சசிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற் பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கற்றற்-கற்பித்தற் செயற்பாடுகளின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மரணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம் மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரசினங்களை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக பகுதி ii இல் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை, கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ப்பத்திரிகை (Wall Newspapers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடனடிச் சொற்பொழிவு (Impromptu Speeches)
- பாத்திரம் ஏற்று நடித்தல் (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபாடு கொள்வதற்கும் வழிசமைத்துள்ளன.

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

## இலக்கிய நயம் - தரம் 10

**கருவி : 01**

01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் : இரண்டாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் : 1.1, 1.4, 2.1, 4.1

03. கருவிக்குரிய பாடப் பகுதிகள் : இலக்கியங்கள், இலக்கிய ஆர்வலர்களுடன் கலந்துரையாடல், தலைப்புக்கேற்ற குறிப்புக்கள் எடுத்தல்.

04. கருவியின் தன்மை : பட்டிமன்றத்தில் பங்கேற்றுப் பேசுதல்.

05. கருவியின் நோக்கங்கள் :
- கட்புல, செவிப்புல சாதனங்களினூடாக இடம்பெறும் பட்டிமன்றம், அரட்டைஅரங்கு, விவாதம் போன்றவற்றை அவதானித்து கிரகிப்பார்.
- இலக்கியங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றின் ஊடாக தகவல்களைச் சேகரிப்பார்.
- பொருத்தமானவர்களுடன் கலந்துரையாடி தகவல்களைப் பெற்றுக் கொள்வார்.
- சபைக்கும், நோக்கத்திற்கும் ஏற்றவாறு பட்டிமன்றத்தில் விவாதிக்கும் ஆற்றலைப் பெறுவார்

06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :

ஆசிரியருக்கு :
- இக்கருவி பற்றியும் நடைபெறும் தினம் பற்றியும் ஒருமாத காலத்திற்கு முன்பே மாணவருக்கு அறிவியுங்கள்.
- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தலைப்பு வழங்குங்கள்.
- தலைப்புக்கேற்ப ஒரு குழுவில் மூவர் மூவராக வாதிடுவதற்கு வழிகாட்டுங்கள்.
- இலக்கியக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட தலைப்புகளை வழங்குங்கள்.
- போட்டித் தினத்தன்று ஒவ்வொரு குழுவினரையும் பட்டிமன்றத்தில் விவாதிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

**மாணவர்களுக்கு** :

- வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் ஊடாக இடம்பெறும் பட்டிமன்றங்களை நன்றாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்ட தலைப்புக்கேற்பப் பேசுவதற்குத் தகவல்களைச் சேகரியுங்கள்.
- வாசிப்பின் மூலமும் பெரியோர்களிடம் உரையாடுவதன் மூலமும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- போட்டியின் போது குழு ஒருமைப்பாட்டுடன் பேசுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :

- பட்டிமன்றத்தில் பேசும் ஆற்றலைப் பெறுவார்.
- குழு ஒருமைப்பாட்டுடன் இயங்குவார்.
- செம்மையான மொழியைப் பிரயோகிப்பார்.
- பொருட் பொருத்தத்தோடு பேசுவார்
- பிறர் கூறுவதைக் கிரகித்துக் கருத்துக்களைக் கூறும் ஆற்றலைப் பெறுவார்.

**நேரம்** :

- தலைவர் - ஐந்து நிமிடம்
- ஏனையோர் - மூன்று நிமிடம்
- தொகுப்புரை - இரண்டு நிமிடம்

## கருவி : 02

| | | |
|---|---|---|
| 01 | கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் | : முதலாம் தவணை |
| 02. | உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் | : 1.1, 2.1, 3.1, 3.2, 4.1, 4.2 |
| 03. | கருவிக்குரிய பாடப் பகுதிகள் | : கட்டுரைகள், சினிமாப் பாடல்கள் இலக்கியக் கட்டுரைகள் |
| 04. | கருவியின் தன்மை | : சினிமாப் பாடல்களை மையமாக வைத்து ஆய்வுக் கட்டுரை எழுதுதல். (திரையிசைப் பாடல்கள் காட்டும் மனித விழுமியங்கள்) |
| 05. | கருவியின் நோக்கங்கள் | : • பல்வேறு கட்டுரைகள், இலக்கியங்களை வாசிப்பார்.<br>• திரையிசைப் பாடல்களை அதன் பொருள் அறிந்து இரசிப்பார்.<br>• திரையிசைப் பாடல்களின் ஊடாக வெளிப்படும் விழுமியக் கருத்துக்களை அறிந்து கூறுவார்.<br>• சினிமாப் பாடல்கள், இலக்கியங்களை தொடர்புபடுத்தி ஆய்வுக் கட்டுரை எழுதுவார். |

06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் :

ஆசிரியருக்கு :

- இக்கருவி பற்றியும் முன்வைக்கும் திகதி பற்றியும் மாணவருக்கு அறிவியுங்கள்.
- மாணவர்களுக்கு இருவாரங்கள் கால அவகாசம் வழங்குங்கள்.
- தனித்தனியே மாணவர்கள் தகவல்களைச் சேகரிக்க வழிகாட்டுங்கள்.
- கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் என்பவற்றில் வாசித்துக் குறிப்பெடுக்கச் செய்யுங்கள்.
- திரையிசைப் பாடல்களின் பொருள், பாடல் வரிகள் போன்றவற்றை கவனிப்பதற்கு வழிகாட்டுங்கள்..
- சேகரித்த தகவல்களை ஒன்றுபடுத்தி உதாரணங்களுடன் ஆய்வுக் கட்டுரையை எழுதி முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

**மாணவர்களுக்கு** :

- மனித விழுமியங்கள் சம்பந்தமான கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் போன்றவற்றை வாசித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.
- திரையிசைப் பாடல்களைக் கேட்டு / வாசித்து தகவல்கள் சேகரியுங்கள்.
- சேகரித்தத் தகவல்களை வைத்து ஆய்வுக் கட்டுரையை எழுதி, முன்வையுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :

- பொருள் பொருத்தத்தோடு எழுதுவார்.
- விடய ஒழுங்கமைப்போடு எழுதுவார்.
- செம்மையான மொழியைப் பயன்படுத்துவார்.
- தரம் வாய்ந்த பாடல்களை விளங்கி எழுதுவார்
- தகவல்களைத் திரட்டி ஆய்வுக் கட்டுரை எழுதுவார்

## கருவி : 03

**01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம்** : மூன்றாம் தவணை

**02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள்** : 1.3, 1.4, 2.1, 3.2

**03. கருவிக்குரிய பாடப் பகுதிகள்** : தெரிவு செய்யப்பட்ட இலக்கியப் பகுதி கவிதைகள், கதைகள், பாடல்கள்

**04. கருவியின் தன்மை** :
- ஒப்படை தயாரித்தல்
- நாடகப் பிரதியாக்கம்
- சிறுகதை எழுதுதல்
- கவிதை எழுதுதல்
- விமரசனம் எழுதுதல்

**05. கருவியின் நோக்கங்கள்** :
- தரப்பட்ட பாடப் பகுதிகளை விளங்கி கருத்துக்களை எடுத்துரைப்பார்.
- சிறந்த மொழியாற்றலைப் பிரயோகிப்பார்.
- விமர்சன நோக்குடன் படைப்புக்கள் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்
- நாடகப் பிரதியாக்கம் செய்வார்.
- சிறுகதை எழுதுவார்.
- கவிதை ஆக்குவார்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு** :
- இக்கருவி பற்றியும் முன்வைக்கும் திகதி பற்றியும் மாணவருக்கு அறிவியுங்கள்.
- மாணவர்களுக்கு ஒருவாரகால அவகாசம் வழங்குங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- இலக்கியங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை அல்லது பாடப் புத்தகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

  உ-ம் : பாரதியார் -பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு
  அரிச்சந்திரன் கதை, தமயந்தி கதை
  சிலப்பதிகாரப் பகுதிகள்

- வழங்கப்பட்ட பகுதியினை மாணவர்கள் வாசித்துக் கிரகிக்க வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவினரையும் வழங்கப்பட்ட பகுதிக்கு ஏற்றவாறு ஒவ்வொரு ஆக்கம் ஆக்குவதற்கு வழிப்படுத்துங்கள்.
- சகல குழுவினராலும் முன்வைக்கப்பட்ட ஆக்கங்களைத் தொகுத்து சிறு நூலாக்க வழிகாட்டுங்கள்.

**மாணவர்களுக்கு** :

- ஆசிரியரால் வழங்கப்பட்ட பகுதியினை நன்றாக வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்ட தலைப்புக்கேற்ப வழங்கப்பட்ட பகுதியினைக் கிரகித்து ஆக்கத்தைச் செய்யுங்கள்
- குழு ஒருமைப்பாட்டுடன் இயங்குங்கள். நிறைவு செய்த ஆக்கத்தை முன்வையுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :

- விடயப் பொருத்தமாக எழுதுவார்.
- செம்மையான மொழிநடையில் எழுதுவார்.
- தாம் கற்ற இலக்கியங்களை மனதிற் கொண்டு கருத்துக்களை வெளியிடுவார்.
- பொருளை ஒழுங்கு முறையில் எழுதுவார்

## கருவி : 04

| | |
|---|---|
| 01 கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் | : முதலாம் தவணை இறுதி |
| 02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டங்கள் | : 3.2, 1.1 |
| 03. கருவிக்குரிய பாடப் பகுதிகள் | : பத்திரிகைகள், சஞ்சிகைகள், கவிதைத் தொகுப்புகள், படங்கள், சித்திரங்கள் |
| 04. கருவியின் தன்மை | : கவிதை எழுதுதல் |

**05. கருவியின் நோக்கங்கள் :**

- கவிதைகளைப் படிப்பார்.
- இரசித்த கவிதைகளுக்கு கற்பனையில் வடிவம் கொடுப்பார்.
- இலக்கியக் காட்சிகள், இயற்கைக் காட்சிகளை சித்திரிக்கும் படங்களைச் சேகரிப்பார்.
- காட்சிகளுக்குப் பொருத்தமாகக் கவிதை புனைவார்.
- கவிதையை இரசித்துப் படிப்பார்.

**06. கருவியைச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள்**

**ஆசிரியருக்கு :**

- இக்கருவி பற்றியும் கருவியின் நோக்கம் பற்றியும் இருவாரங்களுக்கு முன்னர் மாணவருக்கு அறிவியுங்கள்.
- கவிதை நூல்களைத் தேடிப் பெற்று படிப்பதற்கு உதவி செய்யுங்கள்.
- இலக்கியக் காட்சிகள், இயற்கைக் காட்சிகளைச் சித்திரிக்கும் படங்களைச் சேகரித்துக் கொண்டுவருமாறு கூறுங்கள்.
- காட்சியொன்றைப் பார்த்து கவிதை புனைவதற்கு வழிப்படுத்துங்கள்.
- கவிதையை நயத்துடன் படிப்பதற்கு வழிப்படுத்துங்கள் .
- மாணவர்கள் சேகரித்த காட்சிப்படங்கள் மாற்றி மாற்றி கொடுக்கப்படும் எனவும், அதனைப் பார்த்துக் கவிதை எழுத வேண்டும் எனவும் கூறுங்கள்.
- காட்சியைப் பார்த்து கவிதை எழுதுவதற்காக முன்னாயத்தம் செய்ய அரைமணி நேரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவியுங்கள்.

**மாணவர்களுக்கு** :

- கவிதைகள், கவிதைத் தொகுப்புகள் போன்றவற்றை தேடிப் பெற்று வாசியுங்கள்.
- இலக்கியக் காட்சிகள், இயற்கைக் காட்சிகளை சித்திரிக்கும் படங்களை, சித்திரங்களை, ஒளிப்படங்களை சேகரியுங்கள்.
- காட்சியைப் பார்த்து கவிதைகளை எழுதிப் பழகுங்கள்.
- எழுதிய கவிதைகளை பிறரைக் கவரும் வகையில் வாசியுங்கள்.

**07. மதிப்பீட்டு நியதிகள்** :

- இலக்கியம், இயற்கையைச் சித்திரிக்கும் படங்கள், சித்திரங்கள், ஒளிப்படங்களைச் சேகரிப்பார்.
- காட்சிக்குப் பொருத்தமான கவிதைகளை எழுதுவார்.
- கவிதைகளை நயத்துடன் படிப்பார்.

දෙමළ සාහිත්‍යය රසාස්වාදය (T) - 10 ශ්‍රේණිය
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010/T/10/TIM/4250